# அழிந்தும் அழிய மறுக்கும் யாழ்ப்பாணம்

**பன்முகவெளி 2**
**(கார்த்திகை 20/21, 2010 ரொறன்ரோ, கனடா)**
**நிகழ்வில் வாசிக்கப்பட்ட உரை**



பெருமதிப்புக்குரிய பெரியோர்களுக்கும், பேரன்புக்குரிய நண்பர்களுக்கும், நீதியின் மேல் பசிதாகமுள்ள ஆர்வலர்களுக்கும் தன்னடக்கத்துடன் கூடிய பணிவான வணக்கங்கள்.

மேடைப்பேச்சு என்பது எனக்குப் பரிச்சயமில்லாத ஒன்று. சிறுவயதில் பேச்சுப்போட்டிகளில் மனனம் செய்து ஒப்புவித்ததைத் தவிர மேடைப் பேச்சு எதிலும் நான் கலந்து கொண்டதில்லை. மேடைப் பேச்சுக்குரிய சிம்மக் குரலும் எனக்கு இல்லை என்பது என் அனுமானம்.

உணர்வுகளைக் கிளப்பி, மெய் சிலிர்க்க வைத்து உசுப்பேத்திய உணர்ச்சி கொப்பளித்த மேடைப்பேச்சுக்கள் தான் இன்றைக்கு எங்களை இந்த நிலைக்கு கொண்டு வந்து விட்டுப் போயிருக்கிறது. இதெல்லாம் தங்கள் மயிர்க் கூச்செறிய வைக்கும் பேச்சுக்களால் எங்களை தடுத்தாட் கொண்ட இந்த அடலேறுகள், தானைத் தளபதிகள், சொல்லின் செல்வர்களின் கைங்கரியம். கரகோசங்களுக்கும் மாலைகளுக்கும் இரத்தத் திலகங்களுக்குமாக நிகழ்த்தப்பட்ட விடுதலைப் பேச்சுக்களும், விசிலடிகளுக்கான வக்கிர நகைச்சுவையுடனான மாவீரர் தின உரைப் பொழிப்புகளும் என பகுத்தறிவை மறக்க வைத்த பேச்சுக்களை நம்பப் போய் கடைசியில் தன்னுடைய கருத்துக்களை ஒரு முழுமையான வசனமாகவேனும் ஒப்புவிக்க முடியாத ஒரு மனிதனின் துப்பாக்கி முனையில் எங்கள் பேச்சுரிமையை இழந்து வாய் மூடி மௌனமாக இருக்க வேண்டிய கட்டாயத்தில் இருந்தோம். இந்த பேச்சுகளால் உந்தப்பட்டு பின்னால் போனதன் விளைபயனை முழுத்தமிழினமும் இன்று அனுபவித்து அதற்கான விலையைச் கொண்டிருக்கிறது.

நண்பர்களின் வற்புறுத்தலைத் தட்ட முடியாததால் மேடையேறச் சம்மதித்திருந்தேன். பேசவேண்டும் என்ற வேண்டுகோளாக இல்லாமல், பேசுகிறீர்கள் என்று உரிமையோடு சொல்லியிருந்தார்கள். எதைப் பேச வேண்டும் என்ற நிபந்தனையும் இன்றி, எவ்வளவு நேரம் பேச வேண்டும் என்ற எல்லையும் இன்றி அழைத்ததால், தோழர் காஸ்ட்ரோவின் மே தின உரை போன்ற நீண்ட உரையொன்றுடன் வந்திருக்கிறேன். இது நிச்சயமாக உணர்ச்சியூட்டி 'புலன் பெயர் தமிழா புறப்படு' என்று போருக்கும் அழைக்கும் உரையாக இருக்காது. வழமையான உரை என்பதை விட, ஒரு கலந்துரையாடலில் தெரிவிக்கும் கருத்துப் போன்ற அமைப்பில் இந்த உரையைத் தொடங்கலாம் என்று நினைக்கிறேன்.

**ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்**

கருத்துக்கள் பற்றி யாழ்ப்பாணம் கொண்டிருந்த மனப்பாங்கு பற்றிக் கூற வேண்டும். ஊரோடு ஒத்தோடுகின்ற எவருக்கும் எங்கள் சமூகத்தில் எந்தப் பிரச்சனையும் இருந்ததில்லை. கும்பலோடு கோவிந்தா போடுவது உயிரைக் காப்பதற்கான ஒரே வழி என்பது பின்னாளில் எல்லோருக்குமே தெரிந்திருந்தது. மாற்றுக் கருத்துக்கள் என்றால் யாழ்ப்பாணத்திற்கு ஒவ்வாத

விடயம்... அலர்ஜி என்று சொல்லலாம்.

கூட்டங்களில் பின்னால் நின்று கேள்வி கேட்கும் போது, 'பேசாமல் ஐயா சொல்றதைக் கேளடா' என்று அதட்டுவதற்கு அடியாட்கள் எப்போதும் நிறைய உண்டு. மேடையில் நின்று கருத்துச் சொன்னால், 'பேசாமல் கீழ இறங்கடா' என்று பணிவோடு வேண்டுவதற்கும் ஆட்கள் உண்டு. ஆனால் ஒருபோதும், 'அவனைக் கதைக்கவிடு, அவன் என்ன சொல்றான் எண்டதையும் கேட்பம்' என்று கேட்பதற்கு எந்தப் பொதுமகனும் துணிந்ததைக் காண முடியவில்லை. ஒன்றில் கும்பலோடு கும்பலாக தர்ம அடி விழும் என்ற பயமாக இருக்கலாம். 'சும்மா ஊரோட ஒத்தோடாமல், உவனுக்கு ஏன் தேவையில்லாத வேலை? பிழைக்கத் தெரியாதவன் என்ற தீர்ப்பளிப்பாக இருக்கலாம். அல்லது ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பது போல, சண்டை பார்ப்பதற்கும் வேடிக்கை பார்ப்பதற்கும் ஆர்வமாகவும் கூட இருந்திருக்கலாம்.

யாழ்ப்பாணத்தவர்கள் மாற்றுக்கருத்துக்களை எதிர் கொள்வதில் உள்ள நடைமுறைகள் பற்றி ஒரு ஆய்வுக் கட்டுரையே எழுதலாம். யாழ்ப்பாணத்தவர்கள் மாற்றுக் கருத்துக்களுக்கு கொடுக்கும் மரியாதை பலருக்கும் தெரிந்திருக்கும். சீதனம் வாங்கக் கூடாது என்று ஒருவர் சொன்னால், சமூக மாற்றத்தை ஏற்படுத்த துணிந்த ஒருவனின் முயற்சியைப் பாராட்டாமல், 'உவருக்கு ஏதும் குறையிருக்குது போல' என்று வக்கிரப்படுத்தும் பாரம்பரியம் எங்களுடையது.

மேதகு தேசியத் தலைவரின் நல்லாட்சியில் அவரது ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசங்களில் மாற்றுக்கருத்துக்கு மண்டையில் போடுவது தான் தீர்ப்பாக இருந்தது. இந்தப் பாரம்பரியம் புலன் பெயர்ந்த நாடுகளுக்கும் பரவி, தாயகம் தடை, தேடகம் எரிப்பு, செந்தாமரை ஆசிரியர் தாக்குதல் என்று போய் சபாலிங்கம் கொலையில் முடிந்தது.

'வெளியில வாடா, பாப்பம்' என்றும், 'ஊருக்கு வா, கவனிக்கிறம்' என்று பணிவன்புடன் வேண்டுகிற காடையர் கூட்டம் இங்கே மலிவானது. இப்போது வெளியில வாடா என்றவர்களின் தலைக்கறுப்பை வெளியில் காண முடியவில்லை. ஊருக்கு வந்தால் கவனிப்பதற்கும் ஊரிலும் யாரும் இல்லாமல் போய் விட்டார்கள்.

கருத்துக்களை கருத்துக்களால் எதிர்கொள்வது என்பது யாழ்ப்பாணச் சிந்தனையில் இருப்பதேயில்லை.

இன்றைய உரையிலும் மாற்றுக்கருத்துக்கள் நிறைய இருக்கும். அது சம்பந்தமான கேள்விகளும் எதிர்க்கருத்துக்களும் எழும். இந்தக் கருத்துக்களையும் கேள்விகளையும் நான் வாசித்து முடியும் வரை பொறுமையாக வைத்திருந்தால், முடிந்த பின்னால் பதிலளிக்க முடியும்.



**தன்னுடைய கருத்துக்களை ஒரு முழுமையான வசனமாகவேனும் ஒப்புவிக்க முடியாத ஒரு மனிதனின் துப்பாக்கி முனையில் எங்கள் பேச்சுரிமையை இழந்து வாய் மூடி மௌனமாக இருக்க வேண்டிய கட்டாயத்தில் இருந்தோம்.**

# அழிந்தும் அழிய மறுக்கும் யாழ்ப்பாணம்!

**புலன் பெயர்ந்த நாடுகளில் அரசியல் ஆய்வாளர்கள் மலிந்திருப்பது போல, எங்களுக்கு ஊரில் நிறைய குஞ்சப்புமார் இருந்தார்கள். நெருக்கமான உறவினர்கள் மட்டுமன்றி, எங்கள் தந்தைமார், பேரன்மாரின் வயதில் இருந்த பெரியோர்கள் எல்லாம் மரியாதை கருதி குஞ்சப்பு என்றே அழைக்கப்பட்டார்கள். எங்கள் அண்ணன்மார் வயதில் இருந்த இளவட்டங்கள் ஸ்டைலாக குஞ்சி என்று அழைத்துக் கொள்வதுடன், பீடி, வாய்க்குப் போடும் புகையிலை கொடுக்கல் வாங்கல்களிலும் ஈடுபட்டிருப்பார்கள்.**

வீட்டிலிருந்து புறப்பட்டால், வழியில் கண்ணில் படுகின்ற குஞ்சப்புகளுடன் பரஸ்பர குசலம் விசாரிப்பது என்பது ஒரு சம்பிரதாயமாகவே இருந்தது. இவர்கள் சிறுதோட்டக் காரர்களாகவும் தோட்டவேலைக் கூலித தொழிலாளராகவும் முட்டாள்வேலை, அதாவது மேசன் மாருக்கு உதவியாளர்களாகவும் வேலை செய்து கொண்டிருந்தார்கள். கல்வியறிவின்மை, வறுமை... இத்தோடு குடிப்பழக்கம்... இதனால் பொருளாதார ரீதியில் வளம் பெற முடியாமல் ஒரு சுற்றுவட்டத் திற்குள்ளேயே இவர்களின் வாழ்க்கை ஓடிக் கொண்டிருந்தது.

மாலையானதும் பெரும்பாலும் வெறியில் இருப்பார்கள். அடிக்கடி பக்கத்து வீட்டுக்காரரோடு சண்டைகள் நடக்கும். இல்லாவிட்டால்



மனைவிமாருக்குப் போட்டு அடிப்பார்கள். வளர்ந்த பிள்ளைகள் இருந்தால் விசயம் தெரியாமல் கை வைக்கப் போய் மகன் மாரிடமும் வாங்கிக் கட்டுவார்கள்.

இவர்களைப் பற்றியெல்லாம் ஊரில் பல்வேறு நகைச்சுவைக் கதைகள் இருக்கும். இன்று கூட, எங்கள் ஊர்க்காரர்கள் சந்தித்துக் கொண்டால் இந்தக் கதைகளை சொல்லிச் சிரித்துக் கொண்டிருக்கும் அளவுக்கு புகழ் பெற்ற கதைகள் அவை.

ஒரு குஞ்சப்பு ஒருநாள் தோட்டத்துக்குள்ளால் போன ஒரு பெண்ணைப் பார்த்து, 'ஏரிக்கரை மேலே போறவளே, பெண்மயிலே, என்னருமைக் காதலியே, நில்லு கொஞ்சம் நானும் வாறேன்' என்று பாடியிருக்கிறார். தமிழ்ப்படத்துக் கிராமத்தில் வரும் கதாநாயகியாக இருந்தால், பதிலுக்கு 'புதுப் பெண்ணின் மனதைத் தொட்டுப் போறவரே, உங்க எண்ணத்தைச் சொல்லி விட்டுப் போங்க' என்று பாடியிருப்பார். இது நம்ம ஊர். பெண் போய் தந்தையிடம் முறையிட்டிருக்கிறார். தந்தையும் தமிழ்ப் படத்து அப்பா மாதிரி அரிவாளைத் தூக்காமல், போய் விதானையாரிடம் முறையிட்டிருக்கிறார். விதானையார் பொலிசாரிடம் முறையிட்டு, வழக்குப் பதிவாகி விட்டது.

புலிகளின் நீதிமன்றம் அப்போது இருக்கவில்லை. இருந்திருந்தால் தீர்ப்பு குஞ்சப்பு எந்தப் பக்கம் என்பதைப் பொறுத்திருந்திருக்கும். எங்கள் ஊருக்கு அப்போது மின்சாரம் வராததால் மின்கம்பத் தண்டனை ஊருக்குள் இருந்திருக்காது. சந்தைக்குப் போகும்போது சுன்னாகத்திலோ, அல்லது தின்னவேலியிலோ அடையாளம் தெரியாமல் சமூக விரோதியாகியிருப்பார். அல்லது பெண்ணின் தந்தை பச்சை மட்டை அடி வாங்கியிருப்பார். நல்ல காலம்.

குஞ்சப்பு குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருக்கிறார். 'குற்றம் என்ன செய்தேன், கொற்றவனே, குற்றம் என்ன செய்தேன்?' என்ற பாணியில்.

அரச சட்டத்தரணி கேட்கிறார்...

நீ அந்தப் பெண்ணைப் பார்த்துப் பாட்டுப் பாடியது உண்மையா?

ஓம் ஐயா!

எப்பிடிப் பாடினாய்?

குஞ்சப்பு ஏதோ அரசவையில் அம்பிகாபதி என்ற நினைப்பில் நீதிமன்றத்தில் பாடத் தொடங்கினார்..

ஏரிக்கரை மேலே என்று...

இதுவரையும் பேசாமல் பார்த்துக் கொண்டிருந்த நீதிபதி கையைக் காட்டி நிறுத்தி விட்டுச் சொன்னார்.



*25 ரூபா குடுத்திட்டுப் போ!*

பாட்டுப் பாடிப் பரிசில் பெறும் புலவர்கள் இருக்கிறார்கள்.. பிழை கண்டுபிடித்தே பெயர் வாங்கும் புலவர்களும் இருக்கிறார்கள். எங்கள் குஞ்சப்பு மட்டும் தான் பாட்டுப் பாடி அபராதம் கட்டியவர்.

இதைப் போல இன்னொரு குஞ்சப்பு இருந்தார். இவர் ஒருநாள் மாலை, ஆட்டுக்கு குழை பிடுங்க மரத்தில் ஏறியிருக்கிறார். மாலை நேரம் என்றாலேயே, குஞ்சப்பு மரண வெறியில் நிற்பவர். றோட்டால் நடந்து போகும் போது கூட, கிடுகுவேலியைப் பிடித்துக் கொண்டு கிழுவ மரத்தோடு வாகு வாதப் பட்டுக் கொண்டிருப்பவர். மரத்தில் ஏறியிருக்கிறார். 'ஏறாதே ஏறாதே என் கணவா' என்ற மனைவியின் எச்சரிக்கையையும் பொருட் படுத்தாமல், தனக்கு எல்லாம் தெரிந்த மாதிரி மனைவிக்கும் தூசணத்தால் பேச்சுக் கொடுத்து குஞ்சப்பு மரத்தில் ஏறியிருக்கிறார்.

பிறகென்ன? குழந்தைப் பிள்ளைக்கும் தெரிந்த மாதிரி, குஞ்சப்பு மரத்திலிருந்து விழுந்து விட்டார். 'இந்த குறுக்கால போனவனால மனிசர் நிம்மதியா இருக்கேலாது' என்று மனைவி அலறிப் புடைத்துக் கொண்டு ஓடி வருகிறார். அருகில் பொதுக்கிணற்றடியில் குளித்துக் கொண்டிருந்தவர்கள் ஓடி வருகிறார்கள். கூக்குரல் கேட்டு நீண்ட தூரங்களில் இருந்தும் ஓடி வருகிறார்கள். ஊரே திரண்டு வந்தது என்பது போல.

நல்ல காலம். தென்னை மரம் என்றால், நேரடியாக வந்து விழுந்து குஞ்சப்பு முடிந்திருப்பார். அல்லது முள்ளந்தண்டு, கை, கால் முறிந்திருக்கும். இது கொப்புள்ள மரம். நேரடியாக விழாமல், கொப்புகளில் எல்லாம் அடிபட்டு உள்காயங்களோடு கீழே விழுந்து கிடக்கிறார். சுற்றி வர நிற்பவர்கள் பெரிய ஆஸ்பத்திரிக்கு கொண்டு போவதா? இல்லை, புக்கை கட்ட ஒட்டகப்புலத்துக்கு கொண்டு போவதா? என்று ஓடுப்பட்டுப் கொண்டிருக்கிறார்கள். பேச்சுமூச்சில்லாமல் கிடந்த குஞ்சப்பு கண்ணைத் திறந்து பார்க்கிறார்.

அடிபட்டு நொந்து எழும்ப முடியாமல் கிடப்பது குஞ்சப்புவிற்கு பிரச்சனை இல்லை. அவருடைய பிரச்சனை கௌரவப் பிரச்சனை. தன்னுடைய பிழையை, குடிவெறியில் மரத்தில் ஏறிய தன்னுடைய மடத்தனத்தை ஏற்றுக் கொள்ள முடியாத கௌரவப் பிரச்சனை. மற்றவர்கள் தன்னைப் பற்றி என்ன நினைப்பார்களோ என்ற பிரச்சனை. பெரிசுகள் எல்லாம் 'என்ன மட வேலை பாத்தனீ?' என்று தன் முட்டாள்தனத்தை திட்டும் என்ற வெட்கம்.

இந்த அவமானத்தை மூடி மறைத்து, விலாசம் காட்டும் முயற்சியில்...கண்ணைத் திறந்து குஞ்சப்பு சொன்னார்....

விளையாட்டுத் தெரிஞ்சபடியால் தப்பியிட்டன்!

குஞ்சப்பு விளையாட்டு என்று சொன்னது, சீனடி, சிலம்படி, கம்பு விளையாட்டுக்கள். குஞ்சப்புவிற்கு அப்படி ஒரு விளையாட்டும் தெரியாது. தன்னுடைய பிழையை மறைக்க, எடுத்து விட்டு கயிறு அது. பின்னால் நாலைந்து மாதமாய் குஞ்சப்பு நெஞ்சில் புக்கை கட்டியபடி அலைந்தார்.

**இலங்கை அரசியலில் தமிழர்கள் தலைநிமிர்ந்து தங்கள் உரிமைகளைக் கேட்க முடியாதபடிக்கு புலிகள் நட்டாற்றில் கொண்டு வந்து தலை குனிய விட்டுப் போயிருக்கிறார்கள்.**

நண்பர்களே,

முப்பது வருடங்களாக மோகமும் மையலும் கொண்டு துரத்தி வந்த ஈழம் என்ற மாயமான், முள்ளி வாய்க்காலில் மண்டை பிளந்து, கண்ணைத் திறந்து பார்த்தபடியே கிடக்கிறது. பல்லாயிரக்கணக்கானவர்கள் பலி கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அதை விட அதிகமானவர்கள் அவயவங்களை இழந்து போயிருக்கிறார்கள். லட்சணக் கானவர்கள் சொந்த வீடுவாசல்களை விட்டு இடம் பெயர்ந்து அகதிகளாக்கப் பட்டிருக்கிறார்கள். கோடிக் கணக்கான சொத்துக்கள் நிர்மூலமாக்கப்பட்டு, பொருளா தாரம் இன்று சிதைக்கப் பட்டிருக்கிறது. மரணம் இல்லாத வீட்டில் கடுகு வாங்கிக் கொண்டு வரச் சொன்ன புத்தர் கதை போல இலங்கையில் வாழுகின்ற ஒவ்வொரு தமிழனும் ஏதோ ஒரு வகையில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருக்கிறான். பொருளாதார ரீதியாகவோ, உறவுகளை இழந்தோ...

இதை விட முக்கியமாக, இலங்கை அரசியலில் தமிழர்கள் தலைநிமிர்ந்து தங்கள் உரிமைகளைக் கேட்க முடியாதபடிக்கு புலிகள் நட்டாற்றில் கொண்டு வந்து தலை குனிய விட்டுப் போயிருக்கிறார்கள். அடுத்த நாற்பது வருடங்களுக்கு தமிழர் அரசியல், யூதர்கள் நாற்பது வருட காலம் வனாந்தரத்தில் அலைந்து திரிந்தது போல, திக்குத்திசை தெரியாமல் போக்கிடம் தெரியாமல் எதிர்காலம் சூனியமாகிய அரசியல் கருந்துளைக்குள் சிக்கிக் கொண்டிருக்கிறது.

ஆனால், உண்மை நிலையையும் எங்கள் தவறுகளையும் ஏற்றுக் கொள்ள மறுத்து, வரட்டுக் கௌரவப் பிரச்சனையாக.... குஞ்சப்பு போல... விளையாட்டுத் தெரிஞ்சபடியால் தப்பியிட்டம் என்று எங்களை நாங்களே ஏமாற்றிக் கொண்டிருக்கிறோம்.

நண்பர்களே,

உலகில் இன்று அடிக்கடி பல்வேறு அழிவுகள் நடைபெறுகின்றன. இயற்கை அழிவுகள்... புயல், பூகம்பம், வெள்ளம், ஆழிப்பேரலை. மனிதர்களால் ஏற்படுத்தப்படும் அழிவுகள்... யுத்தம், தொழில் விபத்துக்கள், சுற்றாடல் அழிவுகள். லட்சக்கணக்கான மக்கள் கண்ணை மூடித் திறக்கும் குறுகிய கால எல்லைக்குள் கொல்லப் படுகிறார்கள். கோடிக்கணக்கான சொத்துக்கள் அழிகின்றன. லட்சக்கணக்கானோர்கள் அகதிகளாக்கப்பட்டு, நிர்க்கதிக் குள்ளாகிறார்கள்.

ஆனால் ஒவ்வொரு முறையும் பாதிக்கப்பட்ட மக்கள் பற்றி கருத்துத் தெரிவிக்கும் அந்தந்த இனத்தைச் சேர்ந்த படித்தவர்கள் ஒரு வார்த்தையைப் பாவிப்பார்கள்.

*We are resilient people.*

நாங்கள் இந்த அழிவிலிருந்து மீண்டும் எழுவோம். அழிந்தும் அழிய மறுக்கும் தங்கள் மன உறுதியை வெளிப்படுத்துகின்ற வார்த்தை அது.

இந்த வாரம் பர்மாவில் சிறை வைக்கப்பட்டிருந்த ஆங் சான் சூகியி விடுவிக்கப்பட்டது பற்றி ரொறன்ரோ ஸ்டாரில் வந்த செய்திக் கட்டுரையில் குறிப்பிடுகிறார்கள்... *a resilient leader.*

சிறையில் இருந்தாலும் தன் மன உறுதியைத் தளர விடாமல் உற்சாகமாக இராணுவ அரசுக்கு எதிராக செயற்படுகின்ற தலைவர்.

**‘அதெல்லாம் எங்களுக்குத் தெரியாது. எல்லாரும் வாங்கிறதை வாங்கினால் பிரச்சனையில்லை. எல்லாருக்கும் நடக்கிறது தானே எங்களுக்கும் நடக்கும்.’**
**ஊரோடு ஒத்தோடு. வாழ்க்கையில் எந்தப் பிரச்சனையுமே வராது.**

எங்களுடைய ஆய்வாளர்களும் எழுதுகிறார்கள். பீனிக்ஸ் போல மீண்டும் உயிர்ப்போம். இந்த ஆய்வாளர்களுக்கு பீனிக்ஸ் என்பது ஒரு கற்பனைப் பறவை என்பது தெரியுமோ தெரியாது.

அழிந்தும் அழிய மறுக்கும் யாழ்ப்பாணம் என, நாங்களும் அழிய மாட்டோம் என்றுதானே இவர்கள் சொல்வதாக சிலர் வக்காலத்து வாங்கக் கூடும்.

அழிவினால் மனம் சோர்ந்து விடாமல், தன்னம்பிக்கையைக் கொடுப்பதற்காக பயன்படுத் தப்படும் *resilience* என்ற பதத்திற்கும், மேதாவித்தனத்தைக் காட்டி பேய்க்காட்டுகின்ற பீனிக்ஸ் என்ற பதத்திற்கும் நிறைய வித்தியாசம் உண்டு.

முதலாவது அவர்கள் எல்லாம் நாங்கள் இயற்கையிடமோ, இந்தக் காரணிகளிடமோ தோற்று விட்டோம் என்ற உண்மையை ஏற்றுக் கொண்டு அந்த அழிவிலிருந்து மீண்டும் கட்டியெழுப்ப எங்களுக்கு மனவலிமை இருக்கிறது என்று மனம் தளராமல் உற்சாகப் படுத்துகிறார்கள். என்னுடைய எலும்புகளை உடைக்கலாம், ஆனால் என் மன உறுதியை உன்னால் உடைக்க முடியாது என்று இயற்கைக்கும் எதிரிகளுக்கும் சவால் விடுகிறார்கள். ஆனால் நாங்கள் தோல்வியை ஏற்றுக் கொள்வது வெட்கக்கேடு என்பது போல, குஞ்சப்பு போல, விளையாட்டுத் தெரிஞ்சபடியால் தப்பியிட்டம் என்று எங்களை நாங்களே ஏமாற்றிக் கொண்டிருக்கிறோம்.

இரண்டாவது, இந்த பீனிக்ஸ் ஆய்வாளர்கள் சொல்வது எங்கள் தமிழ் மக்களை இல்லை. மீண்டும் எழுவோம் என்று இவர்கள் சொல்வது புலிகளை. 12 ஆயிரம் பேரோடு தலைவர் காட்டுக்குள் தயாராக இருக்கிறார், திருப்பி வந்து மணியா வேலையைக் கொடுக்கப் போகிறார் என்ற கண்மூடி விசுவாசத்தில்!

சுவாமி நித்தியானந்தா போலத் தான் புலி ஆதரவாளர் களும். நித்தியானந்தாவின் காமசாஸ்திர வீடியோ வெளிவருகிறது. 'இந்தச் சம்பவம் நடந்தபோது நான் ஆழ்நிலைத் தியானத்தில் இருந்தேன். என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது.'

தலைவர் கொல்லப்பட்ட போது, வீடியோக்கள், படங்கள் உலகமெல்லாம் சுற்றி வருகிறது. புலி ஆதரவாளர்களுக்கு அதெல்லாம் தெரியாது. காரணம் அவர்களும் ஆழ்நிலைத் தியானத்தில் இருந்தார்கள்.

சமீபத்தில் ஒரு ஆய்வாளர் எழுதுகிறார்... ஜப்பானியர்களும் யூதர்களும் போல, யாழ்ப்பாணத்தவர்களுக்கும் பெயர் ஜே என்ற எழுத்தில் தொடங்குகிறதாம். அதனால் நாங்களும் அவர்களைப் போல சாதனை படைப்போம் என்பது தான் அவருடைய ஆய்வின் சாராம்சம். இதை வாசித்ததும் எனக்கு எரிச்சல் வந்தது. 'பரதேசி, ஜெகோவாவின் சாட்சிகளும் ஜே என்ற எழுத்தில் தானே

தொடங்குகிறது'.

யாழ்ப்பாணத்தவர்களை கொழும்பு ஆங்கிலப் பத்திரிகைகள் தயககயே அயே என்று குறிப்பிடுவதுண்டு. ஆனால் இந்த ஆய்வாளர் புதிதாக *jaffniite* என்ற அகராதியில் இல்லாத சொல்லைக் கண்டுபிடித்து அறிமுகப் படுத்துகிறார். ஷியா முஸ்லிம்களை *shiites* என்பது போல.

கார் வாங்கினால் ஹொண்டா, ரொயோட்டா, டி.வி வாங்கினால் சோனி மட்டுமே வாங்குபவர்களுக்கு ஜப்பானியர்களோடு தங்களை ஒப்பிடுவதில் குஷி ஏற்படுவதில் சந்தேகம் இல்லை.

கேட்டால், 'எல்லாரும் வாங்கினம், அப்பிடி எண்டால் நல்லதாத் தானே இருக்க வேணும்.'

"*Consumer Reports* சஞ்சிகை இந்த வருடம் சம்சுங்கை சிறந்த தொலைக்காட்சியாக தெரிவு செய்திருக்கே...'

'அதெல்லாம் எங்களுக்குத் தெரியாது. எல்லாரும் வாங்கிறதை வாங்கினால் பிரச்சனையில்லை. எல்லாருக்கும் நடக்கிறது தானே எங்களுக்கும் நடக்கும்.'

ஊரோடு ஒத்தோடு. வாழ்க்கையில் எந்தப் பிரச்சனையுமே வராது.

ஆனால், தங்களுக்கு ஹிட்லரால் இழைக்கப்பட்ட இனஅழிப்பு அநீதியை வைத்து தங்களை பாதிக்கப்பட்டவர்களாக இன்றைக்கும் காட்டிக் கொண்டு, பாலஸ்தீனியர்களை அடக்குகின்ற யூதர்களோடு அடக்கப்பட்டு பாதிக்கப்படும் இனமான தங்களை எப்படி ஒப்பிடுகிறார்கள் என்று நீங்கள் தலையைச் சொறியக் கூடும். இங்கே ஊடகங்கள், வர்த்தகங்களை தங்களுடைய கட்டுப்பாட்டில் வைத்து இங்குள்ள அரசுகள் இஸ்ரேல் பற்றிக் கொண்டிருக்கும் கருத்துக்களை தங்களுக்குச் சாதகமாக மாற்றும் யூதர்களின் திறமை தங்களுக்கும் இருக்கிறது என்று இவர்கள் காணும் கனவின் எதிரொலி தான் இது.

தற்கொலைப் போராளிகள் என்பதை புலிகளுக்கு முன்பாகவே கண்டுபிடித்தது ஜப்பான். சக்கரவர்த்திக்காக உயிரைக் கொடுப்பதும், தோல்வியடைந்தால் வயிற்றைக் கத்தியால் கிழித்துக் கொள்வதும் வீரம் என உயிர் ஜப்பானுக்கு, உடல் மண்ணுக்கு என்ற சிந்தனையால் மூளைச் சலவை செய்யப்பட்ட மாவீரர்களை நிறையக் கொண்டிருந்தது ஜப்பான். அமெரிக்க போர்க் கப்பல்களை விமானத் தற்கொலைப் போராளிகள் நிர்மூலமாக்கிய நிலை. கடவுளின் அவதாரமாக, சூரிய தேவனாகத் தன்னைக் காட்டிய சக்கரவர்த்தி கடைசி நேரத்தில் மக்களை தற்கொலை செய்யுமாறும், அவ்வாறு செய்பவர்களுக்கு வீரசுவர்க்கத்தில் யுத்தத்தில் போரிட்டு இறந்தவர்களுடன், மாவீரர்களுடன், சமமான இடம் கிடைக்கும் என்று அறிவித்ததை நம்பி பத்தாயிரம் பேர் வரை தற்கொலை செய்திருந்தார்கள். இரண்டாம் உலக யுத்தத்தில் அணுகுண்டுகளால் அழிக்கப்பட்டு, ஜப்பான் மண்டியிட வைக்கப்படுகிறது. யுத்தமுடிவில் ஜப்பானிய சக்கரவர்த்தி சரணடைகிறார்.

தங்கள் உயிரைக் கொடுக்கும் அளவுக்கு மதித்த சக்கரவர்த்தி அரசியலில் எந்த சம்பந்தமும் இல்லாமல் வெறும் சம்பிரதாயச் சின்னமாக நடமாடும் அளவுக்கு ஜப்பான் சிறுமைப் படுத்தப்பட்டிருந்தது. மன்னிப்புக் கேட்க வந்த சக்கரவர்த்தியை ஜெனரல் மக்ஆதர் சந்திக்க மறுத்து அவமானப்படுத்துகிறார்.

ஆனால், தங்களுடைய புராதன சிந்தனை தங்கள் முன்னேற்றத்துக்கு வழி வகுக்காது என்பதை உணர்ந்து, தங்கள் எதிரியுடனேயே சமரசம் செய்து பொருளாதார ரீதியாக முன்னேறுகிறார்கள். 90கள் வரைக்கும் அமெரிக்காவுக்கு பொருளாதார ரீதியாக சவாலாக இருந்தது ஜப்பான். அதாவது தங்கள் அழிவை ஏற்றுக் கொண்டு அடுத்து என்ன செய்ய வேண்டும் என்ற பாதையை வகுக்கிறார்கள்.

**இந்த யூதர்கள் எல்லாம் ரொறன்ரோவில் என்ன மாபெரும் பேரணியா நடத்துகிறார்கள்? இல்லை, சாலை மறியல் செய்கிறார்களா? இங்குள்ள அரசியல் எவ்வாறு செயற்படுகிறது என்பதை கற்றுக் கொண்டு, காதும் காதும் வைத்தது போல வெளியில் தெரியாமல் அதற்குரிய முறைகளில் தங்கள் விருப்பங்களைச் சாதிக்கிறார்கள்.**

வெறும் உணர்ச்சிகளுக்கு அடிமையாகி, அன்னியனே வெளியேறு என்று ஆயுதப் போராட்டம் ஒன்றை தொடங்க அவர்களுக்குத் தெரியாதா? அவர்களுக்கு என்ன நாட்டுப் பற்றுத் தான் இல்லையா? எங்களை விட நாட்டுப் பற்று அதிகமானவர்கள் ஜப்பானியர்கள். வெறும் கனவுகளில் தொடர்ந்தும் வாழாமல், மாவீர உணர்ச்சிகளை ஒதுக்கி வைத்து விட்டு, தங்களை பொருளாதார ரீதியாக முன்னேற்றிய ஜப்பானியர்களுக்கும் யாழ்ப்பாணத்தவர்களுக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது?

யூதர்களை எடுத்துக் கொள்வோம். ஹிட்லரின் நாசிகளின் இன அழிப்பில் அழிக்கப்பட்டாலும், இன்று மேற்கு நாடெங்கும் பரவி, பொருளாதார ரீதியாக வளர்ந்து, அரசியல் ரீதியான அழுத்தங்கள்

மூலமாக தங்களுக்கு என ஒரு நாட்டை அமைத்திருக்கிறார்கள். இன்று அந்த நாட்டுக்கு எதிரான அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுக்க, மேற்கு நாட்டு அரசுகளின் ஆதரவைப் பெற அரசியல் ரீதியாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

உதாரணத்திற்கு ஜெரி ஸ்வாட்ஸ் என்ற கனடிய தொழிலதிபர் ஒனெக்ஸ் நிறுவனத்தின் சொந்தக்காரர். இவரது மனைவி தான் இன்டிகோ புத்தக விற்பனை நிலையத்தின் சொந்தக்காரர். இவர்கள் இருவரும் கனடிய லிபரல்கள் இஸ்ரேலுக்கு எதிரான நிலைப்பாடு எடுக்கிறது என்பதற்காக தங்கள் ஆதரவை மாற்றிக் கொண்டு கன்சர்வேட்டிவ் அரசுக்கு ஆதரவு கொடுத்து அதற்கு நிதி சேகரிக்க உதவி செய்து அழுத்தங்களைப் பிரயோகிக்கிறார்கள். இதுவரையும் எந்தக் கனடிய அரசும் வழங்காத ஆதரவை தற்போதைய கனடிய அரசு இஸ்ரேலுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறது. இதெல்லாம் வெளியில் தெரியாமல் நடத்தப்படுகிறது.

இந்த யூதர்கள் எல்லாம் ரொறன்ரோவில் என்ன மாபெரும் பேரணியா நடத்துகிறார்கள்? இல்லை, சாலை மறியல் செய்கிறார்களா? இங்குள்ள அரசியல் எவ்வாறு செயற்படுகிறது என்பதை கற்றுக் கொண்டு, காதும் காதும் வைத்தது போல வெளியில் தெரியாமல் அதற்குரிய முறைகளில் தங்கள் விருப்பங்களைச் சாதிக்கிறார்கள்.

இவர்களுக்கும் தெருவில் நின்று கூச்சல் போட்டு, எங்களிடம் இரண்டு லட்சம் வாக்குகள் இருக்கின்றன என்று மிரட்டும் யாழ்ப்பாணத்தவர்களுக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? கடவுள் தங்களுக்கு வாக்களித்த பூமி என்று நம்பி, மேற்கு நாடுகளில் வசதியான வாழ்க்கையையும் கைவிட்டு, பாலைவனத்தில் அடிப்படை வசதிகளோடு மட்டும் தங்கள் நாட்டைக் காக்க வேண்டும் என்ற உணர்வோடு வாழும் யூதர்களுக்கும், எப்படியாவது வெளிநாட்டுக்கு போக வேண்டும் என்ற கனவோடு திரியும் தமிழர்களுக்கும் என்ன ஒற்றுமை இருக்கிறது?

**இப்படி ஒரு கனவில் தான் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இன்னமும் எங்களுக்கு ஏற்பட்ட அழிவின் கனத்தை நாங்கள் இன்னமும் விளங்கிக் கொள்ளவில்லை.**

அவர்களுக்கு மூளை இருக்கிறது. எங்களுக்கு வாய் இருக்கிறது. இது தான் வித்தியாசம்.

ஆனால் இவர்களை விட ஜெகோவாவின் சாட்சிகளுக்கும் யாழ்ப்பாணத்தவர்களுக்கும் நிறைய ஒற்றுமை இருக்கிறது. அதிகாலையில் குளிரில் ஆளுக்காள் வேலைக்கு ஓடிக் கொண்டிருப்போம். சப்வே வாசலில் இரண்டு சஞ்சிகைகளைக் கையில் வைத்துக் கொண்டு இரண்டு நேர் நிற்பார்கள். கவனயீர்ப்பு கேட்டு கடைசி வரைக்கும் அமெரிக்க தூதுவரகத்தின் முன் கொடி பிடித்துக் கொண்டிருந்த தமிழர்கள் மாதிரி.

காவல் கோபுரம்! தேசியத் தலைவர் பிரபாகரன் எங்கள் காவல் கோபுரம்.

விழித்தெழு! புலிகளை அங்கீகரி.

முடிவு நெருங்கி விட்டது! மனம் திரும்புங்கள்!

யாழ்ப்பாணத்தவர்களுக்கு முடிவு ஏற்கனவே வந்து விட்டாலும் இன்னமும் மனம் திரும்பும் எண்ணம் கிடையாது.

இப்படியாக எவனுமே கவனிக்காமல் தன் பாட்டில் போய்க் கொண்டிருந்தாலும் எங்கள் ஆர்ப்பாட்டத்திற்கு ஒன்றும் குறைச்சல் கிடையாது. இந்தப் படை போதுமா? இன்னும் கொஞ்சம் வேணுமா?

மத நம்பிக்கையில் தங்கள் வருமானத்தில் ஒரு பகுதியைக் கொடுக்கும் இவர்களுக்கும் புலிகளின் மிரட்டலுக்குப் பயந்து வருமானத்தைக் கொடுக்கும் தமிழர்களுக்கும் தான் ஒற்றுமை அதிகம்.

இப்படி ஒரு கனவில் தான் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இன்னமும் எங்களுக்கு ஏற்பட்ட அழிவின் கனத்தை நாங்கள் இன்னமும் விளங்கிக் கொள்ளவில்லை.

எனக்கு ஒரு அண்ணன் இருக்கிறான். பெரியம்மாவின் மகன். இவனுடைய சகோதரியின் மகளை கடைசிக்கட்டத்தில் தப்பி வரும் போது புலிகள் சுட்டுக் கொன்றது பற்றி தாயகத்தில் எழுதியிருக்கிறேன். இந்த அண்ணன் சுவையான கதைகள் சொல்வான். அதில் ஒன்று இது.

ஒவ்வொரு முறையும் தேர்தல் நடைபெறும் போதும் தொண்டமான் ஒரு சிங்களக் கட்சியுடன் கூட்டு வைத்துக் கொள்வார். அவர் சேர்ந்ததால் தான் அந்தக் கட்சி வென்றதா? இல்லை வெல்லப் போகும் கட்சியுடன் தான் அவர் கூட்டு வைத்துக் கொள்வாரா? என்பது தெரியாது. ஒன்று மட்டும் நிச்சயம் தோல்வியடைந்த கட்சி மலையத்தமிழர்களுக்கு அடிக்கும். கலவரம் வெடிக்கும். தோட்ட லயன்கள்... வீடுகள் எரிக்கப்படும். மக்கள் அகதிகளாக்கப்படுவார்கள்.

அகதிகளாக்கப்பட்டவர்கள் எங்கே போவார்கள்? வடக்கில் சூரியன் உதித்தால் மலையகத்தில் சேவல் கூவும். எனவே தங்கள்

தமிழ்ச் சகோதரர்கள் தங்களுக்கு தஞ்சம் தருவார்கள் என்ற நம்பிக்கையில் புகையிரதத்தில் ஏறி, வந்தாரை வாழ வைக்கும் யாழ்ப்பாணத்திற்கு வருவார்கள்... அவர்கள் என்ன யாழ்ப்பாணத்தவர்களா? தலை மாற்றி ஜேர்மன் கனடா போக? ஆனால் யாழ்ப்பாணத்திற்கு விசா கிடைக்காது. எனவே கிளிநொச்சியில் இறங்கி விடுவார்கள். போவதற்கு இடம் இல்லை. என்ன செய்வது என்பதும் தெரியாது. புகையிரத நிலையத்தில் வாழ்க்கை ஆரம்பமாகும். அருகில் உள்ள மரங்களில் கட்டப்பட்ட ஏணைகளில் பிள்ளைகள் தூங்கிக் கொண்டிருப்பார்கள். கொண்டு வந்த சட்டி பானைகளுடன் ஓரமாய் சமையல் நடக்கும்.ஹ

அப்போது, வீட்டுத் தலைவர்கள் சுவரில் சாய்ந்து கொண்டு தங்களுக்குள் கதைத்துக் கொள்வார்களாம்...

மச்சான், நாம இப்ப என்னா பண்ணிறமுன்னா... முதல்ல ஒரு பாதையை அமைச்சிக்கிறம். அங்க வெளியில ஒரு கொட்டிலை கட்டிக்கிறம். அப்புறம் கொஞ்சம் கொஞ்சமாய் காட்டை வெட்டிறம். அதுக்கு அப்புறமாக நிலத்தைக் கொத்திறம். பிறகென்ன... நூறு கண்டுக்கு மொளவாய்க்கண்டு, நூறு கண்டுக்கு கத்தரி.. இன்னொரு நூறு கண்டுக்கு தக்காளி... நட்டுக்க வேண்டியது தான். நம்ம பொண்டாட்டி, புள்ளைங்களுக்கு என்ன வேலை..? அவங்க தண்ணியைப் பாய்ச்சி, பராமரிச்சிட்டுருப்பாங்க. நாங்க பீடியை அடிச்சிக்கிட்டு வரம்பு வழிய நடந்து கங்காணி வேலை பாத்துக்க வேண்டியது தான்.

அகதிகள். போக்கிடம் இல்லை. தங்கள் கனவு சாத்தியமானதா என்ற விபரமும் கிடையாது. நம்ம யாழ்ப்பாணி விதானைமார், டி.ஆர்.ஓ விடுவார்களா? அனுமதி இல்லாமல் காட்டை வெட்டினால், 'சட்டவிரோதமாய் காட்டு மரம் தறித்ததற்காக' பொலிசைக் கூப்பிட்டு உள்ளே தள்ள மாட்டார்களா?

இதைப் போலத் தான் நாங்களும். இவ்வளவு மக்களின் பொருளாதாரம் சீரழிக்கப் பட்டிருக்கிறது. அரசியல் எதிர்காலம் எந்த நம்பிக்கையும் இல்லாதபடிக்கு நிர்மூலமாக்கப் பட்டிருக்கிறது.

நாங்கள் இங்கே இருந்து கொண்டு.

**எல்லா முட்டைகளையும் ஒரே கூடைக்குள் வைக்கக் கூடாது என்பார்கள். கூடை விழுந்தால் எல்லா முட்டைகளும் நொருங்கி விடும். எங்கள் நம்பிக்கைகள் எல்லாவற்றையும் புலிகள் என்ற கூடைக்குள் வைத்ததால் தான் எங்கள் நம்பிக்கைகள் எல்லாம் கணப் பொழுதில் தகர்ந்து போனது.**

..நூறு கண்டுக்கு... நாடு கடந்த தமிழீழம். நூறு கண்டுக்கு மக்களவை. நூறு கண்டுக்கு Global Tamil Forum, இன்னொரு நூறு கண்டுக்கு யுத்தக் குற்ற விசாரணை என்று கனவு கண்டு கொண்டிருக்கிறோம்.

எங்களுக்கு ஏற்பட்ட அழிவின் கனத்தை நாங்கள் இன்னமும் விளங்கிக் கொள்ளவில்லை. வெறும் கற்பனையில் எங்களை நாங்களே குஷிப்படுத்திக் கொண்டிருக் கிறோம். அதாவது சுய இன்பம் கண்டு கொண்டிருக்கிறோம்.

எல்லா முட்டைகளையும் ஒரே கூடைக்குள் வைக்கக் கூடாது என்பார்கள். கூடை விழுந்தால் எல்லா முட்டைகளும் நொருங்கி விடும். எங்கள் நம்பிக்கைகள் எல்லாவற்றையும் புலிகள் என்ற கூடைக்குள் வைத்ததால் தான் எங்கள் நம்பிக்கைகள் எல்லாம் கணப் பொழுதில் தகர்ந்து போனது.

நாங்கள் அடித்த திமிர்க்கூத்திற்கு நடந்த முடிவைக் கண்டு வெட்கப்பட்டு, அவமானம் தாள முடியாமல் எங்களைத் திருப்திப்படுத்துவதற்காக நியாயங்களைக் கற்பித்துக் கொண்டிருக்கிறோம்.

புலிகள் இல்லாட்டி சிங்களவன் தமிழனை அழிச்சுப் போடுவான் என்ற நாங்கள், தமிழர்கள் இன்று தங்கள் பாட்டில் வாழ்வதைச் சகித்துக் கொள்ள முடியாமல் கொதித்துக் கொண்டிருக்கிறோம்.

புலிகள் தனியான அரசை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். தலைவர் தீர்க்கதரிசி. புலிகள் மயிர் நீப்பின் உயிர் வாழாக் கவரிமான்கள்... சரணடைய மாட்டார்கள்.

இப்படியாக மார்தட்டிக் கொண்டிருந்த நாங்கள் தலைவர் போரில் விழுப்புண் பட்டு வீரமரணமடைந்தார் என்று மார் தட்ட முடியாமல் அவமானத்தால் கூனிக் குறுகிப் போயிருக்கிறோம். தலைவர் சரணடைந்து அவமானப்படுத்தப்பட்டு கொல்லப்பட்டார் என்பதையும் புலிகளின் முக்கிய தலைவர்கள் வெள்ளைக் கொடியோடு சரணடைந்தார்கள் என்பதையும் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் இன்றைக்கு பேச்சை மாற்றிக் கொண்டிருக்கிறோம்.

காரணம் என்ன? எங்களுடைய யாழ்ப்பாண மனோபாவம் தான்.

உங்களுக்குத் தெரியும். உயர்தர வகுப்புப் படித்த பின்னால் வேலை தேடும் வரைக்கும்

யாழ்ப்பாணப் பெருமகன் வீட்டில் இருப்பார். பொழுதுபோகாமல் நண்பர்களோடு ஊர் சுற்றப் போவார். சுற்றிப் போட்டு வருபவருக்கு வீட்டில் அர்ச்சனை நடக்கும். 'கண்ட கண்ட காவாலியளோடு சுத்துறான்'. அதாவது தன்னுடைய மகன் ஒரு அப்பாவி. மற்றவர்களுடைய பிள்ளைகள் தன் பிள்ளையைக் கெடுக்கிறார்கள் என்பது தான் இந்த தாயின் முடிவு. அப்படியானால், அந்த கண்ட கண்ட காவாலிகளின் தாய்மார் என்ன சொல்வார்கள்? 'அந்த படிக்கிற கெட்டிக்காரப் பெடியனை ஏன்டா கெடுக்கிறாய்?' என்றா சொல்வார்கள்? இல்லை. 'கண்ட கண்ட காவாலிகளோட சுத்திறான்' என்பது தான் அவர்களின் அர்ச்சனையாக இருக்கும். எல்லாருமே தங்கள் பிள்ளைகள் ஒண்ணும் தெரியாத பாப்பா, மற்றவர்கள் தான் தங்கள் பிள்ளைகளைக் கெடுக்கிறார்கள் என்ற தீர்மானமான முடிவோடு இருப்பார்கள்.

சுத்தித் திரிகின்ற தம்பிக்கு காதல் வரும். ஒரு தலைக்காதல் வயதுக் கோளாறால் இருதலைக்காதல் ஆக கூர்ப்படையும். வயதான இருவர்களுக்கு காதல் வந்து விட்டது, பெரியோர்கள் ஒன்று கலந்து பேசி திருமணமா முடித்து வைக்கப் போகிறார்கள்? வழமை போல, யாழ்ப்பாணத்தார் லாப நட்டக் கணக்கு பார்ப்பார்கள். பெண்ணின் அம்மா திட்டுவா... ஐயோ, என்ரை பிள்ளையை ஏமாத்திப் போட்டான். தம்பியின் அம்மா திட்டுவா... என்ரை பிள்ளையை மயக்கிப் போட்டாள்.

இது நாங்கள் எங்கும் பார்க்கிற வழமையான விடயம். யாருமே தங்கள் தரப்பில் தவறு இருக்கும் என்பதை ஏற்றுக் கொள்வதில்லை.

புலிகள் என்பவர்கள் யாழ்ப்பாணத்தவர்கள் செல்லம் கொடுத்துக் கெடுத்த, தறுதலைப் பிள்ளை. மற்ற இயக்கங்கள் மாற்றாந்தாய் பிள்ளைகள். இதனால் தான் தங்கள் பிள்ளைகளின் தவறைக் கண்டும் காணாமல் பெருமை பேசித் திரிந்ததுடன், மாற்றாந்தாய் பிள்ளைகளை கேவலமாக நடத்தினார்கள். அவர்களையும் தங்கள் பிள்ளைகளாக இவர்கள் கணக்கெடுத்ததேயில்லை. மாற்று இயக்கங்களில் இருந்து வந்த நண்பர்கள் எல்லோருக்கும் இந்த அனுபவம் இருந்திருக்கும்.

**இவ்வளவு பேரும் ஆதரவு தந்தால் தான் தமிழீழம் கிடைக்கும் என்றால் அதற்கு தேசியத் தலைவரா வேண்டும்? அதை யாழ்ப்பாணத்தில் பஸ் ஸ்ராண்டில் சுவீப் டிக்கட் விற்ற வைரமாளிகையால் கூட பெற்றிருக்க முடியும்.**

எனவே இந்த அழிவு வந்ததும் நாங்கள் செய்த முதல் வேலை என்ன? யாரில் பழியைப் போடலாம் என்று ஆள் தேடிக் கொண்டிருக்கிறோம்.

ஐ.நா, பான் கி மூன், நோர்வே, எரிக் சொல்கெய்ம், அமெரிக்கா, ஒபாமா, இந்தியா, சோனியா, கருணாநிதி.... டக்ளஸ், கருணா... கே.பி. பிராந்திய அரசியலில் மட்டுமல்ல, சர்வதேச அரசியலிலும் சம்பந்தப்பட்ட எல்லாரையுமே நாங்கள் துரோகி என்றிருக்கிறோம். நல்ல காலம் புலிகள் மக்களை வெளியேற அனுமதித்து பேச்சுவார்த்தைக்கு சம்மதிக்க வேண்டும் என்று தலாய் லாமா சொல்லியிருந்தால் அவரையும் 'எளிய பிக்கு, சிங்கள பௌத்தனுக்கு சைட் பண்ணிறான்' என்று நாங்கள் திட்டியிருப்போம்.



ஈரானிய இயக்குனர் அப்பாஸ் கியாரோஸ்டாமி *Taste of cherry* ஒரு படத்தை இயக்கியிருந்தார். சங்கரும் எந்திரனும் மாதிரி உலக அளவுக்கு பெரும் புகழ் பெறவில்லை. இந்தப் படம் பிரான்சின் கான் பட விழாவில் தங்க இலை விருது பெற்றது. அதில் ஒரு வர்த்தகர் தற்கொலை செய்ய விரும்புகிறார். இதற்காக ஒரு புதை குழியையும் வெட்டி விட்டு, தற்கொலை செய்த தன் உடலைப் புதைப்பதற்கு ஆள் தேடித் திரிகிறார். இப்படி ஒரு வயதானவரைச் சந்தித்து அவரைக் காரில் ஏற்றிக் கொண்டு தன்னுடைய திட்டத்தை விளக்கும் திட்டத்தில் கூட்டிக் கொண்டு போகிறார். அப்போது அந்த வயதானவர் ஒரு ஜோக் ஒன்று சொல்வார்.

ஒவ்வொரு பிராந்தியத்திலும் இன்னொரு இனத்தவரை முட்டாள்கள் என்று மட்டம் தட்டி கேலிக் கதைகள் சொல்வது உங்களுக்குத் தெரிந்திருக்கும். கனடாவில் நியுபவுண்ட்லாந்துக் காரரைக் கிண்டல் அடிப்பார்கள். இங்கிலாந்தில் ஸ்கொட்டிஷ்காரரைக் கேலி செய்வார்கள். இந்தியாவில் சீக்கியர்களைக் கிண்டல் செய்வார்கள். வழமை போல, அதிபுத்திசாலிகளான தமிழர்கள் தங்களைத் தவிர எல்லாரையும் முட்டாள்கள் என்பார்கள். இந்த பட்டியலில் மோட்டுச்சிங்களவர்கள், மலையகத்தினர், முஸ்லிம்கள்

மட்டுமன்றி, ஏழாலையார், தீவார்கள் என நிறையப் பேர் இருப்பார்கள். இதே போல, அரேபிய நாடுகளிலும் துருக்கியர் பற்றி கிண்டல் கதைகள் உள்ளன. அரேபிய நாடுகளை துருக்கியரின் ஒட்டோமான் சாம்ராஜ்யம் அடக்கி வைத்திருந்ததால் வந்த கோபமாகக்கூட இருக்கலாம்.

இந்தப்படத்தில் அந்த வயதானவர் சொல்லுகின்ற கதை இது தான்.

ஒரு துருக்கியர் டொக்டரிடம் போனாராம். போய் சொன்னாராம். .. டாக்டர், எனக்கு மூக்கைத் தொட்டால் நோகிறது. வயிற்றைத் தொட்டால் நோகிறது. முழங்காலைத் தொட்டால் நோகிறது. முதுகைத் தொட்டால் நோகிறது. உடம்பில் எங்கே தொட்டாலும் நோகிறது.

டாக்டர் பரிசோதித்து விட்டுச் சொன்னராம்... உனக்கு ஒரு இடமும் நோவில்லை. உன் சுட்டுவிரலில் தான் நோ இருக்கிறது என்று.

நாங்கள் உலகத்தில் ஒருவர் மிச்சமில்லாமல் துரோகமிழைத்து விட்டார்கள் என்று பெரும் பட்டியலே போடுகிறோம். யசூகி அகாசியை மட்டுமல்ல, அசினையும் நாங்கள் விட்டு வைக்கவில்லை. ஆனால், எங்களில் தவறு இருக்கும் என்ற உண்மையை நாங்கள் இன்னமும் ஏற்றுக் கொள்ளவில்லை. யார் மீதாவது பழியைப் போட்டு, அவர்கள் துரோகம் இழைக்காவிட்டால் எங்களுக்கு ஈழம் கிடைத்திருக்கும் என்று பிதற்றிக் கொண்டிருக்கிறோம்.

அமெரிக்கா, நோர்வே, ஐரோப்பிய சமூகம், இந்தியா, ஜப்பான், சீனா என்ற நாடுகளும் பான் கி மூன் தொடக்கம் சொல்கெய்ம் வரைக்கும் துரோகம் இழைக்காவிட்டால் தலைவர் தமிழீழத்தைப் பெற்றிருப்பார் என்று 'எங்கட பிள்ளையைக் கண்ட கண்ட காவாலிகளும் கெடுத்துப் போட்டாங்கள்' என்று பழியைப் போடுகிறோம். இவ்வளவு பேரும் ஆதரவு தந்தால் தான் தமிழீழம் கிடைக்கும் என்றால் அதற்கு தேசியத் தலைவரா வேண்டும்? அதை யாழ்ப்பாணத்தில் பஸ் ஸ்ராண்டில் சுவீப் டிக்கட் விற்ற வைரமாளிகையால் கூட பெற்றிருக்க முடியும். ஏனென்றால், வைரமாளிகைக்கு கொஞ்சம் இங்கிலிஸ் பேசத் தெரியும்.

இவ்வாறான தடைகளையும் மீறி இலட்சியங்களை அடைவதற்குத் தானே நாங்கள் தலைவர்களைத் தெரிவு செய்து ஆதரவு வழங்குகிறோம். தட்டில் வைத்துக் கொடுப்பார்கள் என்றால் இப்படி எல்லாம் அனாவசியமாக உயிர்ப் பலி கொடுத்து எதற்காகப் போராட வேண்டும்? இப்படி மற்றவர்கள் மீது நொண்டிச்சாட்டுச் சொல்லவா இவர் தன்னை தேசியத்தலைவர் என்று பிரகடனப் படுத்திக் கொண்டிருந்தார்?

இந்தத் தோல்வியின் இரண்டாவது கட்டமாக நாங்கள் எங்களைத் தோற்கடித்த ராஜபக்ச மீது தாங்கமுடியாத கோபத்தில் இருக்கிறோம்.

நீங்களும் யாழ்ப்பாணத்தில் சில நிகழ்வுகளைக் கண்டிருப்பீர்கள். இளவட்டங்கள் சில நேரங்களில் பெண் பிள்ளைகளோடு சொறிச் சேட்டைகளில் ஈடுபடுவார்கள். ஒரு தலைக்காதல் சேட்டைகள். சில நேரங்களில் விசயம் தெரியாமல் பெண்ணின் அண்ணன்மாரிடமோ, அல்லது அந்தத் தெருவில் உள்ள மற்ற போட்டிக் காதலர்களிடமோ மாட்டிக் கொண்டு அடி வாங்குவார்கள். அதிலும் மிகவும் அவமானமானது, அந்தப் பெண்ணின் முன்னால் அடி வாங்குவது.

அடி வாங்கியவருக்கு உலகத்தில் இல்லாத கோபம் வரும். பெண்ணின் முன்னால் அடி வாங்கிய அவமானம். பழி வாங்க வேண்டும் என்று துடித்துக் கொண்டிருப்பார். திருப்பி அடிக்க தனக்கு திராணி இருக்காது. யாரையாவது பிடித்து பழிவாங்க வேண்டும் என்று அலைவார். இத்தனைக்கும் இப்படி தேவையில்லாமல் அந்தப் பெண்ணோடு சொறிச் சேட்டை விட்டது தன்னுடைய பிழை என்பதை இவர் ஒரு போதுமே ஏற்றுக் கொள்ள மாட்டார்.

இன்றைக்கு தமிழர்களின் ராஜபக்ச மீதான மனநிலையும் இவ்வாறானது தான். எங்களை அவமானப்படுத்தி விட்டான். அவனைப் பழிக்குப் பழி வாங்காமல் விடக் கூடாது. எந்தச் சண்டியனைப் பிடித்து என்றாலும் பதிலடி கொடுக்க வேண்டும் என்று தான் இன்றைக்கு பலரும் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். இது



கிட்டத்தட்ட *obsession* என்ற நிலைக்கு வந்து விட்டது. யுத்தக் குற்றவாளியாக நிறுத்த வேண்டும் என்பது முதல் தமிழ் எழுத்தாளர் மாநாட்டைக் குழப்ப வேண்டும் என்பது வரைக்கும் நாங்கள் முறுகிக் கொண்டு நிற்கிறோம்.

இலக்கிய நண்பர்கள் வாசித்திருப்பார்கள். சுந்தர ராமசாமியின் ஜெ.ஜெ சில குறிப்புகள். இதில் ஜெ.ஜெ ஒரு இலக்கியப் பிரகிருதி பற்றிச் சொல்வான் ... அவனுடைய நிலைப்பாட்டை அவனது எதிரிகளே தீர்மானிக்கிறார்கள் என்று. அதாவது அவனுக்கு என்று சொந்தமான நிலைப்பாடு எதுவும் இல்லை. அவனது எதிரிகள் எடுக்கும் நிலைப்பாடு எல்லாவற்றுக்கும் எதிரான நிலைப்பாட்டைத் தான் இவன் எடுப்பான் என்று.

இந்த *obsession* இன்று எந்த அளவில் வந்து நிற்கிறது? எங்களுடைய அரசியலை இவ்வளவு நாளும் பிரபாகரன் நிர்ணயித்து வந்தது போய், இப்போது மகிந்த தீர்மானித்துக் கொண்டிருக்கிறார்.

சரத் பொன்சேகாவை ஒரு விடுதலை வீரனாகச் சித்தரித்து, அவரது மனித உரிமைகள் மீறப்படுவது குறித்து நாங்கள் கண்ணீர் விடுவதில் வந்து நிற்கிறது. பிரபாகரனைக் கொன்றது நான் தான், ராஜபக்ச அல்ல என்று சிங்கள இனவாதிகளின் வாக்குகளை எடுப்பதற்காக சொன்ன ஒருவரை, தமிழர்கள் சம உரிமை கேட்கத் தகுதியில்லாதவர்கள் என்று கருத்துச் சொன்ன ஒருவரை, எங்கள் எதிரி மீதான கோபம் காரணமாக, எதிரிக்கு எதிரி நண்பன் என்றும் முள்ளை முள்ளால் எடுக்க வேண்டும் என்று சாக்குப் போக்குச் சொல்லிக் கொண்டு ஜனாதிபதியாக்க முயற்சிக்கிறோம்.

## மகிந்தவை தேசியத் தலைவர் யதார்த்தவாதி என்ற போது, 'மகிந்த ஒரு இனவாதி, இனவாதியை நம்பி அரசியல் நடத்துவது ஆபத்தில் முடியும்' என்று எந்த ஆய்வாளர், எந்த ஊடகவியலாளர் தலைவருக்குப் புத்திமதி சொன்னார்?

எங்களுக்கு அடித்து விட்டான் என்று நாங்கள் பழி வாங்க கூலிக்கு அழைக்கும் சண்டியன் எங்களிடம் தொடர்ந்து கப்பம் கேட்பான் என்ற உண்மை எங்களுக்குத் தெரியாத படிக்கு எதிரி மீதான கோபம் கண்ணை மறைத்து விட்டது.

ராஜபக்ச ஒன்றும் புனிதர் இல்லை. ஆனால் ராஜபக்ச மீது மட்டும் கோபம் கொள்வதன் காரணம் என்ன?

ராஜபக்சவை யதார்த்தவாதி என்று புகழ்ந்தது யார்? எழுபது கோடி ரூபா வாங்கி தமிழர்களை வாக்களிக்க விடாமல் தடுத்தது யார்? இவர்கள் சொல்லலாம். தாங்கள் பணம் வாங்கியதாக புலிகள் சொல்லவில்லையே என்று சப்பைக்கட்டு கட்டலாம். கீழ் மட்டத்தில் பேச்சுவார்த்தை நடந்தது உண்மை என்று தமிழ்ச்செல்வனே ஒப்புக் கொண்டிருந்தார். எனவே புலிகள் புனிதர்கள் இல்லை என்பது உங்களுக்குப் புரிந்திருக்கும்.

ரணிலை விட, மகிந்த ஒரு லட்சத்து எண்பதாயிரம் வாக்குகளால் மட்டுமே வென்றார். யாழ்ப்பாணத்தில் வாக்களிக்க விட்டிருந்தால் ரணில் ஜனாதிபதியாகி இருப்பார் என்பது தெரிந்த உண்மை. எனவே, மகிந்த ஜனாதிபதியானதற்கு காரணம், புலிகளே. புலிகள் மட்டுமே. புலிகளின் உதவி இல்லாமல் மகிந்த பதவிக்கு வந்திருக்கவே முடியாது. புலிகளுக்கும் மகிந்தவுக்கும் இடையில் ஒப்பந்தம் இருந்தது. எனவே தேசியத் தலைவர் யதார்த்தவாதி என்று மதித்த ஒருவர் மீது இவர்கள் கோபம் கொள்வதில் என்ன நியாயம் இருக்கிறது?

புலிகள் கொள்கையை விட்டு விலகாதவர்கள், அவங்கள் ஈழத்தை கடைசி மட்டும் விடேலைத் தானே என்று தம்பட்டம் அடிக்கும் நாங்கள் புலிக்கும் ஒரு விலை இருக்கிறது, அது விலை போகும் என்பது மட்டுமல்ல, தமிழினத்தையும் விலை பேசி விற்கும் என்ற உண்மையை ஏன் ஏற்றுக் கொள்ள மறுக்கிறோம்?

நீங்கள் சொல்லலாம். ஒப்பந்தம் இருந்தது உண்மை. எங்கள் வாக்குறுதியை நாங்கள் நிறைவேற்றினோம். மகிந்த தான் வாக்குறுதியை மீறித் துரோகம் இழைத்து விட்டார் என்று.

புலிகள் ஒப்பந்தம் செய்த ஒவ்வொருவரையும் என்ன செய்தார்கள் என்ற வரலாறு எங்கள் கண் முன்னே நிற்கிறது. இந்தியாவோடு புரிந்துணர்வோடு இருந்தார்கள். பிரேமதாசாவோடு புரிந்துணர்வுடன் இருந்தார்கள். சந்திரிகாவோடு பேச்சுவார்த்தை நடத்தினார்கள். ஆனால் அவர்களைக் கொலை செய்த விவகாரங்கள் மகிந்தவுக்கு தெரிந்திருக்காதா? புலிகள் எந்தக் காலத்தில் செய்த ஒப்பந்தங்களுக்கு உண்மையாக இருந்தார்கள்? நோர்வேயில் சமஷ்டிக்கு சம்மதம் என்று கையெழுத்து வைத்து விட்டு வந்து ரணிலின் காலை வாரியதில் இருந்து தானே புலிகளின் அழிவு ஆரம்பிக்கிறது.

மகிந்தவை ஆட்சிக்கட்டிலில் ஏற்றிய பெருமை புலிகளைச் சாருகிறது. சிங்கள இனவாதிகளை நம்பக் கூடாது என்று, அரசுடன் தொடர்பு கொண்ட சகலரையும்

துரோகிகள் என்று முத்திரை குத்தி மண்டையில் போட்ட புலிகள் என்ன நம்பிக்கையுடன் மகிந்தவை நம்பினார்கள்? மகிந்த என்ன ரணில் போல பச்சோந்தி வேடமா போட்டார்? தான் சிங்கள இனவாதி தான், சிங்கள இனவாதிகளின் ஆதரவுக்காக எதையும் செய்வேன் என்று பகிரங்கமாகத் தானே அரசியல் நடத்தினார், தமிழருக்குப் பிரச்சனை இல்லை என்று தீர்வு கிடைப்பதைச் சகல வழிகளிலும் தடுத்த ஜே.வி.பி, உறுமயவுடன் தானே கூட்டு வைத்தார்? இதில் கோபம் கொள்வதற்கு என்ன இருக்கிறது?

மகிந்தவை தேசியத் தலைவர் யதார்த்தவாதி என்ற போது, 'மகிந்த ஒரு இனவாதி, இனவாதியை நம்பி அரசியல் நடத்துவது ஆபத்தில் முடியும்' என்று எந்த ஆய்வாளர், எந்த ஊடகவியலாளர் தலைவருக்குப் புத்திமதி சொன்னார்?

தவறு மற்றவர்களில் அல்ல, உங்களிடம் இருக்கிறது. உங்கள் நுனி விரலில் தான் நோ இருக்கிறது.

புலிகள் விட்ட தவறை மறைத்து, மகிந்தவை எப்படியாவது அவமானப்படுத்தியே ஆக வேண்டும் என்ற வெறியில் எங்கள் இனத்தின் எதிர்காலத்தை சிந்திக்க மறந்து விடுகிறோம். இன்றைக்கும் தமிழ் ஊடகங்கள்.. பத்திரிகைகள், வானொலிகள், இணையத்தளங்கள். .. இலங்கையில் தமிழ் மக்கள் தங்கள் அன்றாட அலுவல்களைச் செய்யத் தொடங்கி கால் ஊன்றத் தொடங்குகிறார்கள் என்ற உண்மையை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றன. இன்றைக்கும் வெள்ளைவான் கடத்தல், கற்பழிப்பு என்று கதை விட்டுக்கொண்டிருக்கிறார்கள். அங்கே போய் வந்தவர்கள் எல்லாம் அங்கே மக்கள் நிம்மதிப் பெருமூச்சுடன் இருக்கிறார்கள் என்று சொன்னாலும் நம்புகிறார்கள் இல்லை.

'வதை முகாமில் மக்கள் பட்டினி!'

அங்கே முகாமில் கிடைத்த உணவுப் பொருட்கள் மீதியாகி விட்டதால் வெளியே கொண்டு போய் விற்றவர்களின் உறவினர்களை நான் காட்ட முடியும்.

'முகாமில் விபசாரம்.'

வெளியில் போனால் இரவில் பெண்பிள்ளைகளுடன் வாழ்வது பயம் என்று முகாமில் இருக்க முடிவு செய்தவர்களின் உறவினர்களையும் காட்ட முடியும்.

தெய்வம் வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுக்காதது போல, மக்கள் வதை முகாமுக்குள் வதைக்கப்படுகிறார்களாம்! ஆடு நனைகிறது என்று இந்த இரத்தவெறி பிடித்த ஓநாய்கள் அழுகின்றன.

மனித உரிமை மீறல்கள்... அது பெண்கள் மீதான வன்முறையாக இருந்தால் என்ன? தங்கள் வாழிடங்களில் வாழ முடியாமல் தடுத்து நிறுத்தப்படுவதாக இருந்தால் என்ன? குற்றம் சாட்டும் போது, ஆதாரங்களுடன் வெளியிடும் போது தான் அதற்கு வலிமை இருக்கும். அது குறித்து மேலதிகமாக நடவடிக்கைகள் குறித்து சிந்திக்க முடியும். புலன் பெயர்ந்த தமிழர்களைக் குஷிப்படுத்துவதற்காக, தமிழக அரசியல்வாதிகள் பாணியில்... அங்கே தமிழ்ப் பெண்களின் மார்பகங்கள் அறுக்கப்படுகின்றன என்று உணர்ச்சிப் பேச்சுப் பேசுவதால் எந்தப் பயனும் இல்லை.




**இந்த முகாம்களில் விபசாரம் நடக்கிறது என்று வாய் கூசால் அன்று அபலைகளாக வந்திருந்த எல்லாப் பெண்கள் மீதும் விபசார முத்திரை குத்தினோம். எங்களுக்கு எங்கள் மூக்கு போனது பிரச்சனையில்லை. எதிரிக்கு சகுனம் பிழைக்க வேண்டும் என்பது முக்கியம்.**

சரி, கற்பழிப்பு, கொடுமை என்கிறீர்கள். உங்களில் யார் சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் கண்காணிப்பகத்துடன் இங்கே தொடர்பு கொண்டு, அங்கே இன்னாருக்கு இன்ன நடந்தது, இது குறித்து ஆவணப்படுத்துங்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள்? உங்கள் நோக்கம் எல்லாம் இந்த தமிழ்ப் பத்திரிகைகளில் செய்தி வெளியிட்டு இந்த புலன் பெயர்ந்த கூட்டத்தைக் குஷிப்படுத்தி காசு பண்ணுவது மட்டும் தான்.

எங்கள் எதிரி மீதான *obsession* எதிரிக்கு சகுனம் பிழைக்க வேண்டும் என்பதற்காக எங்கள் மூக்கை நாங்களே அறுத்துக் கொள்ள வைக்கிறது. அகதி முகாம்களை வதை முகாம்கள் என்றோம்... ஹிட்லரின் *concentration camp* வதை முகாம்களோடு ஒப்பிட்டு. அவர்கள் எல்லாம் விசவாயு அடித்துக் கொல்லப்படுவதற்காக அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று.

கனடாவிலும் அமெரிக்காவிலும் இரண்டாம் உலக யுத்தத்தின் போது ஜப்பானியர்கள், ஜேர்மானியர்கள், இத்தாலியர்கள், உக்ரேனியர்கள் என நேசநாடுகளுடன் எதிர்த்துப்

போரிட்ட நாடுகளின் வம்சாவளியினர் *internment camps* எனப்படும் முகாம்களில் உளவுக குற்றச்சாட்டிலும் ஆதரவு வழங்கிய சந்தேகத்திலும் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள். சூழலியல் விஞ்ஞானி டேவிட் சுசுகி கூட இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டவர் தான். இந்த வாரம் கூட ரொறன்ரோ ஸ்டாரில் இத்தாலியர்கள் கனடாவில் இவ்வாறு அடைக்கப்பட்டிருந்ததை ஆவணப்படுத்துவதற்கு மத்திய அரசு தடுத்து வைக்கப்பட்டிருந்த இத்தாலியர்களிடம் விபரம் கேட்டிருக்கிறது.

இப்படியான தடை முகாம்களை இனப்படுகொலை செய்வதற்காக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஹிட்லரின் வதை முகாம்கள் என்று நாங்கள்... ஓநாய் வருகிறது என்று கூச்சல் போட்டுக் கொண்டிருந்தோம். யாருமே கணக்கெடுக்கவில்லை.

இந்த முகாம்களில் விபசாரம் நடக்கிறது என்று வாய் கூசால் அன்று அபலைகளாக வந்திருந்த எல்லாப் பெண்கள் மீதும் விபசார முத்திரை குத்தினோம். எங்களுக்கு எங்கள் மூக்கு போனது பிரச்சனையில்லை. எதிரிக்கு சகுனம் பிழைக்க வேண்டும் என்பது முக்கியம்.

மகிந்த மீது இனப்படுகொலை மீதான விசாரணை நடக்க வேண்டும் என்று கூக்குரலிடுகிறோம். இங்கே ஆர்ப்பாட்டங்கள் நடந்த போது கூட, கனடிய ஊடகங்களுக்கு பேட்டி கொடுத்த தமிழ் புத்திசீவிகளும் இனப்படுகொலை என்று கிளிப்பிள்ளை போலச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். காரணம் பொஸ்னியாவில், சூடானில், றுவாண்டாவாவில் நடைபெற்ற இனப்படுகொலைகளுக்கு சர்வதேசம் காட்டிய அக்கறையை எங்களிடம் காட்டும் என்ற அற்ப நம்பிக்கையில்.

இனப்படுகொலை என்பதற்கான வரைவிலக்கணம் என்ன? கொல்லப்பட்டவர்கள் தமிழர்கள் என்பது உண்மை. ஆனால் தமிழர்கள் எல்லாரும் கொல்லப்படவில்லை. தமிழர்கள் என்ற வெறும் காரணத்திற்காக, போராட்டங்களில் எந்த சம்பந்தமும் இல்லாத எல்லாத் தமிழர்களையும் கொன்றால் அது இனப்படுகொலை. ஜேர்மனியில் யூதர்களுக்கும் றுவாண்டாவில் ரூற்சிகளுக்கும் பொஸ்னியாவில் முஸ்லிம்களுக்கும் நடந்தது இதுதான். யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் பெருமளவில் மக்கள் கொல்லப்பட்டதை *massacre, slaughter* என்று யுத்தக் குற்றங்கள் என்ற வரையறைக்குள் அடக்கலாமே தவிர, இனப்படுகொலை என்று நாங்கள் சர்வதேசத்தை நம்ப வைக்க முடியாது. தீவிரவாதிகளை அழிக்கும் நோக்கத்தில் அப்பாவி மக்கள் செறிந்த இடங்களில், தீவிரவாதிகள் மறைந்திருந்தாலும் குண்டுதாக்குதல்கள் நடத்துவது யுத்தக் குற்றங்களுக்குள் அடங்கும். தெரிந்து கொண்டு திட்டமிட்டு மக்கள் அழிவைக் கருத்தில் எடுக்காமல் நடத்தும் தாக்குதல்கள் சர்வதேச கண்டனத்திற்குரியவை. அதைச் சாதகமாக்கி யுத்தக் குற்றங்களுக்கு விசாரணை நடத்த வேண்டும் என்று கோருவது நியாயமானது. ஆனால் இன அழிப்பு என்று கூச்சல் போடுவது அந்த நியாயத்தை மழுங்கடிக்கவே உதவும் என்பதை இவர்கள் இன்னமும் புரிந்து கொள்ளவில்லை. தமிழர்கள் எல்லோரும் கொல்லப்படுகிறீர்கள் என்றால் நீங்கள் எப்படி கொழும்பு வந்து கனடாவில் அகதிளாகுகின்றீர்கள் என்று கேட்க மாட்டார்களா?

வை.கோ, சீமான் சொல்லும் 'தமிழ்ப் பெண்கள் கதறக் கதற கற்பழிக்கப்படுகிறார்கள், தமிழ்த் தாய்மாரின் மார்பகங்கள் அறுக்கப் படுகின்றன' என்பதெல்லாம் இனஅழிப்பு விசாரணையில் சாட்சியமாகப் பயன்படுத்த முடியாது. யுத்தக்குற்றத்திற்கான ஆதாரங்களைத் தேட நீங்கள் எங்கே ஒற்றுமையாக இருக்கிறீர்கள்? நீங்கள் ஆளை ஆள் துரோகி என்று புலிகளின் சொத்துக்களைக் கைவசப்படுத்த சண்டை போட்டுக் கொண்டிருக்கிறீர்கள்.

*Genocide* என்று கூச்சல் போட்ட நாங்கள் தான் முஸ்லிம்களை வெளியேற்றி *ethnic cleansing* செய்ததை எந்த முகத்தோடு நியாயப்படுத்தப் போகிறோம்?

வெள்ளைக் கொடியோடு வந்த புலிகளின் தலைவர்களை படுகொலை செய்தது பற்றி நாங்கள் குமுறுகிறோம். சரணடைந்தவர்களைக் கொல்வது யுத்தக் குற்றம் தான். ஆனால் இதே புலிகள் தான் மக்கள் வெள்ளைக் கொடிகளோடு தப்பிச் செல்லும்போது சுட்டு விட்டு இராணுவம் சுட்டது என்று வெளிநாட்டில் செய்தி வெளியிட்டார்கள் என்ற உண்மையை மறந்து விடுகிறோம். மக்கள் போக விரும்பவில்லை, புலிகளோடேயே இருக்க விரும்புகிறார்கள் என்று சொன்ன நடேசன், எந்த முகத்தோடு வெள்ளைக் கொடியைத் தூக்கிக் கொண்டு தன்னுடைய உயிரைக்

**மக்கள் போக விரும்பவில்லை, புலிகளோடேயே இருக்க விரும்புகிறார்கள் என்று சொன்ன நடேசன், எந்த முகத்தோடு வெள்ளைக் கொடியைத் தூக்கிக் கொண்டு தன்னுடைய உயிரைக் காப்பாற்ற எதிரியிடம் சரணடைந்தார் என்ற கேள்வியை இன்று வரைக்கும் கேட்க ஒருவரும் தயாராயில்லை.**

காப்பாற்ற எதிரியிடம் சரணடைந்தார் என்ற கேள்வியை இன்று வரைக்கும் கேட்க ஒருவரும் தயாராயில்லை. காரணம், தங்களுடைய தறுதலைகளின் பொட்டுக் கேடுகள் வெளியில் வந்து விடும் என்ற பயம்.

யுத்தக்குற்றச்சாட்டுக்கள் பற்றிச் சொல்வோர் ஒரு விடயத்தை கவனத்தில் கொள்ள மறந்து விடுகிறார்கள். ஐ.நாவோ, சர்வதேச சமூகமோ நாங்கள் கேட்பது போல, மகிந்தவை மட்டும் விசாரணைக்குட்படுத்தாது. இந்தக் கோரிக்கை *double edged sword* என்பது போல, எங்களையும் வெட்டித் துண்டாடும். ஆரம்பத்திலிருந்தே ஐ.நாவும் மற்ற சர்வதேச அமைப்புகளும் புலிகள் மீதும் யுத்தக் குற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றே கூறி வருகின்றன. அவ்வாறான நிலை வரும் போது, அரசு என்ன செய்யும்? தங்கள் கட்டுப்பாட்டில் இருக்கும் கே.பி தொடக்கம் புலிகளின் இடைமட்டத் தலைவர்களைப் பயன்படுத்தி, புலிகளின் யுத்தக் குற்றங்களை அம்பலப்படுத்தும். அதற்கு நாங்கள் தயாரா? நாங்கள் தான் எதிரியின் சகுனம் பிழைக்க எங்கள் மூக்கை அறுக்கும் பழக்கமுடையவர்கள். எதிரியை அவமானப்படுத்த வேண்டும் என்ற ஒரே நோக்கில் அதற்கும் நாங்கள் தயாராக இருப்போம்.

மகிந்தவை மட்டும் குறை சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

---

**தன் கையில் அதிகாரமும் ஆதிக்கமும் இருக்கும் போது தனக்குக் கீழானவர்களை நாயிலும் கேவலமாக நடத்துவதில் யாழ்ப்பாணம் கை தேர்ந்தது.**

---

யாழ்ப்பாணத்திலிருந்து வந்திருந்த ஒரு குருவானவரிடம் கேட்டேன்... தமிழர்களை புலனாய்வுத் துறை கடத்திக் கொல்வதைப் பற்றி.

அவர் ஒரு வார்த்தையில் சொன்னார்... அட, இவங்கள் செய்யாத என்னத்தை அவங்கள் செய்தாங்கள்?

அரசியல் வேலைக்காக என்று வந்து ஆடிய ஆட்டத்தால் அவ்வளவுக்கு புலிகளால் மனம் சலித்துப் போயிருந்தவர்கள் யாழ்ப்பாணத்தவர்கள். புலிகளை விட, இராணுவம் பரவாயில்லை என்ற மனநிலையில் இருந்தார்கள். நாங்கள் இங்கே இருந்து கொண்டு மகிந்த மீது கறுவிக் கொண்டிருக்கிறோம்... எங்கள் தறுதலையின் சேட்டைகளைப் பற்றிக் கதைக்காமல்!

அடுத்ததாக, நாங்கள் பாதிக்கப் பட்டவர்கள் *victims* என்ற முகமூடியுடன் அனுதாபம் தேடத் தொடங்கியிருக்கிறோம். நாங்கள் அப்பாவிகளைப் போட்டு அடிக்கும் போது தட்டிக் கேட்பவர்களைப் பார்த்து, பேசாமல் உன்ரை வேலையைப் பார் என்று சொல்கின்ற நாங்கள் எங்களுக்கு அடி விழும்போது ஐயோ, இந்த அநியாயத்தை கேட்பார் யாருமே இல்லையா என்று ஒப்பாரி வைப்பது எங்கள் பழக்கமாகவே இருந்து வருகிறது.

உங்களுக்குத் தெரியும், பள்ளிக்கூடங்களில் சில மாணவர்கள் மற்றவர்களுடன் சொறிச் சேட்டைகளில் ஈடுபடுவார்கள். காரணமில்லாமல் அடிப்பார்கள். ஒரு பெடிப்பிள்ளை ஒருநாள் விசயம் தெரியாமல் ஒரு அப்பாவியின் மேல் கை வைத்திருக்கிறார். அதுவரை நாள் பொறுத்திருந்த அப்பாவி திருப்பி விளாசி விட்டான். இவர் அழத் தொடங்கியிருக்கிறார். வாத்தியார் கண்டு வந்து கேட்டார். ஆர் சண்டை தொடக்கினது? அப்பாவி சொன்னான், அவன் தான் முதலில் எனக்கு அடிச்சான். மற்றவர் சொன்னார், இல்லை, அவன் தான் முதல்ல எனக்கு திருப்பி அடிச்சான்.

நாங்கள் பாதிக்கப்பட்டவர்கள் என்பதும் இவ்வாறானது தான். சண்டையைத் தொடங்கி அடி வாங்கி விட்டு அநியாயத்தைக் கேட்பார் யாருமே இல்லையா என்ற ஒப்பாரி. எங்கட தலைவருக்குத் திருப்பி அடிச்சுப் போட்டான் என்பது தான் எங்களின் பிரச்சனை. ஏன் தலைவர் முதல் அடிச்சார் என்று கேட்க மாட்டோம். ஏனென்றால் அது எங்கள் செல்லப்பிள்ளை.

ரொறன்ரோ நகரத்தைச் சுற்றி மனிதச் சங்கிலிப் போராட்டம் நடக்கிறது. நெஞ்சில் அடித்துக் கதறிக் கொண்டே காப்பாத்து, காப்பாத்து என்று பகிரங்கமாக வெட்கத்தை விட்டு ஓலமிடுகிறோம். பார்த்தால், ரொறன்ரோவின் மையப் பகுதியின் முனையான யூனியன் சப்வே நிலையத்தின் முன்பாக, கெரில்லாச் சீருடையில் நெஞ்சை நிமிர்த்தி ஒரு கூட்டம் போஸ் கொடுக்கிறது. நாங்கள் என்ன சொல்ல வருகிறோம்? நாங்கள் பாதிக்கப்பட்டவர்கள், எங்கள் மீது இரக்கம் கொண்டு காப்பாற்றுங்கள் என்று கெஞ்சுகிறோமா? இல்லை, பயங்கரவாத இயக்கம் என்று தடை செய்யப்பட்ட இயக்கத்தை அங்கீகரித்து எங்கள் பயங்கரவாதத்தை அங்கீகரியுங்கள் என்கிறோமா?

தலைவர் இறந்து விட்டார் என்றதும் கருப்பு உடைகளுடன் போய் பகிரங்கமாவே மரணச் சடங்கில் ஒப்பாரி வைத்தது போல கூத்துக் காட்டுகிறோம். நாங்கள் பாதிக்கப்பட்டவர்கள் என்றால் ஏன் புலிக் கொடி பிடிக்கிறோம்?

யாழ்ப்பாணத்தவர்கள் தங்களை பாதிக்கப்பட்டவர்கள் என்று கூறும் போது அருவருப்பும் எரிச்சலும் தான் வருகிறது. வன்னி

மக்கள் தாங்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் என்று கருணை காட்டுமாறு கேட்பதில் நியாயம் இருக்கிறது. யாழ்ப்பாணத்தவர்களைப் போல மணி ஓடர் பொருளாதாரத்தை நம்பியிராமல், மண்ணையும் மழையையும் நம்பி வாழ்ந்த மக்களை எதிரியிடம் கை ஏந்த வைத்தது யார்? அந்த பூமியை ஆக்கிரமித்து அவர்களின் பொருளாதாரத்தைக் கெடுத்தது மல்லாமல், அவர்களின் குழந்தைகளைப் பிடித்துக் கொண்டு போய் பலி கொடுத்த கூட்டம் அந்த அகதிகளைக் காட்டிப் பிச்சை எடுக்க முயற்சிப்பதைப் பார்த்து அருவருப்படையாமல் என்ன செய்ய முடியும்?

இன்றைக்கும் யாழ்ப்பாணத்தில் சிங்கள அரசியல்வாதி வந்தால் என்ன? வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் வந்தால் என்ன? கண்ணீரும் கம்பலையுமாய் காணாமல் போன தங்கள் பிள்ளைகளை, கணவன்மாரை கண்டுபிடித்துத் தருமாறு கெஞ்சும் அந்த மக்கள் தங்களை பாதிக்கப்பட்டவர்கள் என்று சொல்வதில் நியாயம் இருக்கிறது.

யாழ்ப்பாணம் தன்னை பாதிக்கப்பட்டவர்கள் என்று கூறும்போது எரிச்சல் வராதா? தன் கையில் அதிகாரமும் ஆதிக்கமும் இருக்கும் போது தனக்குக் கீழானவர்களை நாயிலும் கேவலமாக நடத்துவதில் யாழ்ப்பாணம் கை தேர்ந்தது. தன்னுடன் அதே பூமியில் வாழ்ந்த மக்களை தீண்டத்தகாதவர்கள் என்று சொல்லி கோயில்களிலும் உணவகங்களிலும் சமமாக நடத்தாமல் திமிர் காட்டிய பூமி அது. அந்த மக்கள் தாங்களும் மனிதப் பிறவிகள் என்பதை நிலை நாட்ட எத்தனை போராட்டங்கள் நடத்த வேண்டி வந்தது? அந்த மக்களை அடக்கி வைத்திருந்த இந்த யாழ்ப்பாணத்திற்கு தன்னை ஒரு பாதிக்கப்பட்டவர் என்று சொல்வதில் வெட்கமாயில்லையா?

மலையகத்திலிருந்து சின்னம் சிறுசுகளைக் கொண்டு வந்து அடிமைகளாக வைத்து வேலை வாங்கியது தானே இந்த யாழ்ப்பாணம்? பழஞ்சோறு கொடுத்து, கொதி எண்ணெய் ஊற்றி, நஞ்சு வைத்துக் கொன்று என யாழ்ப்பாணம் செய்த கொடுமைகளை நேரில் கண்டவன் நான். அங்கே சாப்பாடு இல்லாமல் கிடந்ததுகளுக்கு கொண்டு வந்து சாப்பாடு குடுத்தனாங்கள் தானே என்று ஏதோ புண்ணியம் செய்த திமிர்க்கதை கதைத்தது இந்த யாழ்ப்பாணம். இந்த சமூகத்திற்கு தன்னை ஒரு பாதிக்கப்பட்டவர் என்று ஒப்பாரி வைக்க என்ன தார்மீக உரிமை இருக்கிறது?

அந்த மண்ணில் நூற்றாண்டுகளாக வாழ்ந்த இஸ்லாமிய மக்களை சொத்துக்களைப் பறித்து மணி நேரத்திற்குள் விரட்டிய போது, கயிறு கட்டிப் பாதுகாப்பு கொடுக்கிறார்கள் என்று கயிறு திரித்தது தானே இந்த யாழ்ப்பாணம். தன் மீது இரக்கம் காட்டு என்று சர்வதேச சமூகத்திடம் மன்றாட இந்த சமூகத்திற்கு என்ன யோக்கியதை இருக்கிறது?

மட்டக்களப்பிலிருந்து ஈழத்திற்காகப் போராட என்று வந்த போராளிகளை எரியும் டயருக்குள் எறிந்த போது கோலாக் கொடுத்த சமூகம் தானே இது. வன்னியிலிருந்து பிள்ளைகளைப் புலிகள் பிடித்து கட்டாயப் படை சேர்ப்பில் ஈடுபடுகிறார்கள் என்று சர்வதேசமே குற்றம் சாட்டிய போது, அவர்கள் விரும்பிச் சேர்கிறார்கள் என்று புலுடா விட்ட கூட்டம் தானே இது.

ஐயோ, இந்த அநியாயத்தைக் கேட்க யாருமே இல்லையா என்று புலம்ப இந்த சமூகத்திற்கு என்ன மனச்சாட்சி இருக்கிறது?

## என்ன கதை ஐயா இது? உங்களிடம் எங்கே இருக்கிறது ஆயுதம், கீழே வைப்பதற்கு? அவன் தானே வந்து எல்லாவற்றையும் பிடுங்கி கௌபீனத்தோடு விட்டு விட்டான்.

அதிகாரத்திலிருக்கும் போது செய்த அநியாயத்திற்கு பட்டு அனுபவிக்கும்போது எவன் வருவான் உங்களை மீட்க?

அநாதைப் பிணத்தைக் காட்டி கிடைக்கும் காசைச் சுருட்டும் திருட்டுக் கூட்டம் போல, அந்த அப்பாவிகளைக் காட்டி புலிகளுக்கு அங்கீகாரம் தேடி, ஈழம் பெறும் முயற்சிதான் நடக்கிறது.

இப்படிக் குத்தி முறிந்து குளறியும் யாருமே ஏன் நாயே என்று கேட்கவில்லை.

விடுமா இந்தக் கூட்டம்?

இனிமேல் ஆயுதப் போராட்டம் இல்லை. ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு விட்டோம். இன்று முதல் அகிம்சைப் போராட்டம். பாராளுமன்ற அரசியல் தான் தீர்வு.

யுத்தம் முடிந்து பாராளுமன்றத் தேர்தல் நடைபெறுகிறது. கூட்டமைப்பா? குதிரையமைப்பா? என்ற போட்டி. புத்தருக்கு போதி மரத்துக்கு கீழே ஞானம் பிறந்தது போல, இவர்களுக்கும் ஞானம் பிறக்கிறது. யுத்த முடிவில் கே.பி சொன்ன ஆயுதங்களை அமைதியாக்கும் கதையல்ல இது.

ஆயுதப் போராட்டத்தை கைவிடுகிறோம். இனிமேல் அரசியல் தீர்வு தானாம்.

என்ன கதை ஐயா இது? உங்களிடம் எங்கே இருக்கிறது

ஆயுதம், கீழே வைப்பதற்கு? அவன் தானே வந்து எல்லாவற்றையும் பிடுங்கி கௌபீனத்தோடு விட்டு விட்டான். இதென்ன புதுக்கதை? இன்று வரைக்கும் உங்கள் புனிதப் போராளிகள் தான் புதைத்து வைக்கப்பட்ட ஆயுதங்களைக் காட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இது வரை காலமும் இங்கே உள்ள அரசியல் கற்றுக்குட்டிகள் எல்லாம், அரசியல் தீர்வு சரி வராது என்று தீர்க்கதரிசனத்தோடு முடிவு எடுத்துத் தான் தேசியத் தலைவர் ஆயுதப் போராட்டத்தில் இறங்கியதாக இங்கே உள்ள ஊடகங்களுக்கு கதை சொல்லிக் கொண்டிருந்தார்கள். புலிகளின் ஆயுதப் போராட்டம் மக்களை அழிவுப்பாதைக்கு கொண்டு செல்கிறது என்று முன்னெச்சரிக்கை செய்தவர்களைத் துரோகியாக்கி மண்டையில் போட்டு புலி தாண்டவம் ஆடிய போது, மெய் சிலிர்த்தவர்கள் இவர்கள். பாராளுமன்ற அரசியல் சரிவராது என்று தானே கூட்டணி உட்பட்ட சகல அரசியல்வாதிகளையும் போட்டுத் தள்ளினார்கள். இப்போது என்ன திடீரென்று?

எம்.ஜி.ஆர், ஜெயலலிதா அரசுகளில் மந்திரியாக இருந்த திருநாவுக்கரசு பற்றி ஒரு கதை உண்டு. இவருக்கு மனைவியின் தங்கை மீது ஒரு கண். ஒரு நாள் மனைவியைக் கோயிலுக்கு அனுப்பி விட்டு, மனைவியின் தங்கையை தன் இச்சைக்குள்ளாக்கி விட்டார். மனைவி கோயிலிலிருந்து திரும்பி வந்த போது சொன்னராம்...

இன்று முதன் உன் தங்கையும் என் மனைவி!

இதைப் போல இவர்களும் இன்று முதல் நாங்கள் அகிம்சைப் போராட்டம்!

ஆயுதம் கையிலிருந்த போது, புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண வேண்டும் என்று சொன்னவர்களை எல்லாம் திட்டித் தீர்த்தவர்கள் இவர்கள். தலைவருக்கு எல்லாம் தெரியும். சர்வதேசம் எங்கள் விடுதலையை மழுங்கடிக்கப் பார்க்கிறது என்று வீரம் பேசியவர்கள் இவர்கள். திடீரென்று ஞானம் பிறந்து...

இன்று முதல் உன் தங்கையும் என் மனைவி!

ஆயுதங்களோடு பலம் வாய்ந்த நிலையில், இந்த ஆயுதப் போராட்டத்தால் நாங்கள் எதையும் சாதிக்கவில்லை, எங்கள் மக்களுக்கு அழிவு தான் மிஞ்சியது, இனிமேல் பேச்சுவார்த்தை மூலம் தான் அரசியல் தீர்வு காணப் போகிறோம் என்று சொல்லியிருந்தாலும் உலகம் மதித்திருக்கும்.

சமாதானப் பேச்சு நேரத்தில் புலிகள் மக்கள் படை அமைத்த போது, 'ஆணையிடு தலைவா, களமிறங்கக் காத்திருக்கிறோம்' என்று ஊர்வலமாய் கொடி பிடித்தவர்கள் இன்று, ஆயுதங்களை மட்டுமல்ல, ஆடைகளையே களைந்த பின்னால், பெரிய எடுப்பில், இனிமேல் ஆயுதப் போராட்டம் இல்லை என்றால் என்ன கதை இது?

சரி, ஆயுத ஒப்படைப்பு முடிந்தது. புதிதாகத் தொடங்கியிருக்கிறது... நாடு கடந்த அரசாங்கம். மக்களவை. சர்வதேசப் பரப்பில் எங்கள் ஆயுதமில்லாத அரசியல் விரிவடைகிறது.

எங்களை பாதிக்கப்பட்டவர்கள் என்று ஒப்பாரி வைத்துப் பார்த்தோம். ஏனென்று யாரும் கேட்பதாய் காணோம். ஆயுதப் போராட்டத்தைக் கைவிடுகிறோம், இனிமேல் அரசியல் தீர்வு தான் என்றும் சொல்லிப் பார்த்தோம். இந்தப் பருப்பு இங்கே வேகாது என்று தெரிந்ததும் ஆரம்பிக்கிறது வாக்களிப்புக் கூத்து. நாங்கள் எல்லாரும் வாக்களித்தால் சர்வதேசம் திரும்பிப் பார்க்குமாம். ஆகா.. ஜனநாயகத்தைக் கண்டுபிடித்து விட்டார்கள்.

இதுவரை காலமும் தேசியத் தலைவர் பிரபாகரன் தான் தமிழீழத்தைக் கண்டுபிடித்தார் என்று கதை விட்டுக் கொண்டிருந்தவர்கள் திடீரென்று தமிழர்கள் புலிகளுக்கு முன்பாகவே ஈழத்துக்கு ஆதரவு அளித்தார்கள் என்று வட்டுக்கோட்டை வாக்கெடுப்பு ஆரம்பித்தார்கள்.

உலகெங்கும் 99 வீதமான தமிழர்களின் ஆதரவுடன் வட்டுக்கோட்டை வாக்கெடுப்பு பெருவெற்றி.

மூன்று லட்சம் தமிழர்கள் வாழுகின்றார்கள் என்று மிரட்டும் கனடாவில் முப்பதாயிரம் பேர் வாக்களிப்பு. வெறும் பத்து வீதத் தமிழர்கள் தான் வாக்களிக்க வந்தார்கள் என்பதை மறைத்து 99 வீத சுத்தல் நடந்தது. வட்டுக்கோட்டை தீர்மானத்தின் சூத்திரதாரிகளை மண்டையில் போட்டு விட்டு வட்டுக்கோட்டைப் பிணத்தை தோண்டியெடுத்து கூத்து நடந்தது.

பின்னால் நாடு கடந்த ஈழ வாக்கெடுப்பு... பிறகென்ன...? எங்கட ஒற்றுமையை, பலத்தைக் காட்டியிட்டம். இதோ ஆதாரம்... நாங்கள் எல்லாம் ஈழத்துக்குத் தான். .. சர்வதேசம் அங்கீகரிக்காமல் இருக்கட்டும் பாப்பம்! பிறகு நடக்கிறதை! இனிமேல் அபே ஆண்டுவ தான்! பொங்கிப் பூரித்துப் போயிருக்கிறோம்.

திபெத்தியர்கள் கூட சமீபத்தில் இந்திய கட்டுப்பாட்டில் உள்ள தர்மசாலாவில் தேர்தல் நடத்தினார்கள். அவர்களுக்கு சர்வதேசத்தால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியாக தலாய் லாமா உள்ளார். எங்களுக்கு? எங்களுடைய முகமது இபின் துக்ளக் தான் இருக்கிறார்.

ஐரிஸ் குடியரசு

இராணுவத்தின் அரசியல் பிரிவான சின் பெயின் அமைப்பின் ஜெரி அடம்ஸ் ஒவ்வொரு சென்.பற்றிக்ஸ் தினத்திற்கும் வெள்ளை மாளிகைக்கு அழைத்துக் கௌரவிக்கப் பட்டிருந்தார். இனிமேல் உருத்திரகுமாரனை அடுத்த பொங்கலுக்கு ஒபாமா வெள்ளை மாளிகை நீள்வளைய அலுவலகத்தில் அழைத்து விருந்து வைப்பார் என்று இந்தத் தமிழர்கள் கனவு கண்டு கொண்டிருக்கக் கூடும். காணும் கனவோடு கனவாக, ஐ.நா சபையில் பார்வையாளர் அந்தஸ்து பெற்று அரபாத் உரையாற்றியது போல, பான் கி மூனும் உருத்திரகுமாரனை அழைப்பார் என்று கனவைக் காணட்டும்.

இந்த நாடு கடந்த ஈழத்திற்கு புலன் பெயர்ந்தவர்களின் அங்கீகாரமும் இல்லை. ஈழத்தில் உள்ளவர்கள் ஐயோ, எங்கள் நிம்மதியைக் குலைக்காதீர்கள் என்று ஓலமிடுகிறார்கள். ஆனால் இவர்களோ சர்வதேச அங்கீகாரம் கிடைக்கும் என்ற கனவில் பிரதமர், மந்திரிசபை என்று கும்மாளம் போடுகிறார்கள். ஒரு அமர்வு முடிவதற்கு முன்னாலேயே எதிர்க்கட்சி பிறந்து விட்டது. மந்திரிப்பதவி கிடைக்காதவர்கள் அரசிலிருந்து வெளியேற்றம். எங்களுக்கு வந்து கிடைத்திருக்கிற முகமது இபின் துக்ளக்கு புத்தி இருந்திருந்தால், எல்லாருமே இலாகா இல்லாத மந்திரிகள் என்றிருந்தால் பிரச்சனை தீர்ந்திருக்கும்.

இப்போது நாடு கடந்த அரசும் எதிர்க்கட்சியும் பாராளுமன்ற அமர்வுக்கு வெளியில் மொட்டை நோட்டீஸ் விட்டுக் கொண்டு திரிகிறார்கள்.

இவ்வளவு திருக்கூத்து நடத்துபவர்களுக்கு இன்னமும் இன்றைய தங்கள் நிலைக்கு காரணம் என்ன என்பதை விளங்கிக் கொள்ளும் அளவுக்கு

## எங்கட பொட்டுக்கேட்டை நாங்கள் வெளியில காட்டக் கூடாது. இது யாழ்ப்பாணத்தின் எழுதப்படாத விதி.

விபரமும் இல்லை. துணிச்சலும் இல்லை. இவ்வளவு கூத்து நடந்தும் இன்னமும் இவர்கள் ஒரு முழு அளவிலான உளவிசாரணைக்கு, *soul searching*, எங்கள் மாற்றுக்கருத்து நண்பர்களின் பாசையில் சொல்வதாயின், சுயவிமர்சனத்துக்கு தயாராக இல்லை.

ஆங்காங்கே குசுகுசுக்கிறார்கள். பொருமுகிறார்கள். முணுமுணுக்கிறார்கள். யாரும் முழுமையாக இந்த இழிவுநிலையின் அடிமுடியைத் தெரிந்து கொள்ளத் தயாராக இல்லை. காரணம்... தங்கள் மீது வன்முறை நிகழலாம் என்ற பயம். இதுவரையும் மற்றவர்களை வன்முறையைக் காட்டிப் பயப்படுத்தியவர்கள் இன்று தங்களுக்குள் நிகழும் வன்முறைகள், மிரட்டல்கள் குறித்து மூக்கால் அழுகிறார்கள்.

புதினப்பலகையில் ஒரு கட்டுரை வருகிறது... புலன் பெயர் ஊடகங்கள் எல்லாம் புலிகளின் கருத்துக்களைப் பிரதிபலிப்பதற்காக இயங்கினவே தவிர தமிழ் மக்களின் நலன் சார்ந்து அல்ல. புதிய கண்டுபிடிப்பு.

கனடிய வானொலி



அறிவிப்பாளர் ஒருவர் கட்டுரை எழுதுகிறார்... கனடாவில் மக்களின் சொத்துக்கள் தனியார்களின் கையில் உள்ளன. அதாவது புலிகளின் சொத்துக்கள் பினாமிகளின் கையில் உள்ளன. இன்னொரு மகத்தான கண்டுபிடிப்பு. என்னால் இன்னமும் கண்டுபிடிக்க முடியாத ஒரு உண்மை இருக்கிறது. இந்த மக்கள் என்று சொல்லப்படுபவர்கள் யார்? மக்களிடம் சொத்துக்களை திருப்பிக் கொடுக்க வேண்டும் என்றால் யாரிடம் திருப்பிக் கொடுப்பது?

எங்கள் ஊரில் ரயில் என்ஜின் ராசையா அண்ணை என்று ஒருவர் இருந்தார். சித்த சுயாதீனம் இழந்தவர். இவர் ரயில்வே பாதுகாப்பு உத்தியோகத்தர் போலவே உடுத்தியிருப்பார். தன்னை ஒரு ரயில் சாரதியாகவே நினைத்துக் கதை சொல்லிக் கொண்டிருப்பார். ஒரு தடவை தண்டவாளத்தில் படுத்திருந்த யானையை தான் எப்படி ரயிலை நிறுத்தி பின்னால் போய் பெட்டிகளை கழற்றிவிட்டு வேகமாய் வந்து அடித்துக் கொன்றார் என்பதை வர்ணித்துக் கொண்டிருந்ததை சிறுவயதில் கேட்டுக் கொண்டிருந்தேன். தான் அடித்த அடியில் நெய் சிதறிக் கிடந்தது என்ற போது நானும் விசயம் விளங்காமல் நெய் என்றால் என்ன என்று கேட்ட போது மூளை என்று சிம்பிளாய் பதில் சொன்னார்.

எங்கள் ஊரில் யாரோ இறந்த போது, பாடை கட்டி ஊர்வலமாய் கொண்டு போய் மயானத்தில் சிதையின் மேல் உடலை வைத்து இறுதிக் கிரியைகள் செய்து கொண்டிருக்கிறார்கள். அங்கே வந்த ராசையா அண்ணை பிணத்தின் கையைத் தூக்கிப் பார்த்து விட்டுச் சொன்னார்....

ஆள் முடிஞ்சுது!

அதாவது ஊர் முழுக்கத் தெரிந்த உண்மை அப்போது தான் ராசையா

அண்ணைக்கு தெரிந்திருக்கிறது.

அதைப் போல, இருபது வருடங்களாக நாங்கள் சொல்லிக் கொண்டிருந்த உண்மை இப்போது தான் இவர்களுக்குத் தெரிந்திருக்கிறது.

புலிகளின் ஆயுதப் போராட்டம் அழிவுக்கு வழி வகுக்கிறது. புலன் பெயர்ந்த ஊடகங்கள் புலிகளுக்கு சரியான வழியைக் காட்டாமல் சீரழிக்கின்றன. போராட்டத்திற்காக சேர்த்த பணத்தை பலர் கையாடுகிறார்கள்.

இத்தனை வருடங்களாக இதை நாங்கள் சொல்லிக் கொண்டிருநத போது எங்களைத் துரோகிகள் என்று தூற்றியவர்கள் இன்று ராசையா அண்ணையைப் போல இந்த உண்மையைக் கண்டு பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இருபது வருடங்களுக்கு முன் தாயகத்தில் எழுதியிருக்கிறேன்... யாழ்ப்பாணத்து பிராங்கென்ஸ்டைன் பற்றி. யாழ்ப்பாணம் ஒரு பிராங்கன்ஸ்டைன் மிருகத்தை உருவாக்குகிறது. அது தன்னை உருவாக்கியவர்களையும் அழித்து

**திட்டமிட்டு புலிகளால் இந்த இனத்தின் சிந்தனை எழுச்சி மழுங்கடிக்கப்பட்டது. மிஞ்சியது யார்? பதவிகளுக்காகவும், தங்கள் சமூக விரோதச் செயல்களுக்குப் பாதுகாப்புத் தேடுவதற்காகவும் புலிகளோடு ஒட்டிக் கொண்ட அயோக்கியர்கள் தான் மிஞ்சினார்கள்.**

தன்னையும் கடைசியில் அழிக்கும் என்று. 'பட்டுத்துகிலுக்கு ஆசைப்பட்டு கோவணத்தையும் இழக்கப் போகிறோம்', 'நாயர் பிடித்த புலிவால்' தமிழர்களை அழிக்கப் போகிறது என்றெல்லாம் ஏடு இட்டோர் இயலில் எழுதியிருந்தேன்.

தேசியத் தலைவர் மாதிரி நான் ஒரு தீர்க்கதரிசி இல்லை. ஆனால் என் சிற்றறிவுக்கு இந்த உண்மைகள் அப்போதே தெரிந்திருந்தன.

இவர்களுக்கு இப்போது தான் எல்லாம் ஓடி வெளிச்சிருக்கிறது, ரயில் என்ஜின் ராசையா அண்ணை போல!

முழுமையாக இந்த அழிவுக்கான காரணத்தை இன்னமும் அறிந்து கொள்வதில் இவர்களுக்கு விருப்பம் இல்லை.

அதுவும் எங்கள் யாழ்ப்பாணப் புத்தி தான்.

உங்களுக்குத் தெரியும். அங்கே ஒவ்வொரு ஊரிலும் பல வீடுகளில் பல இரகசியங்கள், பரகசியங்கள் இருக்கும். எல்லாருக்கும் தெரிந்தது. யாருமே அதைப் பற்றி பேச மாட்டார்கள். எங்கட பொட்டுக்கேட்டை நாங்கள் வெளியில காட்டக் கூடாது. இது யாழ்ப்பாணத்தின் எழுதப்படாத விதி. எங்கட பல்லைக் குத்தி மற்றவனுக்கு மணக்கக் குடுக்கக் கூடாது. இது என் காதுபடக் கேட்ட திருவாசகம்.

சிறுவர்களான எங்களுக்கு இதில் பல விடயங்கள் தெரியாது. வேலிச்சண்டை வரும். கிணற்றடிச் சண்டை வரும். அப்போது தான் யார் யாரோடு படுத்தது? யார் யாருக்குப் பிள்ளை பெற்றது? யார் யாருடைய பிள்ளையை அழித்தது? எல்லா விபரங்களும் வானலையில் தவழ்ந்து வரும்.

எங்களுக்குக் காலங் காலமாய் கற்பிக்கப்பட்டது இது தான். பொட்டுக்கேடுகளை மூடி மறை!

இன்றைய அழிவுக்கான காரணம் என்ன? அதன் சூத்திரதாரிகள் யார்? என்பதெல்லாம் எங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் அதை பகிரங்கமாக பேசுவதற்கு நாங்கள் தயார் இல்லை. காரணம், எங்கள் பொட்டுக்கேடுகள் அம்பலமாகி விடும்.

இதனால் தான் இன்று வரைக்கும் தேசியம், புனிதப் போராளிகள், மாவீரர்கள் என்று புலுடா விட்டுக் கொண்டிருக்கிறோம். அதைப் பேச விரும்புகிறவர்களையும் இன உணர்வைக் காட்டி ஒரு குற்ற உணர்வுக் குள்ளாக்கி, அதைக் கதைக்கிறது எத்தனை பேருடைய வாழ்க்கையைப் பழுதாக்கிப் போடும் என்று பயமுறுத்தி மூடி மறைத்துக் கொண்டிருக்கிறோம்.

இதையெல்லாம் விசாரிக்கப் புறப்பட்டால், எங்களுடைய தவறுகள் அம்பலமாகி நாங்கள் தான் குற்றவாளிகள் என்று முடிந்து விடும். இதனால் கதையை மாற்றி குஞ்சப்புவைப் போல, விளையாட்டுத் தெரிஞ்சபடியால் தப்பியிட்டம் என்று சமாளித்துக் கொண்டிருக்கிறோம், எங்களை!

ஒவ்வொரு சமூகத்திலும் புத்திஜீவிகள் இருக்கிறார்கள். இவ்வாறான அழிவுகளின் போது முதலில் மௌனம் கலைப்பது அவர்கள் தான். தங்களுடைய சமூகம் இந்த இழிநிலைக்கு வந்த காரணம் என்ன என்பதை ஆராய்வது அவர்கள் தான்.

எங்கள் சமூகத்திலிருந்த புத்திஜீவிகள் எங்கே போய் விட்டார்கள்? எங்கள் சமூகத்தில் படித்தவர்கள் இருந்தார்களே தவிர, சிந்தனையாளர்கள் இருந்ததில்லை. 'மந்தைப்புத்தி' ஜீவிகள் தான் எங்கள் இனத்தில் இருக்கிறார்கள். கோழி

மேய்த்தாலும் கொர்ணமேந்தில மேய்க்க வேணும் என்பதற்காக பல்கலைக்கழகம் போனவர்கள் இவர்கள். இவர்களின் சிந்தனை எந்த விதத்திலும் வளர்ச்சியடைந்ததில்லை. பல்கலைக்கழகம் போனவர்கள் கூட அதைக் காட்டி சீதனம் வாங்குவதிலேயே குறியாக இருந்தார்கள்.

எமது சமூகம் மாற்றுச் சிந்தனையாளனை அங்கீகரித்ததில்லை. அவனை மட்டம் தட்டுவதிலேயே கண்ணாயிருந்தது. தனித்துவத்தை ஜீரணிக்க முடியாத கூட்டம் இது.

இந்த சாம்பலிலிருந்து எழுந்த பீனிக்ஸ் புலி என்ன செய்யும்? தமிழில் அரசியல் பிரக்ஞை, சமூகப் பிரக்ஞை உள்ள எல்லாரையும் போட்டுத் தள்ளியது. சிந்திக்கத் தெரிந்தவர்கள் மண்டியிட வைக்கப்பட்டார்கள். *Character assasination* செய்யப்பட்டு அவமானத்தால் மனம் வெதும்பி வெளியேற நிர்ப்பந்திக்கப் பட்டார்கள். கொல்லப்பட்டார்கள்.

உலக நாடுகளிலெல்லாம் முற்போக்குச் சிந்தனை கொண்ட பல்கலைக்கழகங்கள் போல இல்லாமல் தமிழ்த்தேசியக் குட்டையில் மட்டைகளை ஊறப் போட்டுக் கொண்டிருந்தது யாழ் பல்கலைக்கழகம். மத அமைப்புகள், இலக்கிய அமைப்புகள், ஊடகங்கள், பத்திரிகையாளர்கள் என எல்லாம் புலிகளால் மண்டியிட வைக்கப் பட்டன. ஊதுகுழல் களாக்கப்பட்டன. முடியாதவை நிர்மூலமாக்கப்பட்டன.

மற்ற இயக்கங்கள், கட்சிகளில் இருந்த சிந்திக்கத் தெரிந்தவர்கள் புலிகளால் விசேடமாகக் குறி வைக்கப்பட்டார்கள்.

திட்டமிட்டு புலிகளால் இந்த இனத்தின் சிந்தனை எழுச்சி மழுங்கடிக்கப்பட்டது. மிஞ்சியது யார்? பதவிகளுக்காகவும், தங்கள் சமூக விரோதச் செயல்களுக்குப் பாதுகாப்புத் தேடுவதற்காகவும் புலிகளோடு ஒட்டிக் கொண்ட அயோக்கியர்கள் தான் மிஞ்சினார்கள்.

பேராசிரியர் ரத்தினஜீவன் கூல் துணை வேந்தராக நியமிக்கப்பட்ட போது, புலிகள் குதிரை மூலமாக மாணவர்களைத் திரட்டி நடத்திய கூத்து எங்களுக்குத் தெரியும். தற்போது அவர் மீண்டும் அந்தப் பதவிக்கு நியமிக்கப்படலாம் என்றதும் இங்குள்ள கொல்கலாசார வானொலி செய்தி வெளியிடுகிறது. சென்ற தடவை அவர் நியமிக்கப்பட்ட போது, மாணவர்களின் எதிர்ப்புக் காரணமாக பதவியேற்க முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சிந்தனை எழுச்சி எப்படி வரும்? ஆன்மாவுக்கான தேடல் எப்படி வரும்?

தென்னாபிரிக்காவில் *Truth and reconciliation* என்று உண்மையை அறிந்து பரஸ்பர புரிந்துணர்வை ஏற்படுத்தும் முயற்சி போல, எங்கள் மண்ணில் எப்படி வரும்?

---

**புலிகளைப் பாதுகாப்பது என்பதை விட, அவர்களை நம்பிய பொட்டுக்கேட்டை, அவர்களின் தோல்வியால் ஏற்பட்ட அவமானத்தை மறைக்க, எங்களுடைய நிலைக்கான காரணங்களை ஆராயாமல் மற்றவர்களைக் குற்றசாட்டுவதன் காரணம் இதுதான்.**

அப்படி ஒன்று வந்தால், புலிகளால் மக்களுக்கு இழைக்கப்பட்ட அக்கிரமமும் அட்டுழியமும் அநியாயமும் அம்பலத்திற்கு வந்துவிடும், அதன் பைனான்சியர்கள் யார் என்ற உண்மை வெளியில் வந்து விடும்.

இப்படியாக இத்தனை அழிவுகளைக்கு உள்ளாகிய பின்பும் தன்னுடைய யாழ்ப்பாண மனோபாவத்தை அழிக்க மறுத்துக் கொண்டிருக்கிறது இந்த இனம்.

முன்பு புலிகள் இருந்தபோது, புலிகளின் போக்கு மக்களை அழிவுப்பாதைக்குள் கொண்டு செல்கிறது என்று சுட்டிக் காட்டினோம். சும்மா அவங்களை தேவையில்லாமல் விமர்சிக்கினம், போராட்டத்தைப் பின்னடையச் செய்யினம், கொச்சைப்படுத்தினம் என்றார்கள். இப்ப அவங்களோட சேர்ந்து அடிபட்டு ஈழத்தைப் பிடிப்பம், பிறகு எங்கட பிரச்சனை தீர்த்துக் கொள்வோம் என்றார்கள்.

முன்பு கூட்டணியும் சாதிப்பிரச்சனைக்கும் இதைத் தான் சொன்னது, முதல்ல எங்களோட சேருங்கோ, பிறகு எங்கட பிரச்சனையை தீர்ப்பம்.

ஒருபோதுமே தங்களின் தவறை உணர்ந்து திருந்தும் பழக்கம் இந்த சமூகத்திற்கு கிடையாது.

இப்போது கேட்கிறார்கள்... அவங்கள் இப்ப இல்லை, பிறகென்னத்துக்கு பழசுகளைக் கிளறுறியள்?

சீசரின் மனைவி சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவர், தலைவரும் புலிகளும் புனிதமானவர்கள், விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவர்கள் என்று மூடி மறைக்கவே இந்த சமூகம் இன்றும் முனைகிறது.

எங்களுடைய சமூகத்தில் இப்படி ஒருவன் மாற்றுக் கருத்தைச் சொன்னால், அவன் யார்?

அவனுடைய பின்னணி என்ன? என்று அவனை ஒரு வகைப்படுத்தி முத்திரை குத்தி, அவனுடைய தனிப்பட்ட விடயங்களை விமர்சித்து அவனை மட்டம் தட்டி விரட்டுவதில் அக்கறை காட்டுவதைத் தவிர இந்த சமூகம் வேறெதையும் செய்ததில்லை. குலத்தளவே ஆகுமாம் குணம் என்று சொல்லி வைத்திருக்கிறது இந்தச் சமூகம். ஊரோடு ஒத்தோடு என்று கற்பிக்கின்ற சமூகம் எந்த ஒரு மனிதனுக்கும் தனித்துவம் இருப்பதை மறுக்கிறது. அவன் இன்ன சாதியைச் சேர்ந்தவன், இன்ன இயக்கத்தைச் சேர்ந்தவன் என்பதால் அவனது இயல்பும் பொதுவானதாகத்தான் இருக்கும் என்பது தான் இந்தச் சமூகத்தின் முடிவு.

இன்றைக்கு, என்னைப் பார்த்துக் கூட, உவர் இப்ப உவையோடு நிக்கிறார் என்றோ, உவைக்காண்டி வேலை செய்யிறார் என்றோ சொல்லக் கூடும்.

குலத்தளவே ஆகும் குணம் என்று மட்டம் தட்டி விட்டுப் போவதன் மூலம் என்ன செய்கிறோம்?

சொல்லப்படுகின்ற மாற்றுக் கருத்தில் உண்மை இருக்குமா என்ற விவாதத்தை அத்தோடு நிறுத்தி விடுகிறோம். காரணம் என்ன? எங்களுடைய தவறுகளை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் எங்களுக்கு இல்லை. சும்மா பழசைக் கிளறிக் கொண்டிருக்கிறார் என்று உதறி விட்டுப் போவதன் காரணம் என்ன? பொட்டுக்கேடுகள், வண்டவாளங்கள் வெளியில் வந்து நாறிவிடும். எனவே பழையதைக் கூட்டி நிலவிரிப்பின் கீழ் மறைத்து விட்டு வருபவர்களுக்கு நாங்கள் சுத்தமானவர்கள் என்று காட்டுவதில் தான் எங்களுக்கு அக்கறை. பிரச்சனைகளை மூடி மறைத்தே பழக்கப்பட்டவர்கள் நாங்கள். காதல் வந்தால் கூட, உணர்ச்சிகளை அடக்கி, குடும்பத்திற்கு பயந்து, கௌவரத்திற்காக கலியாணம் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கும் சமூகத்திலிருந்து வந்தவர்கள் நாங்கள். உணர்ச்சிகளை அடக்கி, மற்றவர்களின் விருப்புகளுக்கும் வெறுப்புகளுக்குமாக வாழ வேண்டும் என்று நிர்ப்பந்திக்கும் இனத்திலிருந்து வந்தவர்கள் நாங்கள். எதையும் திறந்த மனதோடு எதிர்கொண்டும் விவாதிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்காத பரம்பரையினர் நாங்கள். பிழையையும் உண்மையையும் ஏற்றுக் கொள்ளாமல் விதண்டாவாதம் பண்ணி அதகடிக்கும் பழக்கம் கொண்டவர்கள் நாங்கள். பிரச்சனைகளைப் பற்றி விவாதிக்காமல், பேசாமல் விடுவதன் மூலம் பிரச்சனைக்கான காரணத்தை, அதில் எங்களுடைய பங்களிப்பை மூடி மறைக்கலாம் என்று பாசாங்கு பண்ணிக் கொண்டிருக்கிறோம்.

**மற்றவர்களை முட்டாள்கள் என்று கதை சொல்வதை நாங்கள் நிறுத்த வேண்டும். நாங்கள் சொல்வது பொய் என்பது எங்களுக்குத் தெரியும். இருந்தாலும் அதை மற்றவன் நம்ப வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.**

புலிகளைப் பாதுகாப்பது என்பதை விட, அவர்களை நம்பிய பொட்டுக்கேட்டை, அவர்களின் தோல்வியால் ஏற்பட்ட அவமானத்தை மறைக்க, எங்களுடைய நிலைக்கான காரணங்களை ஆராயாமல் மற்றவர்களைக் குற்றசாட்டுவதன் காரணம் இதுதான்.

பழசைத் தோண்டினால் நாறும் என்பது எங்களுக்கு நன்றாகவே தெரியும். எங்களுடைய பழைய பெருமையைக் காட்ட தோண்டினோம்... கந்தரோடையில். கிணறு வெட்டப் பூதம் வந்த மாதிரி, புத்தவிகாரைகள் வந்தன. அத்தோடு பழையதைத் தோண்டுவதை நிறுத்தி விட்டோம். பழையதைத் தோண்டினால் தானே பிரச்சனை என்று புதிதாகத் தோண்ட வெளிக்கிட்டோம்... பங்கர்களையும் புதைகுழிகளையும். இன்று முழு இனத்தையும் அதன் எதிர்காலத்தையும் சேர்த்து புதைத்து விட்டோம்.

பெரியோர்களே, நண்பர்களே, ஆர்வலர்களே,

ஊருக்கு வா கவனிப்போம் என்றவர்கள் எல்லாம் இன்று காணாமல் போய் விட்டார்கள். இருந்தாலும் யாழ்ப்பாணப் பாரம்பரியத்தை தொடர்ந்தும் பேண இங்கே இருக்கிறார்கள் புத்திஜீவிகள்... உண்மையைச் சொல்வதென்றால் இதுவரைக்கும் தன்னுடைய சிந்தனைகளால் எங்களைப் பிரமிக்க வைத்த எவரையும் நான் கண்டதில்லை. புத்திஜீவிகள் என்று தங்களை நினைத்துக் கொள்பவர்கள் இங்கே ஏராளம்.

இவர்கள் மண்டையில் போடுவதை மனதார ஏற்றுக் கொண்டாலும், வெளியில் 'அவரோட கருத்துக்களோட எனக்கு உடன்பாடில்லை' என்று புத்திஜீவித்தனமாக வேசம் போடுபவர்கள். இவர்களிடம் எதிரியை மடக்க கடைசியாக விடும் பெரிய நாகாஸ்திரம் ஒன்று இருக்கும்.

அதுதான்... அப்ப உம்மட தீர்வு என்ன?

எங்களைக் கேட்காமலேயே ஆயுதப் போராட்டம் தான் தீர்வு என்று படுகுழிக்குள் கொண்டு போனவர்களைப் பார்த்து வாய் திறக்காதவர்கள் எல்லாம்

## எங்களுடைய அழிவின் முதல் காரணமே, நாங்களே சொன்ன பொய்களை நாங்களே நம்பப் புறப்பட்டது தான்.

மாற்றுக்கருத்து என்று வந்தவுடன் தீர்வு கேட்பார்கள். இவர்கள் தீர்வு கேட்பது ஒன்றும் அதைக் குறித்து விவாதம் செய்து சரியான வழியைத் தேர்ந்தெடுப்பதற்கல்ல. விமர்சிப் பதற்கு! கும்பலாகச் சேர்ந்து தர்ம அடி போடுவதற்கு!

சமூகத்தின் நன்மைக்காக, இந்த சமூகத்தின் அழிவை தடுத்து நிறுத்த வேண்டும் என்ற நல்ல எண்ணம் கொண்டவனை களைத்துச் சலிக்கப் பண்ணுவதற்காக!

தீர்வு என்பதை விட, நாங்கள் செய்ய வேண்டும் என்று நினைக்கின்ற சில வழிமுறைகளை இங்கே தரலாம் என்று நினைக்கிறேன்.

முதலாவது, மற்றவர்களை முட்டாள்கள் என்று நினைத்து கதை சொல்வதை நாங்கள் நிறுத்த வேண்டும். நாங்கள் சொல்வது பொய் என்பது எங்களுக்குத் தெரியும். இருந்தாலும் அதை மற்றவன் நம்ப வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். அதை மற்றவன் நம்பாவிட்டால் எங்களுக்குக் கெட்ட கோபம் வரும். நாங்கள் அரிச்சந்திரன் பரம்பரை, நாங்கள் எங்க பொய் சொன்னனாங்கள் என்று வரிந்து கட்ட பலர் இருப்பார்கள். அவர்கள் எல்லாம் தங்கள் அகதிக் கோரிக்கையில் என்ன கதை எழுதினார்கள் என்பதை நினைத்துப் பார்த்தால் தெரிந்திருக்கும்.

மற்றவர்களைப் புத்திசாலிகள் என்று நினைத்தோம் என்றால், அவர்களை நம்ப வைக்க நாங்கள் அதிகமாய் சிந்தித்து நம்பக் கூடிய கதைகளைச் சொல்ல முடியும். ஆனால் நாங்களோ...? நான் சொல்றன், நீ நம்பு என்று பிடிவாதமாக நிற்கிறோம். புலிகள் சிறுவர்களைப் படையணியில் சேர்க்கிறார்கள் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் ஆதாரங்களுடன் குற்றம் சாட்டுகிறது. இல்லை, வன்னியில் புறநானூற்றுத் தாய்மார்கள் தாங்களாகவே பிள்ளைகளைப் புலிகளிடம் ஒப்படைக்கிறார்கள் என்று சண்டைக்குப் போகிறோம். புலிக்கொடி தான் தமிழர்களின் தேசியக் கொடி என்கிறோம்.

கனடாவில் புலிகள் மிரட்டிப் பணம் பறிக்கவில்லை, நாங்கள் விரும்பித் தான் கொடுக்கிறோம்.. 99 வீத மக்கள் வட்டுக்கோட்டைக்கு வாக்களித்தார்கள்.

நாங்கள் சொல்வது பொய் என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும் உண்மையைச் சொன்னால் எங்களுக்கு அவமானம் என்று நினைக்கிறோம்.

ஆனால் ஒன்றை மறந்து விடுகிறோம். எங்களுடைய பொய் கையும் களவுமாய் பிடிபட்டதும் எங்களுடைய நம்பகத்தன்மை பறி போய் விடுகிறது. அதன் பின்னால் நாங்கள் சொல்லும் உண்மையைக் கூட யாரும் நம்பப் போவதில்லை. ஓநாய் வருகிறது என்று கூச்சல் போட்டு ஊரைக் கூட்டிய இடையன் கடைசியில் உண்மையான ஓநாய் வந்தபோது கூச்சல் போட்டும் யாருமே வரவில்லை. இதே நிலைதான் எங்களுடையது.

இரண்டாவது, நாங்கள் எதைக் கேட்க விரும்புகிறோமோ, அதைச் சொல்லிக் கொண்டிருப்பவர்களை நம்புவதை நிறுத்த வேண்டும்.

எங்களுக்குப் மிகவும் பிடித்தமான விடயம் இதுதான். நாங்கள் நம்ப விரும்புபவற்றை எங்களுக்குச் சொல்லி எங்களைக் குஷிப்படுத்துபவர்களைத் தான் நாங்கள் நம்புகிறோம். இதற்கு ஆதாரம் தேவை என்றால், இந்த எக்லின்டன் வீதியில் கென்னடி வீதி முதல் மார்க்கம் வீதி வரைக்கும் போய் பார்த்தால் தெரியும். இதில் இருக்கும் ஒவ்வொரு கடையின் கீழும் இந்தியாவிலிருந்து வந்த சோதிடர்கள் ஜாகை அமைத்து சோதிடம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். உங்களுக்கு கஷ்டகாலம், சாந்தி செய்தால் நல்ல காலம் பிறக்கும். இதைத் தானே நாங்கள் கேட்க விரும்பிறோம். சோதிடம் ஒரு பொய்யும் புரட்டும் என்று சொல்பவர்களுக்கா நாங்கள் காசு கொடுக்கப் போகிறோம்?

இதைத் தான் எங்கள் ஆய்வாளர்களும் ஊடகங்களும் செய்து கொண்டிருந்தன. தலைவர் திட்டம் வைத்திருக்கிறார், அவர் காரணம் இல்லாமல் இராணுவத்தை உள்ளுக்க வர விட்டிருக்க மாட்டார், உள்ளுக்க வரவிட்டுட்டு அடிக்கப் போறாங்கள். இதைத் தானே நாங்கள் கேட்க விரும்பினோம். இல்லை, புலிகள் விட்டுட்டு ஓடுறாங்கள் என்று சொல்பவர் களையா நாங்கள் நம்பப் போகிறோம்?

கிளிநொச்சி விழுந்து விட்டது. உள்ளுக்க வரவிட்டு அடிக்கும் கதை பொய்த்துப் போய் விட்டது. இங்குள்ள பத்திரிகை மூன்று பக்கத்தில் ஆய்வுக்கட்டுரை எழுதுகிறது. அதன் ஆசிரியர், அவர் ஆன்மா சாந்தியடைவதாக, அந்தக் கட்டுரையில் மூன்று தடவைகள் திருப்பித் திருப்பி எழுதுகிறார்... புலிகள் மீண்டும் கிளிநொச்சியைக் கைப்பற்றுவார்கள் என்று அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன. புலிகள் பதில் தாக்குதல் நடத்த முன்பாக இவருக்கு ஸ்கூப் கொடுத்திருக் கிறார்கள். ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய்! நம்புவதற்கு ஆள் இருக்கும் வரையில் இவர்களுக்குப் பிழைப்புத் தானே.

எங்களுடைய அழிவின்

முதல் காரணமே, நாங்களே சொன்ன பொய்களை நாங்களே நம்பப் புறப்பட்டது தான்.

நான்காவது பெரிய இராணுவத்தை வெளியேற்றினோம்..!

வியட்னாமில் அமெரிக்க இராணுவம் வெளியேறிய போது, வியட்னாமியப் படைகள் சைகோனைக் கைப்பற்றும் போது, காத்திருந்த அமெரிக்கக் கப்பல்களில் ஆட்களை இறக்கிய ஹெலிகொப்டர்கள் மேலே பறந்தால் மற்ற ஹெலி கொப்டர்களுடன் மோதிவிடும் என்பதற்காக, கடலுக்குள் மூழ்கடிக்கப்பட்டன. விரட்டி அடிப்பது என்பது அதைத் தான்.

பிரேமதாசாவின் எச்சரிக்கை, இந்தியாவில் அரச மாற்றம் காரணமாக இந்தியா தானே வெளியேற முடிவு செய்தது. இந்திய இராணுவம் இருக்கும் வரையில் நகரங்களில் இருந்து விரட்டப்பட்டு வனவாசம் செய்த புலிகள் தாங்கள் விரட்டினோம் என்று பிரசாரம் செய்தார்கள். இந்தப் பொய்யை நம்பியதால் தான் எங்கள் பலம் மீது எங்களுக்கு அசாதாரண நம்பிக்கை வந்தது. தலைக்கனம் வந்தது. கடைசியில் உள்ளுக்க வரவிட்டு அடிக்கப் போறாங்கள் என்று நம்ப வேண்டி வந்ததும் இந்த போதை தலைக்கேறியதால் தான்.

புலிகள் பிரசாரத்திற்காகச் சொன்ன பொய்கள் எல்லாமே புலன் பெயர்ந்தவர்களைக் குஷிப்படுத்தி பணம் திரட்டும் நோக்கத்தில் செய்யப்பட்டவை. எங்களுக்கு எது கேட்கப் பிடிக்குமோ அதைப் புலிகள் சொல்லி எங்களைக் குஷிப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் புலிகள் மக்கள் வாழும் பகுதியிலிருந்து ஷெல் அடித்தார்கள் என்று அரசாங்க அதிபர் பெண்மணி கூறியிருந்தார். இந்தச் செய்தி அப்போதே வெளியில் வந்திருந்தது. நாங்கள் அதை நம்பவில்லை. இன்று அரசாங்க விசாரணையில் அவர் அதைச் சொன்னதும் யாழ்ப்பாணத்துப் பத்திரிகைகள் முதல் புலன் பெயர்ந்த பத்திரிகைகள் வரைக்கும் எகிறிப் பாய்கின்றன.

முன்பு எம்.பி வினோதராதலிங்கம் அகதி முகாம்களில் நிலைமை நன்றாக இருக்கிறது என்றதும் இங்கே ஆய்வாளர்கள் அவர் தமிழினத்திற்கு துரோகம் இழைத்து விட்டார் என்கிறார்கள்.

அதாவது இவர்கள் கேட்க விரும்புகின்றவற்றை மட்டும் தான் நீங்கள் சொல்ல வேண்டும். இல்லையேல் துரோகி ஆக்கப்படுவீர்கள். உண்மை, பொய் என்பது பிரச்சனை இல்லை. உங்களில் பலர் உங்கள் நெருங்கிய உறவினர்களுடன் கதைத்து உண்மை நிலையை அறிந்திருப்பீர்கள். தன் மகளை இழந்த சகோதரி குடும்பம் மீண்டும் வட்டக்கச்சிக்கு போயிருக்கிறது. அவர்கள் எங்கள் குடும்பத்திற்கு சொன்னதை நான் நம்புவேனா? இல்லை, இங்கே பத்திரிகைகள் சொல்வதை நம்புவேனா?

ஆய்வாளர் ஒருவரிடம் கேட்டார்களாம்... என்ன உள்ளுக்க வரவிட்டு அடிக்கப் போறாங்கள் எண்டு எங்களை பொய் சொல்லி ஏமாத்திப் போட்டீங்கள் என்று. அவர் சொன்னாராம்... அது நான் சொல்லேலை. நடேசன் சொன்னதைத் தான் நான் சொன்னேன் என்று. நடேசன் வெள்ளைக்கொடியுடன் போக முன்னால் இவருக்குச் சொல்லியிருக்கக் கூடும்... இப்ப உள்ளுக்க போய் அடிக்கப் போறம் என்று.

இந்த ஆய்வாளர் இன்று நாடு கடந்த ஈழத்தின் எதிர்க்கட்சித் தலைவர். இதே மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதி. பொய்களை நம்புவதும் போதாது என்று பொய்யர்கள் தான் எங்கள் பிரதிநிதிகள் என்றால் எங்களால் எப்படி மீட்சி பெற முடியும்?

இந்தப் பொய்யர்கள், ஊடகவியலாளர்கள், ஆய்வாளர்கள், எங்கள் சமூகத்தில் நிராகரிக்கப்பட வேண்டும்.

மூன்றாவது, தியாகி துரோகி என்ற கறுப்பு வெள்ளைக்குள் எங்கள் அரசியல் முடக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும். பொன்னம்பலம் ராமநாதனைத் துரோகி என்றது முதல் கே.பி துரோகம் இழைத்து விட்டார் என்று வை.கே, நெடுமாறன் சொல்வது வரைக்கும் எங்களுடைய தவறுகளுக்கும் முட்டாள் தனங்களுக்கும் மற்றவர்கள் மீது பழியைப் போடும் பழக்கம் தொடர்ந்து கொண்டே வருகிறது. பொன்னம்பலத்துக்கு ராமநாதன் துரோகி, அமிர்தலிங்கத்திற்கு பொன்னம்பலம் துரோகி, மாத்தயாவுக்கு அமிர்தலிங்கம் துரோகி, கருணாவுக்கு மாத்தயா துரோகி, பிரபாகரனுக்கு கருணா துரோகி. இதில் என்ன நீதி இருக்கிறது? மற்றவரைத் துரோகி என்று பட்டம் சூட்டவும் கொலை செய்யவும் இவர்களுக்கு அங்கீகாரம் தந்தது யார்? தீர்ப்பளித்தவர்களே கடைசியில் துரோகி என்று கொல்லப்பட்ட போது, அவர்களைப் பாதுகாக்க யாரும் இருக்கவில்லையே?

தியாகி, துரோகி என்பதற்கெல்லாம் உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட எந்த

**இந்தப் பொய்யர்கள், ஊடகவியலாளர்கள், ஆய்வாளர்கள், எங்கள் சமூகத்தில் நிராகரிக்கப்பட வேண்டும்.**

அளவு கோலும் இல்லை. எவரும் தன்னோடு ஒத்துப் போகாத எவரையும் துரோகி என்று கூறலாம். ஒரு காலத்தில் துரோகி என்று கொல்லப்பட்டவர்கள் தோண்டி எடுக்கப்பட்டு தியாகிகளாக முடி சூட்டப்பட்டதற்கு பல உதாரணங்களைக் காட்டலாம். கொலை, கொள்ளை எதையும் செய்ய அஞ்சாத மாபியாக் கூட்டம் தங்களில் யாராவது மனம் திருந்தினால் துரோகம் என்று தான் கொல்கிறது. தாங்கள் செய்வது சட்டவிரோதமான செயல் என்று நினைப்பதில்லை.

மறுபுறத்தில் நாங்கள் தியாகிகள் என்று போற்றிக் கொண்டாடுபவர்கள் எல்லாம் மற்ற உயிர்களை வக்கிரபுத்தியோடு வதைத்துக் கொன்றவர்கள் என்பது எங்களுக்குத் தெரியாது. தியாகி திலீபன் உண்ணாவிரதம் இருந்து இறந்தார் என்பது மட்டுமே அவரை மகாத்மா காந்தியோடு ஒப்பிடவைக்கிறது. இந்த மகாத்மா காந்தி தான் உரும்பிராயில் எந்த அரசியல் சம்பந்தமுமில்லா ஒரு மனநோயாளியை கம்பத்தில் கட்டி மண்டையில் போட்டார் என்பதும், புலிகளின் கூட்டத்தில் கேள்வி கேட்டவர்களைத் துப்பாக்கியால் மிரட்டி அவர்களின் கருத்துச் சுதந்திரத்திற்கு மதிப்பளித்தார் என்பதும் இன்று நினைவு தினம் நடத்துபவர்களுக்குத் தெரியாது.

கூட்டணிக்குப் பின்னால் வந்த எங்கள் அரசியல் எல்லாமே தியாகி, துரோகி என்ற வரையறைக்குள் தான் சிக்கிக் கொண்டிருக்கிறது. எங்கள் இனத்தைக் கொல்வதையே துரோகம் என்ற பெயரில் நியாயப்படுத்தும் அளவுக்கு எங்களை ஒரு கொலை வெறிச் சமூகமாக்கியிருக்கிறது. இது கடைசியில் மனநோயாகி, சணம் வாதம், சணம் பித்தம் என்பது போல, ஒரே நபரையே மாறி மாறி தியாகி, துரோகி என்று கூறும் நிலைக்கு கொண்டு வந்து விட்டிருக்கிறது. இன்றைக்கு யார் துரோகி? யார் தியாகி? என்று முழு மக்களுமே குழம்பும் அளவுக்கு, மாறிமாறி அறிக்கைகளும் துண்டுப்பிரசுரங்களும் வந்து கொண்டிருக்கின்றன. மற்றவர்களை துரோகிகள் என்று மண்டையில் போட்டவர்கள் இன்று தங்களுக்குள் பிளவு பட்டு துரோகப்பட்டம் சூட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

**இதுவரை காலமும் தலைவர் எல்லாருக்கும் மணியா வேலையைக் குடுப்பார் என்று நம்பி நாங்கள் கண் கெட்ட பின்னால் சூரிய நமஸ்காரம் போல, சர்வதேச உதவியில்லாமல் எதையும் சாதிக்க முடியாது என்ற உண்மையை உணர்ந்திருக்க வேண்டும்.**

இதெல்லாம் நாங்கள் வளர்த்து விட்ட பாரம்பரியத்தின் விளைபயன். தங்களுடைய தோல்விகளுக்குப் பழியைப் போடவும் தங்கள் இயலாமையை நியாயப்படுத்தவும் உருவாக்கப் பட்டது தான் துரோகிப் பட்டம். கொலைகாரர்களைத் தியாகியாகப் போற்றியும், உண்மையான தியாகிகளை மண்டையில் போட்டு துரோகியாக்கியும் தியாகி, துரோகி என்று எங்கள் அரசியலைச் சிறுமைப்படுத்தும் பண்பை நாங்கள் உடனடியாக நிறுத்த வேண்டும்.

ஓகே, நாங்கள் இதையெல்லாம் விட்டு விடுகிறோம். உப்பிடியெண்டா ஈழம் கிடைச்சிடுமோ என்று அப்பாவித்தனமாகக் கேட்காதீர்கள்.

அடுத்த இரண்டு கருத்துக்களும் உங்களில் பல பேரை நெளிய வைக்கும். நான்காவது நாங்கள் பயங்கரவாதத்தை மறுதலிக்க வேண்டும்.

அதுதானே ஆயுதப் போராட்டம் இல்லை, இனிமேல் அகிம்சை தான் என்று ஆயுதத்தை கீழ வைச்சிட்டம், பிறகென்ன? என்று நீங்கள் கேட்கக் கூடும்.

றீகனின் ஆட்சியின் இறுதி நாட்களில் அவசரம் அவசரமாக ஒரு நடவடிக்கையில் ஈடுபட்டார்கள். அது பலஸ்தீன விடுதலை இயக்கத்தை அங்கீகரிப்பது என்ற முடிவு. ஏகாதிபத்திய எதிர்ப்பு நண்பர்கள் அதற்கான காரணங்கள் குறித்து விவாதத்திற்கு தயாராவார்கள். அதை பின்னால் வைத்துக் கொள்ளலாம். ஐ.நா சபை எடுத்த தீர்மானங்களான இஸ்ரேல் ஒரு நாடாக இருக்கின்ற உரிமை, பயங்கரவாதத்தை மறுதலித்தல் என்ற இரண்டு நிபந்தனைகளையும் பாலஸ்தீன விடுதலை இயக்கம் ஏற்றுக் கொண்டால் அமெரிக்கா பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை அங்கீகரித்து பேச்சுவார்த்தையில் ஈடுபடும் என்ற அமெரிக்காவின் நிபந்தனைகளை ஏற்று பலஸ்தீன இயக்கம் அமெரிக்க அரசுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டது. அதன் வெற்றி தோல்விகள் ஒருபக்கம் இருக்கட்டும்.

இன்றைக்கு தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரி என்கிறோம். புலிகள் மீதான தடையை நீக்கு என்று கேட்கிறோம். காரணம் என்ன? எங்களுக்கு சர்வதேசத்தின் அங்கீகாரமும் ஆதரவும் தேவை என்ற அடிப்படையில். தேசியத்தலைவர் மாதிரி எங்களுக்குத் தேவைப்பட்டால் காலில் விழுவோம், தேவையில்லாவிட்டால் துரோகி என்போம் என்று சர்வதேசத்துடன் அரசியல் நடத்த முடியாது. வடகொரியா, ஈரான், எரித்திரியா போல சர்வதேச அங்கீகாரம் எங்களுக்குத் தேவை

இல்லை என்று கூறி எல்லாரையும் பகைத்து அரசியல் நடத்த முடியும் என்று நாங்கள் நினைத்தால் அவர்களின் வழியைக் கடைப்பிடித்து எங்களை தனிமைப்படுத்திக் கொள்ளலாம். அப்புறமாய் நாங்கள் அரசியல் அனாதைகள் என்று ஒப்பாரி வைப்பதில் பயன் இல்லை.

இதுவரை காலமும் தலைவர் எல்லாருக்கும் மணியா வேலையைக் குடுப்பார் என்று நம்பி நாங்கள் கண் கெட்ட பின்னால் சூரிய நமஸ்காரம் போல, சர்வதேச உதவியில்லாமல் எதையும் சாதிக்க முடியாது என்ற உண்மையை உணர்ந்திருக்க வேண்டும்.

சர்வதேசம் உதவி செய்வதாக இருந்தால் தன்னுடைய விதிமுறைகள், நடைமுறைகள், ஜனநாயகப் பாரம்பரியங்கள் மட்டுமல்லாமல், தங்களுடைய சொந்த நலன்கள் உட்பட்ட பல்வேறு காரணிகளின் அடிப்படையில் தான் உதவி செய்யும் என்ற உண்மையை நாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். இதன் அடிப்படையில் தான் புலிகளை ஆயுதங்களைக் கைவிட்டு சமஷ்டியை ஏற்று ஜனநாயக வழிக்குத் திரும்ப வேண்டும் என்று சர்வதேச சமூகம் வற்புறுத்திக் கொண்டிருந்தது. நாங்கள் பேய்க்கு வாழ்க்கைப்பட்டு புளிய மரத்தில் ஏறினோமா? இல்லை, இயல்பாகவே மற்றவர்களை மதிக்காத சுயநலப் போக்குள்ள இனமா? நாங்கள் எங்கள் திமிர்த்தனமான போக்கை அங்கீகரிக்கும்படியே வற்புறுத்திக் கொண்டிருந்தோம்.

அதற்கு நாங்கள் கொடுத்த விலை என்ன என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும்.

ஆயுதங்களை எதிரி பறித்து கௌபீனத்தோடு விட்ட பின்னாலும் பெருமையுடன் குஞ்சப்பு மாதிரி விளையாட்டுக் காட்டிக் கொண்டிருக்கிறோம்... ஆயுதப் போராட்டம் இல்லை என்று.

அதுவல்ல சர்வதேசம் வேண்டுவது. புலிகளின் பயங்கரவாதம் எங்களுக்கு விடுதலைப் போராட்டமாக இருக்கலாம். செப்டம்பர் 11க்கு பின்னான சர்வதேச பார்வையில் ஏற்பட்ட மாற்றத்தின் பின்னர் பயங்கரவாதம் என்பது ஒழிக்கப்பட வேண்டிய ஒன்றாகவே மேற்குலகில் கருதப்பட்டு வந்திருக்கிறது. இந்தப் பயங்கரவாதம் காரணமாகத் தான் தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு அங்கீகாரம் கிடைக்காமல் போயிருக்கிறது.

எங்களுடைய நியாயமான போராட்டத்தை ஹைஜாக் பண்ணி அதை பிரபாகரனின் பதவி வெறிக்கு தீனி போடும் பயங்கரவாதமாக்கியது புலிகள். அந்தப் பயங்கரவாதத்தை, நாங்கள் எங்கட தறுதலைப் பிள்ளையை பாதுகாக்கும் மனோபாவத்தில், போராட்டம் என்று நியாயப்படுத்தி மற்றவர்களை முட்டாள்கள் என்று நினைத்து கதை சொல்லி எங்களை ஏமாற்றிக் கொண்டு வந்திருக்கிறோம்.

தமிழ் சமூகத்தில் புலிகள் ஊன்றிய இந்த வக்கிர உணர்வு அகற்றப்பட வேண்டும். அதற்கு நாங்கள் முழுமையாகப் புலிகளை நிராகரிக்க வேண்டும்.

நண்பர்கள் சிலர் உணர்ச்சி வசப்படக் கூடும். அவசரப்படாதீர்கள். 'இறங்கடா மேடையை விட்டு' என்றெல்லாம்!

**சந்திரிகா வினால் யாழ்ப் பாணத்திலிருந்த விரட்டப்படும் வரைக்கும் புலிகளின் கட்டுப்பாட்டில் தான் தமிழ்ப் பிரதேசம் இருந்தது. இந்தக் காலத்தில் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற நாங்கள் என்ன செய்தோம்?**

மேற்குலகம் புலிகளை பயங்கரவாத இயக்கம் என்று உத்தியோகபூர்வமாகத் தடை செய்த பின்னாலும் தலைவர் எங்களைக் காப்பாற்றுவார் என்று கதை விட்டு நாங்கள் கண்டது என்ன?

நாங்கள் அமைதி விரும்பிகள், எங்களுக்கு இலங்கையில் இனரீதியான ஒடுக்குமுறை இருக்கிறது, அதை எதிர்கொள்வதற்காக நாங்கள் ஜனநாயக ரீதியில் ஆதரவைத் தெரிந்திருந்தோம், ஆனால் புலிகள் வந்து அதை தங்கள் கையில் எடுத்துக் கொண்டு எங்கள் விருப்பத்திற்கு மாறாக பயங்கரவாதம் ஆக்கி விட்டார்கள், அந்தப் பயங்கரவாதத்திற்கு எங்களுக்கும் சம்பந்தமில்லை, கனடாவில் பிரெஞ்சுக்காரருக்கு இருப்பதைப் போன்று எங்களுக்கு சம உரிமை தரும் பட்சத்தில், ஒரு ஐக்கிய இலங்கை என்ற கோட்பாட்டுக்குள் வாழ நாங்கள் தயார், இல்லை, நாங்கள் இரண்டாம் தர பிரஜைகளாகத் தான் வாழ வேண்டும், நாங்கள் வந்தேறுகுடிகள், எங்களுக்கு எங்கள் அடிப்படை உரிமையைக் கேட்க உரிமையில்லை என்று சிங்கள அரசு பிடிவாதம் பிடித்தால் நாங்கள் பிரிந்து போவதற்கான சுயநிர்ணய உரிமையை அங்கீகரியுங்கள், அதற்கான சர்வதேச பார்வையாளர்களுடனான வாக்களிப்பிற்கு வழி வகை செய்யுங்கள் என்று கேட்பது நியாயமானது. இதில் நாங்கள் பொய் ஒன்றும் சொல்லவில்லை. எங்களுடைய நியாயமான கோரிக்கையை அவர்களுக்குப் புரிந்த மொழியில், அவர்கள் ஏற்றுக் கொள்கின்ற நடைமுறைகளின் அடிப்படையில் விளங்கப்படுத்துகிறோம். அவ்வளவு தான்.

புலிகளுக்கும் எங்களுக்கும் சம்பந்தம் இல்லை, புலிகளின் நடவடிக்கைகளுக்கு எங்களுக்கு உடன்பாடு இல்லை. இது தான்

நாங்கள் சொல்ல வேண்டிய செய்தி.

எரித்திரிய விடுதலை அமைப்பு 91ல் தலைநகர் அஸ்மாராவைக் கைப்பற்றி தற்காலிக அரசை அமைத்ததும் அறிவித்தது என்ன? இரண்டு வருடங்களுக்குள் சர்வசன வாக்கெடுப்பு நடத்தி சர்வதேச அங்கீகாரம் பெறப்படும். அதற்கான ராஜதந்திர நடவடிக்கைகளில் ஈடுபட்டு ஐ.நா தீர்மானம் நிறைவேற்றி ஐ.நா பார்வையாளர்களுடன் 93ல் நடத்தப்பட்ட தேர்தல் சர்வதேச அரங்கில் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுத்து அதன் சுதந்திரம் சர்வதேசரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

புலிகளும் தமிழீழத்தை கைப்பற்றியிருந்தார்கள். இந்திய இராணுவம் வெளியேறி, பிரேமதாச ஆட்சியுடன் குலாவிய போது கைப்பற்றியிருந்தார்கள். சந்திரிகா வினால் யாழ்ப் பாணத்திலிருந்த விரட்டப்படும் வரைக்கும் புலிகளின் கட்டுப்பாட்டில் தான் தமிழ்ப் பிரதேசம் இருந்தது. இந்தக் காலத்தில் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற நாங்கள் என்ன செய்தோம்?

புலிகள் சமாந்தரமான அரசாங்கத்தை நடத்தகிறார்கள், நீதிமன்றம், சட்டக் கல்லூரிகள், வைப்பகம், வெதுப்பம் வைத்திருக்கிறார்கள் என்று எங்களை நாங்களே குஷிப்படுத்தி சுய இன்பம் கண்டதை விட நாங்கள் சர்வதேச ரீதியாக அங்கீகாரத்தைப் பெறவோ, இந்தியாவுடன் நல்லுறவை ஏற்படுத்தி எங்களுக்கு நிரந்தரத் தீர்வைப் பெறவோ முயற்சிக்கவில்லை.



**வடக்கும் கிழக்கும் இணைப்பில் இருக்கக் கூடாது என்று நீதிமன்றம் போய் பிரிவை நிரந்தரமாக்கிய ஜே.வி.பி இன்று யாழ்ப்பாணத்தில் யாரோடு அரசியல் கூட்டுக்கு முயற்சிக்கிறது? புலிகளால் அவையேற்றப்பட்டு புலன் பெயர்ந்த கூட்டத்தால் தூக்கிக் கொண்டாடப்பட்ட பத்மினி சிதம்பரநாதனுடன். நாங்கள் நடத்திய அரசியலின் விளைபயன் இதுதான்.**

அகந்தை தலைக்குள் ஏறி, எங்களுக்கு புத்திமதி சொல்ல வந்தவர்களை எல்லாம் திட்டித் தீர்த்திருக்கிறோம். புலிகள் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என இந்தியா சொன்னால், இந்தியா தன்ரை வேலையைப் பாக்கட்டும், எங்கட வேலையைப் பாக்க எங்களுக்குத் தெரியும். எங்கள் அரசியல் தலைவர் தமிழ்ச்செல்வன் சொல்கிறார். புலிகள் சமஷ்டியை ஏற்றுக் கொள்ள வேண்டும் என நோர்வே சொன்னால், எங்கட விசயத்தில நோர்வே புத்தி சொல்லத் தேவையில்லை என பதில் வருகிறது. புலிகள் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மீறுவது தவறு என கண்காணிப்புக் குழு சொன்னால் கண்காணிப்புக் குழுவினர் வெளியேறுமாறு உத்தரவு வருகிறது. அமெரிக்காவோ, ஐரோப்பிய சமூகமோ எதைச் சொன்னாலும், எங்களுக்குப் புத்தி சொல்லத் தேவையில்லை, எங்கள் விடயத்தில் தலையிடத் தேவையில்லை என்று மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா என்பது போல புலிகள் பிடித்த பிடியாக நின்றார்கள்.

ஒரு அரசாங்கத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம் என்று புலன்பெயர்ந்தவர்களுக்குப் பீற்றிக் கொண்டிருந்தவர்களுக்கு அந்த அரசுக்கு அங்கீகாரம் தேட முடியாமல் போனதன் காரணம் என்ன? எங்களுக்கு ஜனநாயக மரபுகளில் விருப்பம் இல்லை, மக்களின் வாக்குகளால் பலத்தைப் பெற்று ஆட்சி அமைக்கும் பண்பை பழக முடியவில்லை. நினைத்த யாரையும் மண்டையில் போடலாம், பிறகெதற்கு இவர்களின் அங்கீகாரம் என்று யார் எவரின்றில்லாமல் மண்டையில் போடப் போய் தானே இந்தியா மகிந்தவுடன் ஒட்டிக் கொண்டது. இத்தனை மக்கள் அழிவின் போதும் சர்வதேச சமூகம் பாராமுகமாக இருந்தது.

வடக்கு கிழக்கு இணைப்பு என்ற இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் கிடைக்க இருந்த அற்ப விடயத்தைக் கூட, அடைந்தால் மகாதேவி இல்லையேல் மரண தேவி என்று குழப்பியவர்கள் புலிகள். இன்று எந்த விதத்திலும் தமிழரின் பூர்வீக தாயகம் வடக்கும் கிழக்கும் இணைந்த பிரதேசம் என்ற கருத்தை வலியுறுத்த முடியாமல் போனதற்கு காரணம் யார்? புலிகள் தானே. வடக்கும் கிழக்கும் இணைப்பில் இருக்கக் கூடாது என்று நீதிமன்றம் போய் பிரிவை நிரந்தரமாக்கிய ஜே.வி.பி இன்று யாழ்ப்பாணத்தில் யாரோடு அரசியல் கூட்டுக்கு முயற்சிக்கிறது? புலிகளால் அவையேற்றப்பட்டு புலன் பெயர்ந்த கூட்டத்தால் தூக்கிக் கொண்டாடப்பட்ட பத்மினி சிதம்பரநாதனுடன்.

நாங்கள் நடத்திய அரசியலின் விளைபயன் இதுதான்.

இதன் பின்பும் நாங்கள் புலிகளை தூக்கிக் கொண்டாடிக் கொண்டு தான் இருக்க வேண்டுமா?

நண்பர்களுக்கு இருக்கக் கூடிய கேள்விகளுக்கு வருவோம்.

அதென்னண்டு? அவங்கள் எங்களுக்காண்டி உயிரைக் குடுத்தவங்கள். அந்தப் போராளிகளுக்கு நாங்கள் துரோகம் செய்யேலுமே?

முதலாவது, இறந்த போராளிகளை இன்றைக்கும் நீங்கள் நினைவூட்டிக் கொண்டிருப்பது, புலிகள் பற்றிய விமர்சனத்தை தடுத்து நிறுத்துவதற்காகத் தான். அதன் மூலம் புலிகளை வளர்த்து விட்ட உங்களின் பங்களிப்பு அம்பலமாகி விடும் என்ற பயத்தில் தான்.

புலிகளில் எத்தனை பேர் கொள்கைத் தெளிவோடு இயக்கத்தில் சேர்ந்தவர்கள், எத்தனை பேர் ஆயுதங்களால் கவரப்பட்டுச் சேர்ந்தவர்கள், எத்தனை தங்கள் குடும்பங்களிலிருந்து இழுத்துச் செல்லப்பட்டு சேர்க்கப்பட்டவர்கள் என்பது உங்களுக்குத் தெரியும். அதிலும் அநியாயமாக எத்தனை பேர் பலி கொடுக்கப்பட்டார்கள் என்பதும் உங்களுக்குத் தெரியும். தமிழீழப் போராட்டத்திற்காக உயிர் துறந்தது புலிகளின் போராளிகள் மட்டுமல்ல. எல்லா இயக்கங்களிலும் சேர்ந்த, சேர்க்கப்பட்டு உயிர் கொடுத்த எல்லாருடைய உயிர்களும் மதிக்கப்பட வேண்டியவை. எந்த வித சம்பந்தமுமில்லாமல் கொல்லப் பட்ட அப்பாவி மக்கள் மட்டுமல்ல, போராட்டத்தின் பெயரால் புலிகளால் கொல்லப்பட்ட மாற்றியக்கப் போராளிகள், மக்களும் தான். அவர்களுடைய உயிர்களுக்கும் அதே அளவு மதிப்புக் கொடுக்காமல், என்ன மரணத்திலும் சாதியா பார்க்கிறீர்கள்?

இன்றைக்கு போராளிகளைப் பற்றி தூக்கிக் கொண்டு திரிவது யார்? அதை வைத்துப் பிழைப்பு நடத்த அலையும் கூட்டம் மட்டும் தான். மாவீரர் தினம், நினைவு தினம் நடத்தும் கூட்டங்களின் கூத்துக்கள் பற்றித் தெரியாதா? போராட்டத்தைக் காட்டி பணம் சேர்த்து சொகுசு வாழ்க்கை நடத்திய கூட்டம் தான் இன்றைக்கு மக்களை வரவழைத்து பணம் சேர்த்துக் கொண்டிருக்கிறது. இந்த கூட்டத்திற்கு அங்கு வாழும் தமிழ் மக்கள் தீர்வு காண வேண்டும் என்பதில் என்ன அக்கறை இருக்கிறது?

தியாகதீபம் திலீபனுக்கு நினைவு தினம் நடந்ததாம். அதைப் பற்றி ஒரு துண்டுப்பிரசுரம். நினைவு தினத்தில் திலீபனைப் பற்றி கதைக்காமல், நாடு கடந்த அரசின் பிரதமரைப் பற்றி திட்டித் தீர்த்திருக்கிறார்கள். துண்டுப் பிரசுரம் வெளியிட்டவரின் ஆதங்கம் என்னவென்றால்... உண்ணாவிரதம் இருந்து இறந்த திலீபனின் நினைவு தினத்தில் உணவுப் பொருள் விற்றுப் பணம் சம்பாதித்துக் கொண்டிருந்தார்கள் என்பது தான்.

இதுதான் இறந்த போராளிகளை இன்று வரைக்கும் தூக்கிப் பிடிப்பதன் இலட்சணம்.

உண்மையாகவே போராளிகள் மீது இவர்களுக்கு அக்கறை இருந்திருக்குமானால், இதுவரை காலமும் பாலகுமாரன், இளந்திரையன், பேபி சுப்பிரமணியம், யோகி, புதுவை போன்றவர்களை எங்கே? அவர்களை வெளியே காட்டு? போராளிகள் எல்லாரையும் அரசியல் கைதிகளாக அங்கீகரி என்று இன்னமும் ஏன் இவர்கள் போராட்டம் நடத்தவில்லை? இன்றைக்கும் அவர்களின் மனைவிமார் கண்ணீரோடு சாட்சி யமளிக்கிறார்கள். உங்களுடைய வெறிக்குத் தீனி போடத்தானே தங்களை அவர்கள் தியாகம் செய்தார்கள்.

இன்றைக்கு ஆயிரத்திற்கு மேற்பட்ட போராளிகளை பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தில் நிறுத்தி தண்டனை கொடுக்க அரசு முடிவு செய்திருக்கிறது. தலைவரும் பொட்டம்மானும் சொன்னதை நிறைவேற்றும் இயந்திரங்களாக வளர்க்கப்பட்ட இவர்கள் மீது இந்தக் குற்றங்களுக்கான பழியைப் போடுவது என்ன நியாயம் என்று எங்காவது ஊர்வலம் போனார்களா? இல்லை, அவர்களுக்கு சட்ட உதவி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முன்வந்தார்களா? வாழுகின்ற போராளிகள் உயிர் வாழ வேண்டும் என்ற எண்ணமே இல்லாமல், பிணத்தை வைத்து பிழைப்பு நடத்தும் காரணம் என்ன?

வன்னியில் இருந்து வந்து சந்தித்த குருவானவர் சொன்னார்... அமெரிக்காவில் படித்த யாழ்ப்பாணிகள் கொஞ்சப் பேர் நாடு கடந்த அரசு பற்றிய கூட்டம் ஒன்றிற்கு அழைத்தார்களாம். அங்கே தான் போன போது, தனக்குத் தெரிந்த புலிப் போராளிகள் பலர் காயமடைந்த நிலையில் இந்தியாவில் சிகிச்சை பெற அவதிப்படுகிறார்கள். நீங்கள் அவர்களுக்கு ஏதும் உதவி செய்தால் என்ன என்று கேட்ட போது சொன்னார்களாம்.. *Father, you have to look at the big picture.*

அட, உங்களுக்காகத் தானே

**இந்தப் புலிகளையும் புலித்தனத்தையும் முற்றுமுழுவதாக நிராகரிப்பதன் மூலமே நாங்கள் தீர்வை நோக்கி முன்னோக்கி நகர முடியும். தமிழர்களைப் பொறுத்தவரைக்கும் புலிகள் *liability* யே அன்றி *asset* அல்ல என்ற உண்மையை நாங்கள் ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும்.**

தங்கள் உயிரைத் தியாகம் செய்து போராடினார்களே, இன்றைக்கு அவர்களுக்கான உங்கள் கடமையைச் செய்ய வேண்டமா? இவர்களுக்கு அது பற்றி அக்கறை இல்லை. இவர்கள் கூட்டம் கூடி நூறு கண்டுக்கு நாடு கடந்த தமிழீழம் அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் இருக்கின்ற போராளிகளைப் பற்றி கவலைப்படாமல், இறந்த போராளிகளைப் பற்றி பேசுவதன் காரணம் இதுதான்.

இன்றைக்கும் அழிந்து போன புலிகளை மரணத்திலும் நிம்மதியாக உறங்க விடாமல். பிணத்தை தோண்டி பிழைப்பு நடத்த வேண்டிய தேவை அவர்களுக்கு இருக்கிறது. புலியைக் காட்டி பயமுறுத்தியவர்கள், புலியைக் காட்டி பணம் திரட்டி சொகுசாக வாழப் பழகியவர்கள். இவர்களுக்குத் தேவை இருக்கிறது. பலருடைய அடையாளமே புலி என்பதில் இருந்து வந்தது. புலி என்ற அடையாளத்தை எடுத்து விட்டால், சமூகத்தில் எந்த மதிப்பும் பெற முடியாத கூட்டம் ஒன்று, தன்னைப் புலியோடு அடையாளம் காட்ட வேண்டிய தேவை இருக்கிறது. எனவே புலி இருக்கிறது என்றோ, புலிகளை நாங்கள் உதறித் தள்ள முடியாது என்றோ காரணம் காட்டியாக வேண்டும். இவர்கள் புலியை வைத்துத் தான் அரசியல் நடத்த முடியும்.

அழிந்து போன புலிகளை அங்கீகரிக்க வேண்டும் என்று இவர்கள் குத்தி முறிவது உத்தியோகபூர்வமாக தமிழர்களை மிரட்டிப் பணம் பறிக்க..!

அதை விட, இதுவரை காலமும் புலிகளின் தேசியத்தின் மேல் காதல் கொண்டு வெளியில் மனித உரிமை வாதிகளாகவும் உள்ளே புலித்தேசியப் பக்தர்களாகவும் உலா வந்த closet புலிகள் இருக்கிறார்கள். புலிகள் தேசிய விடுதலைப் போராட்டம் நடத்துகிறார்கள் என்று

## ஒரு சமாந்தர அரசையும், பெரிய இராணுவத்தையும் வான்படையையும் வைத்திருந்த புலிகளால் சாதிக்க முடியாத ஒன்றை உங்களால் எப்படி சாதிக்க முடியும்?

வியாக்கியானம் சொன்ன புத்திஜீவிகள் இருக்கிறார்கள். புலிகளின் தேசிய நீரோட்டத்தில் புதிதாக ஞானஸ்நானம் பெற்ற ஜெகோவாவின் சாட்சிகள் புதிதாக உலா வருகிறார்கள். அவர்களுக்கும் புலியை வைத்துத்தான் அரசியல் நடத்த முடியும்.

எங்களை ஒரு படுகுழிக்குள் தள்ளிய ஒரு கூட்டத்தை நிராகரித்து ஒதுக்குவதில் என்ன தவறு இருக்கிறது என்பது எனக்குப் புரியவில்லை. புலியை வைத்துக் கொண்டு நடத்தப்படும் எந்த அரசியலுக்கும் சர்வதேச அங்கீகாரம் கிடைக்காது. மற்றவனை மடையன் என்று நினைத்து 90 வீத வாக்குகளால் தெரிவு செய்தோம் என்று நாடு கடந்த அரசாங்கத்தையோ, மக்கள் அவையையோ, குளோபல் தமிழ் அமைப்பை தெரிவு செய்தாலும் புலிக் கொடியும் பிரபாகரனின் படமும் இருக்கும் வரைக்கும் எந்த அங்கீகாரமும் கிடைக்கப் போவதில்லை. அழிந்து போன ஒரு இயக்கத்திற்கும் இறந்து போன ஒரு மனிதனுக்கும் அங்கீகாரம் தேட முற்படுவதன் மூலம் வாழுகின்ற ஒரு இனத்திற்கு கிடைக்கின்ற அங்கீகாரத்தை நாங்களே தடுக்கிறோம்.

அங்கே உள்ள மக்கள் யாருமே 'ஐயோ, புலிகள் இருந்தால் உவன் மகிந்தவுக்கு ஒரு பாடம் படிப்பிப்பாங்கள்' என்று அங்கலாய்க்கவில்லை. 'தலைவர் வந்து என்ன செய்யப் போகிறாராம்' என்று தான் கேட்கிறார்கள். அந்த மக்களே புலிகளை முழுமையாக நிராகரித்து மறந்து விட்டார்கள்.

இங்கே யாழ்ப்பாணச் சிந்தனையில் வேலிச்சண்டை நடக்கிறது. புலிகளுக்குள்ளேயே குத்துவெட்டு நடக்கிறது. யார் யாரோடு படுத்தார்? யாருடைய குடும்பம் யாரால் பிரிந்தது? என்பதெல்லாம் மொட்டை நோட்டீஸ்களாக வலம் வருகின்றன.

இந்தப் புலிகளையும் புலித்தனத்தையும் முற்றுமுழுவதாக நிராகரிப்பதன் மூலமே நாங்கள் தீர்வை நோக்கி முன்னோக்கி நகர முடியும். தமிழர்களைப் பொறுத்தவரைக்கும் புலிகள் liability யே அன்றி asset அல்ல என்ற உண்மையை நாங்கள் ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும்.

அடுத்தது ஐந்தாவது, மகிந்த என்ற மனிதன் மீது கொண்டிருக்கும் obsession முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும். எங்களுடைய சிந்தனையும் செயலும் மகிந்த என்ற மனிதனை அவமானப்படுத்துவதில் தான் இருக்கிறது. முன்பு சொன்னது போல, எங்களுடைய அரசியல் நடவடிக்கைகளை மகிந்த தான் தீர்மானித்துக் கொண்டிருக்கிறார்.

நாங்கள் எங்களைப் பார்த்துக் கேட்க வேண்டிய ஒரு கேள்வி உண்டு. எதிர்ப்பு அரசியல் நடத்தி நாங்கள் கண்டது என்ன?

பலருக்கு ரோசம் பொத்துக் கொண்டு வரும். சிங்களவனுக்கு அடிமையாயிருக்கச் சொல்றியோ? அவன் எங்கட பெம்பிளையளைக் கற்பழிக்கிறான். எனக்குத் தெரியும் உங்கள் சிந்தனை கற்பையும் அது எங்கே இருக்கிறது என்பதையும் சுற்றித் தான் இருக்கும் என்பது.

ஒரு சமாந்தர அரசையும், பெரிய இராணுவத்தையும் வான்படையையும் வைத்திருந்த புலிகளால் சாதிக்க முடியாத ஒன்றை உங்களால் எப்படி சாதிக்க முடியும்?

நாங்கள் இன்று செய்து கொண்டிருப்பது எதிர்ப்பு அரசியல் மகிந்த எதிர்ப்பு அரசியல். எதிர்ப்பு அரசியலை நிறுத்த வேண்டும் என்றால், மகிந்தவின் அரசில் சேர்ந்து எங்களின் தன்மானத்தை விற்று விட வேண்டும் என்பதில்லை. அதே நேரம், மகிந்தவின் இந்தியப் பயணத்துக்கு சந்தித்து வாழ்த்திச் சொல்லி விட்டு புலன் பெயர்ந்த தமிழர்களைக் குஷிப்படுத்தும் அறிக்கை விடும் கூட்டமைப்பின் அரசியலை நம்ப முடியுமா? கூட்டமைப்பு நடத்துவதுதான் பக்கா அரசியல். Targeted message என்பது போல, ஒவ்வொரு கூட்டத்தையும் குஷிப்படுத்தும் அரசியலைச் செய்கிறது கூட்டமைப்பு. அரசு நியமித்த விசாரணைக் குழு முன் சாட்சியமளிக்க மாட்டோம் என்று உடனடி அறிக்கை. புலன் பெயர்ந்த கூட்டம் சுய இன்பத்தில் ஆழ்கிறது. கொஞ்சநாளில் ஆரம்ப ஆர்ப்பாட்டம் அடங்கிய பின்னால் காதும் காதும் வைத்தது போல, வெளியில் பெரிதாக அறிக்கை விடாமல் போய் சாட்சியமளிப்பார்கள். தாங்கள் போய் அகதிகளைப் பார்க்க மாட்டார்கள். வேண்டுமென்றே தங்களைத் தடுக்க வேண்டும் என்பதற்காக அனுமதி பெறாமல் போய், அனுமதி கிடைக்காததை வைத்து புலன் பெயர்ந்தவர்களைக் குஷிப்படுத்துவார்கள்.

தங்கள் குடும்பங்களை வெளிநாடுகளில் குடியேற்றி விட்டு, அவ்வப்போது பாராளுமன்றத்திற்கு லீவு போட்டு விட்டு சுற்றுலா செல்வார்கள். இவர்கள் செய்வது அரசியல். எங்களுக்குப் பிடித்தமான அரசியல். நாங்கள் எதுவும் சொல்ல மாட்டோம். காரணம், மகிந்தவை எதிர்த்து அரசியல் செய்கிறார்கள்.

ஆனால் தங்களுக்கு தேவையானவை பெற்றுக் கொண்டதை தவிர, தமிழ் மக்களுக்கு தங்கள் எதிர்ப்பு அரசியலால் இவர்கள் பெற்றுக் கொடுத்தது என்ன?

இங்கே இருக்கிறார்கள். அவன் எங்கட இனத்தை அழிச்சவன். அவனை எப்படி ஆதரிக்கிறது?

ஆதரிக்க வேண்டியதில்லை. காலில் விழ வேண்டியதில்லை. எந்த வித பயனும் இல்லாத எதிர்ப்பு அரசியலை நிறுத்தி விட்டு, எங்கள் மக்களுக்கு பெற்றுக் கொடுக்க முடிந்ததை பெற்று கொடுக்காமல், மகிந்தவுக்கு எதிராக அறிக்கை விடுவது, வேண்டுமானால் இந்த வெளிநாட்டு வெட்டிக்கூட்டத்தை மகிழ்ச்சிக்குள்ளாக்கும். அந்த மக்களுக்கு எதைச் செய்யும்?

இந்த எதிர்ப்பு அரசியல் இன்று அரசு செய்யும் நன்மைகளைக் கூட ஒத்துக் கொள்ள விடுவதில்லை. மகிந்தவுக்கு எந்த பாராட்டும் கிடைக்கக் கூடாது என்பதில் இவர்கள் உறுதியாக இருக்கிறார்கள்.

இன்றைக்கு மகிந்தவை தடுத்து நிறுத்த வேண்டியது எங்கள் கடமை என்று மூர்க்கமாக நிற்கிறீர்கள். சரி, என்ன செய்யப் போகிறீர்கள்? எண்டாலும் நாங்கள் டக்ளஸ், கருணா மாதிரி துரோகம் செய்யேலைத் தானே என்று உங்களை நீங்களே திருப்திப்படுத்திக் கொள்வதைத் தவிர உங்களால் என்ன தான் செய்ய முடியும்?

**மகிந்த மீதான obsession காரணமாக, எங்கள் உண்மையான நோக்கத்தை மறந்து விடாதீர்கள் என்று. எங்களுடைய இலக்கு நாளையது அல்ல. அடுத்த நாற்பதாண்டுகளுக்கானதாக இருக்கட்டும். எங்களுடைய செயற்பாடுகளை அந்த இலக்கை நோக்கியதாக இருக்கட்டும்.**

குறைந்த பட்சம் நீங்கள் இன்று துரோகி என்கின்ற கே.பி செய்வதைக் கூட உங்களால் அந்த மக்களுக்குச் செய்ய முடியாது. அறிக்கை விடுவதற்கு நீங்கள் எல்லாம் தேவையில்லை. கம்பியூட்டரும் இன்டர்நெட் தொடர்பு இருக்கும் எல்லாரும் இப்போது அறிக்கை விடலாம்.

இதை எல்லாம் சொல்லும் போது என்னையும் மகிந்தவின் ஆள் என்று முத்திரை குத்த நீங்கள் அவசரப்படக் கூடும். நான் சொல்வதற்கான காரணங்கள் வேறு.

இன்று மகிந்தவின் சர்வாதிகாரப் போக்கு நிறுத்தப்பட வேண்டும் என்று முனைப்பாக நிற்பவர்களுக்கு நான் சொல்ல விரும்புவது இது தான்.

கடந்த நாற்பது வருட கால அரசியலில் இருக்கிறது ஆதாரங்கள்.

70ல் சிறிமாவோ இலவச இரண்டு கொத்து அரிசியோடு பதவிக்கு வருகிறார். 71 ஜே.வி.பி கிளர்ச்சியில் இளைஞர்கள் கொல்லப்பகிறார்கள். அவசரகாலச் சட்டம் அமுலுக்கு வருகிறது. புதிய அரசியலமைப்புச் சட்டமும் தரப்படுத்தலும் தமிழர்களை இரண்டாம் தரப் பிரஜைகளாக்குகிறது என்று போர்க்கொடி தூக்குகிறோம். தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுகிறார்கள். அரை றாத்தல் பாணுக்கு அதிகாலை நான்கு மணிக்கே போய் காவல் இருக்கிறோம். இந்த சர்வாதிகாரத்திற்கு முடிவே வராதா என்று ஏங்கினோம். வந்தது. அதிகாரத்தை வைத்து ஆட்டம் போட்ட சிறிமாவோ தன் குடியுரிமைகள் பறிக்கப்பட்டு அரசியல் உரிமைகள் பறிக்கப்பட்டு, அதற்காக அமிர்தலிங்கம் குரல் கொடுக்க வேண்டிய பரிதாப

நிலைக்கு வருகிறார்.

77ல் ஜே.ஆர் ஆட்சிக்கு வருகிறார், மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன். தமிழ் மக்களின் கோரிக்கைகள் பயங்கர வாதமாகச் சித்தரிக்கப்படுகிறது. தமிழ் இளைஞர்கள் கொல்லப்படுகிறார்கள். எம். பிக்களின் ராஜினாமாக் கடிதங்களை வாங்கி வைத்துக் கொண்டு ஜனநாயக உரிமைகள் பறிக்கப்பட்டு சர்வாதிகாரம் நடக்கிறது. இதற்கு ஒரு முடிவே வராதா என்று எதிர்பார்த்தோம். இதே ஜே.ஆர் ஒப்பந்தத்திற்கு கிடைத்த எதிர்ப்புக் காரணமாக, பிரேமதாசவின் எதிர்ப்புடன், பாராளுமன்றத்தில் வீசப்பட்ட கைக்குண்டுடன் அதிகாரத்தை இழந்து கடைசியில் பல்லில்லாத கிழட்டு நரியாக கவனிப்பாரற்றுப் போகிறார்.

பிரேமதாசா வருகிறார். ஜே. வி.பி பயங்கரவாதம் தலை தூக்குகிறது. அரசியல் காட்டுமிராண்டித்தனமாக மாறுகிறது. அரசியல் எதிரிகள் வன்மையான முறையில் ஒழிக்கப்படுகிறார்கள். அவருடைய சர்வாதிகாரமும் புலிகளால் முடிவுக்கு வருகிறது.

சந்திரிகா வருகிறார்... 94ல். இரும்புப் பெண்மணி. கட்சிக்குள் யாருமே வாய் திறக்க முடியாத எதேச்சாதிகாரம். கடைசியில் என்ன நடந்தது? மகிந்தவினால் அவமானப்படுத்தப்பட்டு ஒதுக்கப்படுகிறார்.

ஏன்? பிரபாகரனுக்கு நடந்தது என்ன? பிரபாகரனின் அக்கிரமமும் அட்டுழியமும் இவ்வளவு வேகமாக முடியும் என்று யார் கனவு கண்டார்கள்? முடியும் என்பதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது. இப்படி முடியும் என்று எதிர்பார்க்கவில்லை.

புலிகளின் அநியாயத்தைக் கண்டு பொறுக்க முடியாமல் ஒரு நண்பர் கேட்டார்... கடவுள் கூட இதைப் பார்த்துக் கொண்டு தானே இருக்கிறார். நான் சொன்னேன்... அண்ணை, மாற்றம் வரும். ஆனால் நாங்கள் எதிர்பார்க்காத விதத்தில் வரும் என்று.

எல்லாச் சர்வாதிகாரிகளின் முடிவும் இதுதான். மகிந்த இரண்டு தரத்திற்கு மேல் பதவிக்கு வரக் கூடியதாக அரசியலமைப்பை மாற்றி விட்டார், மகனை முன்னுக்கு கொண்டு வருகிறார். உலகம் முடியப் போகிறது என்று எல்லாரும் பூச்சாண்டி காட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதிகாரத்தில் நீண்ட காலம் இருப்பவர்களுக்கு அகந்தை வரும், அந்த அகந்தை அவர்களின் அழிவுக்கு வழி வகுக்கும் என்பது தான் உலகம் முழுவதும் இருந்த சர்வாதிகாரிகளின் கதை. உயிரைக் காத்துக் கொள்ள தப்பியோடியவர்களும் உயிரை இழந்தவர்களும் எனத் தான் சர்வாதிகாரிகளின் முடிவுகள் காலம் காலமாய் நடந்து வருகின்றன. மகிந்தவின் முடிவும் அவ்வாறானது தான். புலிகளின் வெற்றியைக் காட்டி காலாகாலம் பிழைப்பு நடத்த முடியாது. ஊழலும் பொருளாதார நெருக்கடியும் வரும் போது அடிக்கும் அலையில் மகிந்த அடிபட்டுப் போவது நிச்சயமானது. இயற்கை இவ்வாறானது தான். இப்போது மகிந்தவுக்கு எதிரான தலைவர்கள் இல்லாமல் இருக்கலாம். காலத்தின் நியதி யாரையோ எவரையோ கொண்டு வந்து சேர்க்கும்.

தேசியத் தலைவரை சூரியதேவனாக வைத்து கட்டிய



மனக்கோட்டை உதிர்ந்து கொட்டுண்ட போது, எப்படி செய்வதறியாது திகைத்து நின்றோமோ, அதே போல மகிந்தவின் சாம்ராஜ்யம் தகர்ந்து போகும் போதும் செய்வது தெரியாமல் திணறிக் கொண்டிருக்கப் போகிறோம்.

இதனால் தான் சொல்கிறேன், மகிந்த மீதான *obsession* காரணமாக, எங்கள் உண்மையான நோக்கத்தை மறந்து விடாதீர்கள் என்று. எங்களுடைய இலக்கு நாளையது அல்ல. அடுத்த நாற்பதாண்டுகளுக்கானதாக இருக்கட்டும். எங்களுடைய செயற்பாடுகள் அந்த இலக்கை நோக்கியதாக இருக்கட்டும்.

எமது இனத்தின் அந்த விடுதலை உணர்வு சிதைந்து போகாமல், இருப்பதற்கான திட்டத்தை, அது நாற்பதாண்டுகளாக இருந்தால் என்ன, இன்றே திட்டமிட ஆரம்பிக்க வேண்டும். எங்களுடைய இலக்கிலிருந்து இந்த மகிந்த எதிர்ப்பு எங்களை திசை திருப்பாமல் இருக்க வேண்டும். இதற்காகத் சொல்கிறேன் இந்த மகிந்த எதிர்ப்பு நிறுத்தப்பட வேண்டும் என்று.

அடுத்து ஆறாவது, மிகவும் முக்கியமானது, எங்கள் இன்றைய நிலைக்கு காரணம் என்ன என்பதைப் பற்றி நாங்கள் மிகவும் ஆழமாக சிந்திக்க வேண்டும். அதைக் காணாமல் எங்கள் அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி சிந்திப்பதிலோ, கற்பனை செய்வதிலோ அர்த்தமில்லை.

புலிகள் தமிழ் மக்களுக்கும் போராட்டத்துக்கும் இழைத்த அநீதியின் கனத்தைப் புரிந்து கொள்ளாமல், எதுவுமே நடக்காதது போல பாசாங்கு செய்து கொண்டு இன்று முதல் அகிம்சை என்று கதை விட முடியாது. தன்னைப் படிச்ச யாழ்ப்பாணம் என்று கூறுவதில் பெருமை கொண்ட ஒரு சமூகத்தில்

எட்டாம் வகுப்புத் தாண்டாத ஒருவர் தேசியத்தலைவர், சூரியத்தேவன் என்று எழுச்சி கொள்ள எப்படி முடிந்தது என்று காரணத்தைப் புரிந்து கொள்ளாமல் இன்னொரு தலைமையைத் தேடி நாங்கள் போக முடியாது. எங்கள் மக்களின் இன்றைய கையறு நிலைக்கு யார் பொறுப்பு என்பதை புரிந்து கொள்ளாமல் இன்னொரு தடவை இன்னொருவர் கையில் எங்கள் தலைமையை ஒப்படைக்க முடியாது. தன் நடவடிக்கைக்கு பொறுப்பேற்காமல், தன்னை அவதாரமாக நினைத்த ஒரு மனிதனின் கையில் ஆயுதத்தை விட்டதனால் அடிமையான நாங்கள். இன்னொரு தடவை ஆயுதத்திற்கு அடிமையாகி மண்டியிட முடியாது.

தேசியத் தலைவரை நம்பி கட்டிய ஆகாயக் கோட்டை எப்படி கணநேரத்திற்குள் தவிடு பொடியானது? சரியான அத்திவாரமில்லாததால் தான் என்ற உண்மையை நாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். இராணுவ ரீதியாக வளர்ந்த அளவுக்கு அரசியல் அத்திவாரத்தை அமைக்க எங்களால் ஏன் முடியாமல் போனது என்பது விசாரணை செய்யப்பட வேண்டும்.

எங்களுடைய எதிரி இன்றைக்கு மகிந்த இல்லை. நான் உதாரணம் காட்டினேன். சிறிமா, ஜே.ஆர், பிரேமதாசா, சந்திரிகா... இவர்கள் எல்லாம் எங்கே? அவர்கள் எல்லாம் அழிந்து போனார்கள். ஓரங்கட்டப்பட்டார்கள்?

எங்கள் அழிக்க முற்பட்ட எதிரிகள் எல்லாம் அழிந்து போகிறார்கள்.

நாங்கள் எதற்காக அழிந்து போனோம்?

ஏனென்றால் எங்களுக்கு நாங்கள் தான் எதிரிகள். கூட இருந்தே கொல்லும் வியாதி... எங்கள் யாழ்ப்பாணியம்.

அதுதான் எங்கள் எதிரி, மகிந்த அல்ல. இத்தனை அழிவுகளுக்குப் பின்னால் அழிய மறுத்துக் கொண்டிருக்கிறதே, அந்த யாழ்ப்பாணியம் தான் எங்கள் எதிரி.

இன்றும் தன் வக்கிரச் சாதியச் சிந்தனையை கைவிட மறுத்து ஆதிக்கம் காட்டுகிறது. அகம்பாவம் தலைக்கேறி, எவரையும் தேவைக்குப் பயன்படுத்திய பின்னால் தூக்கி எறிந்து விடலாம் என்ற எண்ணத்தை தூர எறிய மறுக்கிறது. பிற்போக்குத்தனத்துடன் தன்னைப் புத்திசாலி என்றும் மற்றவர்களை முட்டாள்கள் என்றும் கனவு கண்டுகொண்டிருக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக, எனக்கேன் தேவையில்லாத பிரச்சனை என்று ஊரோடு ஒத்தோடி அநீதிக்கும் கொடுங்கோலர்களுக்கும் தலைவணங்கிக் கொண்டிருக்கிறது.



இந்த யாழ்ப்பாணியம் அழிக்கப்பட வேண்டும். எங்களுடைய அழிவுக்கான காரணங்களை எங்களுக்குள்ளேயே தான் தேட வேண்டும். மற்றவர்களைக் குற்றம் சாட்டுவதன் மூலம் அல்ல.

இந்த ஆய்வுகள் சமூக மட்டத்திலும் பல்கலைக்கழக மட்டங்களிலும் மேற்கொள்ளப்பட வேண்டும். ஊடகங்களில் விவாதங்களாக்கப்பட வேண்டும். சாதாரண மக்கள் மத்தியில் இந்தக் கருத்துக்கள் கொண்டு செல்லப்பட வேண்டும்.

பிரபாகரன் போன்றவர்கள் ஒரு வெற்றிடத்திலிருந்து உருவாக முடியாது. எமது சமூகத்தின் பிம்பங்கள் தான் பிரபாகரன் போன்றவர்கள். ஒரு தலைமை ஒரு இனத்தை பிரநிதித்துவப் படுத்துகிறது என்றால், அந்தத் தலைமை அந்த இனத்தின் இயல்பைப் பிரதிபலிக்கிறது. பிரபாகரன் போன்றவர்கள் எமது இனத்தின் வக்கிர உணர்வின் வெளிப்பாடே. இந்த அழிவிற்கான பொறுப்பை எங்கள் சமூகம் முழுவதுமே பொறுப்பேற்க வேண்டும்.

அந்தப் பொறுப்பை ஏற்பதன் மூலம் தான் நாங்கள் இன்னொரு சரியான பாதையைத் தேர்ந்தெடுக்க முடியும்.

இனி நாங்கள் சுயவிமர்சனம் செய்து என்னத்தை செய்யிறது? அதுக்கிடையிலை சிங்களவன் குடியேற்றங்களைக் கொண்டு வந்து, விகாரையளைக் கட்டி எங்கட சனத்தை சிறுபான்மையாக்கிப் போடுவான்... எங்கட பொம்பிளையள் எல்லாரையும்

கற்பழிச்சுப் போடுவான்... சொல்வது கேட்கிறது!

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் சோவியத் பல்வேறு குடியரசுகளை ஆக்கிரமிக்கிறது. ரஷ்ய மொழியை திணிக்கிறது. ரஷ்யர்களைக் குடியேற்றுகிறது. நாற்பது ஆண்டுகளின் பின்னர் சோவியத் சிதறிப் போகும் போது அந்த குடியரசுகள் தங்கள் தலைவிதியை தாங்களே நிர்ணயிக்கும் உரிமையைப் பெற்றுக் கொள்கிறார்கள்.

நாற்பது வருடங்கள் என்ன? ஆயிரம் வருடங்கள் அலைந்த யூதர்கள் தங்கள் நாட்டை அமைக்கவில்லையா?

இன்றைக்கு சிங்களக் குடியேற்றம் பற்றி பொங்கிக் குமுறுகிறோம். என்னுடைய அண்ணனோடு ஒரு சிங்களவர் முன்பு வேலை செய்தார். பண்டா நிலமே என்பவர். நாங்கள் பண்டா அண்ணை என்று அழைப்போம். தாய், தந்தையர் எல்லோரும் அப்போது நாவலர் வீதியில் வசித்தார்கள். ஈழநாடு பத்திரிகையில் போயா நாட்களில் வருகின்ற பௌத்த நற்சிந்தனை எழுதியது அவர் தான். அவரது வீட்டுக்குச் சென்றிருக்கிறேன். பெற்றோர்கள் தமிழில் பேசினால் வித்தியாசமே தெரியாது. எங்கள் சகோதரராகத் தான் நாங்கள் அவரைக் கருதி வந்தோம். இன்று கூட என் அண்ணனுடன் அவர் தொடர்பில் இருக்கிறார். இப்படியாக யாழ்ப்பாணத்தில் பல சிங்களவர்கள் அன்று இருந்தார்கள். குடும்பங்களாக... சிங்களவர்களும் கொழும்பில் சிங்கள மூலத்தில் படித்து கலவரங்களில் அடிபட்டு படிப்பைத் தொடர்ந்தவர்களும் என சிங்கள மகாவித்தியாலயம் ஒன்றை உருவாக்கும் அளவுக்கு நிறையப்பேர் யாழ்ப்பாணத்தில் இருந்தார்கள். தமிழ் வெறி தலைக்கேறும் வரைக்கும் சிட்டி பேக்கறியும், பாண் கார மாத்தயாக்களும் எங்களுக்குப் பிரச்சனையாகவே இருக்கவில்லை.

இன்று 150 குடும்பங்கள் வந்தது பற்றி... தமிழ் மக்களின் நிலங்களில் சிங்கள ஆக்கிரமிப்பு பற்றி பொங்கி எழுகிறோம். 150 சிங்களக் குடும்பங்கள் எனக்குப் பிரச்சனை இல்லை. இன்று ஒரு தலைமுறையே வெளிநாடு போகும் கனவோடு அங்கே இருக்கிறது. அபாயகரமான பயணங்களில் ஏற்பட்ட உயிரிழப்புகளைத் தெரிந்து கொண்டும் உயிரைப் பணயம் வைத்து அவுஸ்திரேலியாவுக்கும் கனடாவுக்கும் போக லட்சக்கணக்கில் பணம் கொடுத்து வரத் தயாராக பலர் இருக்கிறார்கள். ஐரோப்பிய நாடுகளுக்குள் களவாக நுழைவதற்கு பொட்டுப் பிரிப்பதற்கு பலர் தயாராக இருக்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் வந்து குடியேறும் சிங்களவர்கள் அல்ல, வெளியேற காத்திருக்கும் தமிழர்களின் எண்ணிக்கை தான் பயத்தை தருகிறது. யாழ்ப்பாணத்தில் தமிழர்களை சிறுபான்மை யாக்குவதற்கு சிங்களவர்களைக் குடியேற்றத் தேவையில்லை. கதவைத் திறந்து விட்டாலே போதும். ஈ, காக்கை கூட மிச்சம் இருக்காது.

இந்த வெளியேற்றத்தின் ஆபத்தை, அதன் கனத்தைப் பற்றி யாருமே இன்னமும் பேசுவதற்கு தயாராக இல்லை. கேட்டால் 'ஓம், ஓம். அதை நிப்பாட்ட வேணும். சனம் வெளியில போனால் சிங்களவன் குடியேறியிடுவான்' என்று சொல்வார்கள். 'எதுக்கும் என்ரை குடும்பம் இங்க வரட்டும், அதுக்குப் பிறகு அதை நிப்பாட்டுவம்' என்பது தான் எங்கள் யாழ்ப்பாணியின் நாட்டுப்பற்று. யாழ்ப்பாணத்தில் தமிழன் சிறுபான்மையாகப் போகிறான், சிங்களக் குடியேற்றத்தால் அல்ல. தமிழனின் வெளியேற்றத்தால்.

சரி, அரசு சிங்களவர்களைக் குடியேற்றுகிறது. அகதிகளான தமிழர்களைக் குடியேற்ற நாங்கள் என்ன செய்தோம்? கேட்டால், அது அரசாங்கத்தின் வேலை, நாங்கள் ஏன் செய்ய வேண்டும் என்கிறீர்கள்.

சரி, தமிழ்நாட்டில் உள்ள அகதிகளை தங்கள் சொந்த மண்ணுக்கு திரும்பிப் போக என்ன செய்தீர்கள்? இன்றைக்கு இப்படி எகிறிப் பாயும் வை.கோவும் சீமானும் போய் அவர்களுக்கு ஏதாவது செய்தார்களா?

கே.பி 500 ஏக்கர் வாங்கி போராளிகளுக்கு மறுவாழ்வு கொடுக்க முயற்சிப்பது உங்களுக்குத் துரோகம். உங்களுடைய பிரச்சனை அந்த போராளிகளுக்கு மறுவாழ்வு கிடைப்பது இல்லை. மகிந்தவுக்கு பெயர் கிடைத்து விடுமே என்ற பயம் மட்டும் தான்.

இந்த காரணங்களை அறிந்து கொள்ளாமல் மீண்டும் போராடுவோம் என்று கனவு காணாதீர்கள். பட்டுத்துகிலுக்கு ஆசைப்பட்டு கோவணத்தைப் பறிகொடுத்து விட்டு நிற்கிறோம். முள்ளிவாய்க்கால் முடிவல்ல, தொடக்கம் என்று பயறுத்தாதீர்கள். நூறு கண்டுக்கு மக்களவை, நூறு கண்டுக்கு நாடு கடந்த ஈழம்... அதுவும் தற்போதைக்கு வேண்டாம்.

27 வருடங்கள் புலிகள் நடத்திய பேராட்டத்தின் அழிவை ஒரு வருடத்திற்குள் ரனேடி செய்ய முடியும் என்று கற்பனை பண்ணாதீர்கள். கடைசியில் காலடியில் கிடந்த தயிர்க்குடத்தை உடைத்த பொரிமாத் தோண்டியின் நிலை தான் எங்களுக்கும் வரும்.

உங்களுக்குத் தெரிய வேண்டும், *An army moves on its stomach*. அதாவது உணவு இல்லாமல் யுத்தம் செய்ய முடியாது. அந்த மக்கள் தங்கள் நாளாந்த நிலைக்குத் திரும்பும் வரைக்கும், பொருளாதார ரீதியாக பலம் பெறும் வரைக்கும் நாங்கள்

போராட்டம் பற்றிக் கதைக்கவே முடியாது.

இல்லை, காத்திருந்து காலத்தைப் போக்க முடியாது என்றால், வணங்காமண் 2 எப்போது புறப்படுகிறது, உங்களுடைய பிள்ளைகள் எத்தனை பேர் களப்பலிக்குத் தயார் என்பதை நீங்கள் சொல்ல வேண்டும்.

பெரியோர்களே,

33 வருடப் போராட்டப் பயணத்தின் பின் நாங்கள் இன்று ஒரு இடத்தில் கொண்டு வந்து தள்ளப்பட்டிருக்கிறோம். எங்கள் பயணம் ஆரம்பித்த போது, எங்களுடைய இலக்கு இதுவாக இருக்கவில்லை. ஈழம் என்ற மாயமானைத் தொடர்ந்து வந்ததால் எங்கள் வழியைத் தவற விட்டிருக்கிறோம். நாங்கள் ஏன் இங்கே வந்திருக்கிறோம் என்பதற்கான காரணத்தை ஆராயாமல், தொடர்ந்தும் இன்னொரு மாயமானை தொடர்ந்து போவது இன்னமும் எங்கள் அழிவுக்கே வழி வகுக்கும்.

ஆர்ஜன்டீனா நீண்ட காலம் இராணுவ ஆட்சியின் கீழ் இருந்தது. இராணுவ ஆட்சிக் காலத்தில் முப்பதாயிரம் பேர் வரை காணாமல் போயிருந்தார்கள். கைது செய்யப்பட்டவர்கள் விமானங்களிலிருந்து உயிரோடு கடலில் தள்ளப்பட்டது, அவர்களின் குழந்தைகள் பிரிக்கப்பட்டு தாங்கள் யாரென்று தெரியாமல் வேறிடங்களில் வளர்க்கப்பட்டது என்று மனித உரிமைகள் கடுமையாக மீறப்பட்டு, நீண்ட காலத்தின் பின்னர் ஜனநாயகம் மீண்டும் அங்கு வேரூன்றியிருக்கிறது. இந்த அடக்குமுறைகள் பற்றிய திரைப்படம் ஒன்றை நீண்ட நாட்களுக்கு முன் பார்த்தேன். ஒரு நாடக இயக்குனர் இந்த இராணுவ ஆட்சிக்காலத்தில் நடந்த மனித உரிமை மீறல்கள் பற்றி ஒரு நாடகத்தை இயக்குகிறார். அப்போது, நாங்கள் திரும்பவும் பழையதையே கதைத்துக் கொண்டிருக்க வேண்டுமா என்ற கேள்வி எழுகிறது.

அப்போது அந்த இயக்குனர் ஸ்பானிய தத்துவவியலாளரான ஜோர்ஜ் சந்தாயனாவின் கூற்று ஒன்றை மேற்கோள் காட்டுகிறார். *Those who don't learn from their past are condemned to repeat their mistakes.* தங்கள் கடந்த காலத்திலிருந்து கற்றுக் கொள்ளாதவர்கள் மீண்டும் அதே தவறுகளைச் செய்யுமாறு தீர்ப்பிடப்படுகிறார்கள்.

நாங்களும் எங்கள் கடந்த காலத்தில் விட்ட தவறுகளை ஆராய்ந்து அதற்கான காரணங்களையும் அதிலிருந்து திருந்துவதற்கான வழிகளையும் கற்றுக் கொள்ளாவிட்டால் மீண்டும் அதே தவறுகளையே இழைக்கப் போகிறோம்.

நண்பர்களே,

நாங்கள் போக வேண்டிய பயணம் நெடுந்தூரமானது. இதைச் சொன்னால், *cliche* என்று ஆங்கிலத்தில் சொல்லப்படுகின்ற, உப்புச் சப்பில்லாத வார்த்தை ஜாலம் என்று நினைப்பீர்கள். சீனப்பழமொழி ஒன்றுண்டு. ஆயிரம் மைல்களுக்கான பயணம் முதலாவது அடியிலேயே தொடங்குகிறது. *A journey of thousand miles starts with the first step.*

அந்த முதலாவது அடி எதுவாக இருக்க வேண்டும்?

புலிகளின் கட்டுப்பாட்டில் வன்னி இருந்த காலத்தில் வன்னியில் குருவானவராகப் பணியாற்றிய அருட்தந்தை ஒருவர் மேல் நாடு ஒன்றில் மேற்படிப்பை முடித்து மீண்டும் இலங்கை செல்வதற்கு முன்னால் என்னை வந்து சந்தித்திருந்தார். மடுக் கோவில் மீது புலிகள் ஷெல் அடித்து விட்டு இராணுவத்தைக் குற்றம் சாட்டியது முதல் பல்வேறு தகவல்களைப் பகிர்ந்து கொண்டார். அப்போது, 'இப்பிடி எங்கட சனத்துக்கு அநியாயம் செய்திருக்கிறாங்களே?' என்று நான் சொன்ன போது அவர் சொன்னார், அநியாயம் இல்லை, அக்கிரமம் என்று.

கடைசியாகக் கேட்டார், 'நான் திரும்ப வன்னிக்கு போகிறேன். அரசியல் ரீதியாக நாங்கள் என்ன செய்யலாம்?'. நான் சொன்னேன், பாதர், அரசியல் ரீதியாக நீங்கள் ஒன்றும் செய்ய வேண்டாம். ஏற்கனவே ஒவ்வொருவரும் வந்து வழி காட்டப் போய் தான் நாங்கள் இந்த நிலைமையில் இருக்கிறோம். தங்கள் வழியை அந்த மக்கள் தாங்களே தீர்மானிக்க வேண்டும். அதற்கான அடிப்படை விடயங்களை அவர்களுக்கு நாங்கள் கற்றுக் கொடுத்தால் போதும்... அதாவது மற்றவர்களின் கருத்துரிமையை மதிக்கும் பண்பை அவர்களுக்கு நாங்கள் சொல்லிக் கொடுக்க வேண்டும். அதுதான் நாங்கள் செய்ய வேண்டிய முதல் கடமை என்று.

சும்மா உவங்கள் பொய் சொல்றாங்கள் என்பதை விடுத்து, அவங்கள் என்ன சொல்றாங்கள் எண்டதையும் கேட்பம் என்னும் அளவுக்கு எங்கள் சிந்தனை விரிவடைய வேண்டும். உண்மை கசக்கும், மருந்தும் கூடத்தான் கசக்கிறது. நோய் குணமாக வேண்டும் என்றால் கசப்பான மருந்தை விழுங்கித்தான் ஆக வேண்டும்.

நண்பர்களே, எங்கள் நீண்ட பயணத்தின் முதல் அடியும், அவ்வாறாக, மற்றவர்களின் கருத்துக்களையும் அந்தக் கருத்தைக் கொண்டிருப்பதற்கான அவர்களின் உரிமையையும் மதிக்கும் பண்பைக் கடைப்பிடிப்பதில் ஆரம்பிக்கட்டும்.